


# நாட்டியக்காரி

11891

24015

MADRAS

(1945)

943

# நாட்டியக்காரி

ஸ்ரீ. கி.வா. ஜகந்நாத ஐயர் அவர்களுக்கு
ஆசிரியன் அன்பளிப்பு
தி. நா. சுப்பிரமணியன்

7

எழுதியவர் :
தி. நா. சுப்பிரமணியன்

சூடாமணிப் பிரசுராலயம்
கோபாலபுரம்
கதீட்ரல் போஸ்டு : சென்னை

முதற் பதிப்பு : ஏப்ரல் 1945
உரிமை பதிவு செய்யப் பெற்றது

விலை ரூ. 1-0-0

அச்சிட்டோர்:
சக்தி பிரஸ் லிமிடெட்
(சாந்தி பிரஸ்)
ராயப்பேட்டை :: சென்னை

# 1. அரங்கேற்றம்

அவன் மனசு முழுதும் அவளது நாட்டியத்திலேயே லயித்திருந்தது. அவள் இவ்வளவுதூரம் உள்ளத்தைக் கவரும்படியாக அபிநயம் பிடிப்பாள் என்பதை அவன் ஆரம்பத்தில் எதிர்பார்க்கவில்லை. அவள் ஒரு கற்றுக்குட்டி; ஏதோ ஓர் அளவு நடனக் கலையில் பயிற்சி பெற்றிருக்கிறாள். தொழில் முறைப்படி அவளை அரங்கேற்றப்போகிறார்கள். தான் வகித்துவரும் உன்னதமான பதவியை உத்தேசித்தே அவர்கள் தன்னை அழைத்திருக்கிறார்கள் என்றே அவன் நினைத்திருந்தான்.

மும்முடி நாயக்கன் அந்நாட்டு மக்களின் நன்மையைப் பாதுகாக்கும் அதிபதி; சிற்றரசன். அதனோடு அவன் கலையபிவிருத்தியிலே பெரிதும் நாட்டம் கொண்டவன். அதனால் அந்த நோக்கத்துடன் நடக்கும் எந்தவிதமான முயற்சிக்கும் அவன் ஆதரவு அளித்துவந்தான்.

தனக்குக் கிடைத்த அழைப்புக்கு இணங்க அவன் மற்றவர்களைப் போலவே அரங்கேற்றத்துக்கு விஜயம் செய்தான். சம்பிரதாயத்தை யொட்டி, அவன் அந்தப் பெண்ணுடைய நடனத்தைப் புகழ்ந்து உற்சாக மூட்டவேண்டும்; அவளுடைய கலாஞானமும் புகழும் மேன்மேலும் பெருக வேண்டுமென்று ஆசீர்வதிக்கவேண்டும். இவ்விதம் உபசாரமாக ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசிவிட்டு வருவது என்றே அவன் அங்கே போயிருந்தான்.

ஆனால் அங்கே நடந்தது வேறு. அவள் சிறு பெண்தான்; வயசு பதினைந்து பதினாறுக்கு மேல் இராது. ஆனால் அவள் நடனமோ வியக்கத்தக்கதாக இருந்தது. அந்தக் கலையிலே ஆழ்ந்த அறிவையும் பூரண அனுபவத்தையும் பெற்றிருந்தாள். அவைகளுக்கேற்ற பயிற்சியையும் லாகவத்தையும் அடைந்திருந்தாள். சிருங்காரம், சோகம் முதலிய ரஸபாவங்களை அவள் அபிநயம் பிடித்தபோது, வெறும் பயிற்சியால்மட்டும் சாதகத்தைப் பெற்று அந்த நிலையை அடைந்தவளாக அவள் காணவில்லை. வாழ்க்கைக் கடலிலே நீந்தித் திளைத்து உலகானுபவம் பெற்றவளேபோல உணர்ச்சிப் பெருக்கு எடுக்கும் தன் உள்ளத்தைத் திறந்துகாட்டி நடனமாடினாள் அவள்.

அவன் கவனத்தை இழுத்தது அவள் கலைத் திறன்மட்டுமன்று. வசீகரத் தோற்றம் வாய்ந்த ரோஹிணியின் சௌந்தர்யமும் கூடத்தான்.

ரோஹிணியின் தாய் தாசி லக்ஷ்மியை அவன் நீண்டநாளாக அறிவான். அவன் தந்தையார் காலத்திலிருந்தே லக்ஷ்மிக்கு ராஜ

கரத்தில் ஓரளவு பழக்கம் உண்டு. அவளும் நாட்டியக் கலையிலே பெயர் பெற்றவளே. மும்முடி நாய்க்கன் தன் சிறுவயசிலிருந்தே அவளது நடனத்தைக் கண்டு களித்திருக்கிறான்.

அந்தக் காலங்களில் எல்லாம் ரோஹிணி பச்சிளங் குழந்தை. அதனால் அவன் அந்தப் பெண்ணைக் கவனித்துப் பார்த்ததில்லை. தவிர, சென்ற ஏழெட்டு வருஷங்களாக அவள் படிப்பிலும் பயிற்சியிலும் ஈடுபட்டிருந்தபடியால் பிறர் கண்ணில் படுவதற்கே பிரமேயம் இல்லாமல் போய்விட்டது.

பருவத்துக்கேற்ற வளர்ச்சி பெற்றிருந்த ரோஹிணி மிக்க எழிலுடன் விளங்கினாள். அகன்ற நெற்றி, எடுப்பான மூக்கு, பரந்த விழி, வளைந்த புருவம், சின்னஞ் சிறிய வாய், பூவிதழ் போன்ற உதடு, எப்போதும் புன்சிரிப்புத் தவழும் முகம்; இவைகளைக் கண்டோர் எவரும் அவளது மையலில் சிக்காமல் தப்ப மாட்டார். அரசனும் அவளைக் கண்டது முதல் தன் மனநிலையை இழந்து நின்றது ஆச்சரியமன்று.

அவளுடைய உடல் வனப்புக்கும் கலாஞானத்துக்கும் ஏற்பவே அமைந்திருந்தது குரலின் இனிமையும். அதிலே ஓர் அலாதியான வசீகரம் இருந்தது. அவள் அவ்வப்பொழுது சாகித்தியத்தையும் இசைத்துக்கொண்டே அபிநயம் பிடித்துவந்தாள். அந்தக் காலங்களிலே குழல் முதலிய பக்கமேளங்கள் மெல்லென அடங்கி ஒலித்தன. அவள் குரலும் கணீர் என்று நல்ல எடுப்பாகவும் காதுக்கு இனிமையாகவும் இருந்தது. ஆடல், பாடல், அழகென்னும் மூன்றும் அமைந்த அவள் வெளியிட்ட ஒவ்வோர் உணர்ச்சியையும் தானே அனுபவிக்கும் நிலைக்கு வந்துவிட்டான் மும்முடி நாய்க்கன்.

தன்னை மறந்து உட்கார்ந்திருந்த அவன் அரங்கேற்றம் முடிவடைந்ததையும் உணரவில்லை. வாத்தியங்களின் ஒலி திடீரென்று நில்லாமல் மெதுவாக அடங்கின. சபையோர் யாவரும் சப்தமின்றி மேலே நடக்கவேண்டியதை எதிர்பார்த்து அரசனையே நோக்கி நின்றனர்.

ரோஹிணி மெதுவாக அன்னநடைபோட்டு அரசன் திருமுன்சென்றாள். அவனை வணங்கி எழுந்து தலை குனிந்து ஒதுங்கி நின்றுகொண்டாள். அவள் தாய் லக்ஷ்மியும் உடன் வந்திருந்தாள்.

மும்முடி திடுக்கிட்டுக் கனவு உலகத்தினின்றும் கீழே இறங்கினான். அவன் மனசு க்ஷணநேரம் அலைகொண்டு திகைத்தது. எனினும் அதிக நேரம் இல்லை. அவன் சட்டென்று தன் இருக்கையை விட்டு எழுந்தான். தன் கழுத்தில் அணிந்திருந்த முத்துமாலை ஒன்றை எடுத்து ரோஹிணிக்குச் சம்மானமாக அளித்தான்.

"லக்ஷ்மி, உன் குமாரியின் நடனத்தைக் கண்டு நாம் உள்ளம் பூரித்தோம். இது வெறும் உபசார வார்த்தையன்று. முக்காலும் உண்மை......இந்நாட்டிலே நாட்டியக்கலையில் கடைத்தேறியவள் நீ ஒருத்தியே என்று இதுவரையில் எண்ணியிருந்தோம்.

இதுகாறும் நீ வகித்துவந்த முதன்மை ஸ்தானத்தை இப்போது உன் குமாரி ரோஹிணி கைப்பற்றிக்கொண்டாள்.''

மேலே அவனுக்கு வார்த்தை ஓடவில்லை. அவளைப் புகழ்ந்து என்னவெல்லாமோ சொல்லவேண்டும் என்று அவன் மனத்திலே எண்ணியிருந்தான். உணர்ச்சிப்பெருக்கு அதற்கு இடங்கொடுக்கவில்லை. எப்படியோ சமாளித்துக் கடைசியாக அவன் தன் விருப்பத்தையும் தெரிவித்தான் :

"லக்ஷ்மி, உன் குழந்தையின் நடனத்தை நாம் அடிக்கடி கண்டு களிக்க விரும்புகிறோம்!'' இந்த வார்த்தைகள் அவனையும் அறியாமல் அவன் வாயிலிருந்து தாமாகவே வெளிப்பட்டன.

அரசன் இவ்விதம் கூறிமுடித்தவுடன் சபையில் பெருத்த ஆரவாரம் எழுந்தது. அரசனைப் போலவே அங்கே கூடியிருந்த மற்றையோரும் அவள் அபிநயத்திலே மயங்கிப்போயிருந்தனர். அந்த இடத்தை விட்டு எழுந்திருக்க அவர்களுக்கு மனமில்லை. மறுபடியும் அதைக் கண்டுகளிக்கும் சந்தர்ப்பம் கிட்டப்போவதை அறிந்து அவர்கள் ஒருவாறு ஆறுதல் அடைந்தனர்.

தான் எதிர்பார்த்ததற்கு மேலாக வெற்றிகரமாய் அரங்கேற்றம் பூர்த்தியானதைக்கண்டு தாசி லக்ஷ்மி உவகை பூத்தாள். அதை எடுத்துக்காட்டுவதுபோல அவள் முகமும் நன்றாக மலர்ந்தது. கவலை நீங்கிக் குதூகலத்துடன் விளங்கினாள். அவள் உலகம் அறிந்தவள். ரோஹிணி அவளுக்கு ஒரே பெண், அதனால் லக்ஷ்மி தன் மகளுக்கு அதுவரையில் கலைப்பயிற்சி அளிப்பதிலேயே தன் முழுக் கவனத்தையும் செலுத்திவந்தாள். கலையழகு அன்றோ ஒவ்வொருவரையும் மேன்மைப்படுத்தி வாழ்க்கையில் பெரும்பதவியளித்து, சமூகத்தின் முன்னணிக்குக்கொண்டு வருகின்றது! இந்த நுட்பத்தை அறிந்தே லக்ஷ்மி அதுகாறும் அரும்பாடு பட்டுவந்தாள். கலைத்தேர்ச்சியில் வெற்றி பெறும் வரையில் வேறு எந்த விஷயமும் தன் புதல்வியின் கவனத்தை இழுக்காதவாறு கட்டிக் காவல் காத்துவந்தாள். அவளுக்குத் தன் செல்வக் குமாரியின்மீது அளவில்லாத அன்பு. இப்போது அவள் பட்ட கஷ்டத்திற்கு ஏற்ற பலன் கிட்டிவிட்டது. ரோஹிணி கலைப் பயிற்சியில் பூரணமான தேர்ச்சி அடைந்துவிட்டாள். இனி—?

ரோஹிணியின் அழகுக்கும் கலைத் திறமைக்கும் ஏற்ப அவளுடைய பிற்கால வாழ்க்கை அமையவேண்டுமே என்ற ஒரே கவலைதான் லக்ஷ்மியை வாட்டி வந்தது. இந்த ஒரு நொடிப்பொழுதில் அந்தக் கவலையும் மறைவதற்கான அறிகுறிகளை ஆண்டவன் அருள் கூர்ந்து காட்டிவிட்டான். தொழில் முறையில் கைதேர்ந்த லக்ஷ்மிக்கு மன்னனது உள்ளக்கிடக்கை எளிதில் விளங்கியது. கொடிபோலத் துவண்டு, ஒசிந்து நடனம் ஆடிய ரோஹிணியின் வனப்பைக் கண்டு அரசன் தன் உள்ளத்தை அவளிடம் பறிகொடுத்தான் என்பதை லக்ஷ்மி சுலபமாகத் தெரிந்துகொண்டாள்.

அரங்கேற்றத்தின் போது அவன் தன்னை மறந்து உட்கார்ந்திருந்ததும் முடிவில் அவன் ரோஹிணியிடம் காட்டிய பரிவும் அன்பும் அளித்த சம்மானமும் அவன் உள்ளத்தை நன்கு புலப்படுத்தின. அரசனுடைய உறவால் தன் மகளுக்கு எல்லா வகையான போகங்களும் கிட்டும் என்பதை லக்ஷ்மி உணர்ந்தாள். அதுமட்டுமா? ரோஹிணி உயர்ந்த மதிப்பும், மிக்க செல்வாக்கும் பெற்று ராணியாகவே விளங்குவாள் என்றும் கனவு கண்டாள்.

எனினும் ஒரு சிறு சந்தேகமும் கூடவே அவளுக்குத் தோன்றியது. அன்றைத்தினம் அரங்கேற்றத்தின்போது அவளுடைய தோற்றத்தின் வசீகரமும் அவள் பெற்றிருந்த கலைத் தேர்ச்சியுமே மும்முடி நாயக்கனின் உள்ளத்தைக் கவர்ந்தன. அந்தக் கவர்ச்சியிலே நாயக்கன் அவள் மகளிடம் அன்பு கொண்டான். அது உண்மைதான். ஆனல் அந்த அன்பு நிரந்தரமான காதலாக மாறி நிலைபெறுமோ என்பதே அந்தச் சந்தேகம்.

சிறிய வித்தினின்றுமே பெரிய ஆலமரம் வளர்கிறது. இந்தச் சூக்ஷ்மத்தைத் தாசிகள் நன்கு அறிவர். தங்களை அபிமானித்துப் போற்றுவாரது மனத்தே தோன்றும் அன்பின் சிறு பொறியை விசிறி வளர்த்துப் பெருங் காதலாக மாற்றிவிடும் சக்தியை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். தங்கள் காரியம் வெற்றிபெறுவதற்காக அவர்கள் தாங்கள் அறிந்த சாகஸம் முழுவதையும் கையாளக் கொஞ்சமும் தயங்க மாட்டார்கள்.

ஆகவே லக்ஷ்மி அந்தச் சந்தேகத்துக்கு அதிகமாக இடம் கொடுக்கவில்லை. எப்படியும் தன் சாமர்த்தியத்தால் முடிவில் நிச்சயமாக வெற்றி ஏற்படும் என்ற நம்பிக்கை அவளுக்குப் பூரணமாக இருந்தது. அப்படி இருக்கும்போது அவள் எதற்காக மனம் கலங்க வேண்டும்? அவள் தன் உள்ளத்தே தோன்றிய சலனத்தை ஒதுக்கித் தள்ளினள். அதைப்பற்றிச் சிந்திக்கவே மறுத்துவிட்டாள். அதற்குப் பதிலாகத் தன் எண்ணம் கை கூடுவதற்கான மார்க்கங்களைத் தேடவே யோசிக்க முற்பட்டாள்.

ஆனல் ரோஹிணியோ அன்றைத்தினம் ஆட்டத்திலேயே லயித்திருந்தாள். அதனல் அவள் தன் பக்கத்திலே நடந்தவற்றைக் கொஞ்சமும் கவனிக்கவில்லை. மும்முடி நாயக்கன் தன் அபிநயத்திலே ஒன்றி மெய்ம்மறந்து இருந்ததையும் அவள் பார்க்கவில்லை. கடைசியிலே அரசன் தன்னிடம் காட்டிய அன்பையும் கனிவையும் பற்றியோ, உணர்ச்சிப் பெருக்கால் அவன் பரவசமானதையோ அவள் ஒன்றும் அதிகமாகக் கருத்தில் கொள்ளவில்லை.

பொதுவாக யாருக்குமே அவர் அவர் பெற்றிருக்கும் சக்தி எளிதில் விளங்காது. அதன் பரிமாணத்தைப் பிறர் எடுத்துக் கூறும்பொழுதுதான் கேட்டுத் தெரிந்துகொள்வர். அன்றி, படிப்பிலேயே கருத்து ஊன்றியுள்ள வித்தியார்த்திகள் தாங்கள் கற்றதை மிகவும் குறைவாகவே கருதுவர். இன்னும் தாங்கள் படித்து அறிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருக்கின்

றனவே, அவைகளை எப்போது கற்றுத் தெரிந்து கொள்ளப் போகிறோம் என்றே ஏங்குவார்கள். அதனால் கலையில் பூர்ண பாண்டித்தியம் பெற்றிருந்தும் ரோஹிணி அதை உணராமல் தன்னை ஒரு கற்றுக்குட்டியாகவே மதித்துவந்தாள். அரசன் அளித்த ஆதரவை அவள் தன்னை உற்சாகப்படுத்தக் கூடிய தாகவே அவள் கொண்டாள்.

## 2. தாயின் ஆசை

அன்றைத் தினம் வைசாக பௌர்ணமி. வெள்ளாத சந்திரன் முழுச் சோபையுடன் வான வீதியிலே தண்ணிலவை எறித்துக் கொண்டிருந்தான். அஸ்தமித்துப் பத்து நாழிகைப் பொழுதுக்கு மேலாகிவிட்டது. உற்சவத்துக்குப் போகும் ஜனங்களுடைய ஆரவாரம் வீதிகளில் அங்கங்கே ஒலித்துக் கொண்டிருந்தது.

இரவு நீண்ட நேரம் ஆகியும் ரோஹிணி வீட்டுக்கு வரவில்லை. சாதாரணமாக அவள் சூரியாஸ்தமனத்துக்குப் பிறகு வெளியில் போவது வழக்கம் இல்லை. அப்படிப் போயிருந்தாலும் விளக்கு வைத்தபிறகு அதிக நாழிகை வெளியில் தங்கமாட்டாள். அவ்வித மின்றி இரவு வேளைகளில் வெளியே தங்க நேரிடும்போது அவள் தனியாகச் செல்லாமல் தன் தாயையும் உடன் அழைத்துப் போவதே வழக்கம்.

என்றைக்கும் இல்லாமல் அன்றைத்தினம் அவள் வீடு திரும்புவதற்கு நாழிகை ஆனதைக்குறித்து லக்ஷ்மி பெரிதும் கவலை கொண்டு இருந்தாள். ரோஹிணி தனியாகச் சென்றிருந்ததே அவள் கவலையைப் பெரியதாக எடுத்துக் காட்டியது. அவளுக்கு வேலை ஒன்றும் ஓடவில்லை. தன் மகள் வரவை எதிர்பார்த்து, வீதி யிலே வழிநோக்கி வீட்டு வாசற்படியிலேயே காத்திருந்தாள்.

ரோஹிணி அன்றைத்தினம் மாலையிலேயே அரண்மனைக்குப் போய்விட்டாள். அவள் புறப்படும்போதே, லக்ஷ்மி அவளிடம், "இன்றைக்கு எவ்வளவு சீக்கிரம் வந்துவிடக்கூடுமோ அவ்வளவு சீக்கிரமாக வந்துவிடு. நாம் எல்லோரும் கோவிலுக்குப் போய் விட்டு வரலாம்" என்று சொல்லியிருந்தாள்.

மகளும் தன் தாயின் வார்த்தைக்கு அதுவரையில் குறுக்கே நின்றதில்லை. அவ்விதம் இருக்க, 'அவள் என் இன்னும் அரண்மனை யிலிருந்து திரும்பி வரவில்லை?' என்றே ஏங்கினள் லக்ஷ்மி.

நடுவிலே ஓர் எண்ணமும் உண்டாயிற்று அவளுக்கு. நீண்ட காலமாகவே அவள் எதிர்பார்த்திருந்தது ஒருகால் இப்போது கைகூடி விட்டதோ? அதனாலேதான் ரோஹிணி வீடு திரும்பு

வதற்கு நாழிகையாகிறதோ? அவ்விதமாக இருக்குமானல் லக்ஷ்மி இன்னம் எவ்வளவு நேரமாயினும் தன் மகளது வரவைநோக்கிக் காத்திருக்கத் தயாராயிருந்தாள்.

தன்னையும் அறியாமல் லக்ஷ்மிக்குப் பழைய சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்ருக ஞாபகம் வந்தன.

முதல் முதலாக, ரோஹிணியின் நடனம் அரங்கேற்றமாகி வருஷம் ஒன்று ஓடிவிட்டது. அந்த ஒரு வருஷத்துக்குள் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டு விட்டனவே!

ரோஹிணியிடம் மும்முடி நாய்க்கன் கொண்ட அன்பு அரங்கேற்றம் நடந்த அன்றைத் தினத்துடன் முடிந்துவிடவில்லை. அப்போது முளைத்தது நாள் ஆக ஆக வேரூன்றித் தழைத்து, பெரிய விருக்ஷமாக வளர்ந்து வந்தது. லக்ஷ்மி இதைக் கண்டு உள்ளம் மகிழ்ந்து உடல் பூரித்து நின்ருள். இது அவள் எதிர்பார்த்ததே எனினும், தன் எண்ணம் ஈடேறி வருவதைப் பார்க்கும்போது அவள் ஆனந்தம் கொண்டாள். ஆனல் ரோஹிணிக்கோ இது ஆச்சரியமாக இருந்தது.

அரசன் அவளைத் தன் சபைக்கும் ஆஸ்தானத்துக்கும் அடிக்கடி வருவித்து உபசரித்துப் பெருமைப்படுத்த ஆரம்பித்துவிட்டான். ராஜகரத்திலே எந்த விசேஷம் நடைபெற்ருலும் அதற்கு முத்தாய்ப்பு வைப்பதுபோல ரோஹிணியின் நடனத்துடனேயே அது பூர்த்தியாகும். அப்படியிருக்க, சீக்கிரத்திலேயே அவள் ஆஸ்தான நடிகையாக ஆகியதில் வியப்பு ஒன்றுமில்லை.

அதுகாறும் லக்ஷ்மி தன் மகளுக்குக் கலைப்பயிற்சியே அளித்திருந்தாள்; தொழிற்பயிற்சி அளிக்கவில்லை. அதனையும் இப்போது நிறைவேற்றிவிட எண்ணினுள். அதற்கு உரிய பருவமன்ருே? ஆனல் ரோஹிணியின் மனம் தொழிற் பயிற்சியில் செல்லவில்லை. மாசு மறுவற்ற குழந்தையுள்ளத்தில் உண்மையும் வாழ்க்கையின் நம்பிக்கையும் நிறைந்திருந்தன. வெளித் தோற்றத்தைக் கண்டு மயங்காத உள்ளத்தெளிவைப் பெற்றிருந்தாள் அவள். லக்ஷ்மியோ இந்த விஷயத்தை மட்டில் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை.

கடைசியாக ரோஹிணியும் வீடு வந்து சேர்ந்தாள். அவள் வாசற்படியில் நுழையும்போதே தாய் தன் குமாரியின் முகத்தைக் கூர்ந்து கவனித்தாள். தன் வயிற்றிலே பால் வார்க்கக் கூடிய சம்பவத்தின் அறிகுறி—அதன் கோடி—ஏதாவது காண்கிறதா என்று நோக்கினுள். ஆனல் அவள் எதிர்பார்த்ததற்கு மாருன தோற்றத்தை அளித்தது மகளின் முகத்தோற்றம்.

ரோஹிணி முகம் வாடிச் சோர்ந்து களைத்திருந்தாள். அப்போது அவள் இருந்த நிலையில் அவள் குதூகலமாகப் பத்துப் பேர்களுடன் கூடிச் சந்தோஷமாகப் பொழுதுபோக்க விரும்புபவளாக இல்லை என்பதை லக்ஷ்மி வெகு சீக்கிரம் உணர்ந்துகொண்டாள். அந்த மனநிலையில் அவள் உத்ஸவத்தைக் கண்டு களித்து

விழாக் கொண்டாட வரமாட்டாள் என்பது லக்ஷ்மிக்குத் தெளிவாக விளங்கியது.

தன் எண்ணங்களைப் பெண்ணுக்குத் தெரியாமல் மறைக்க விரும்பினாள் லக்ஷ்மி. ரோஹிணி ராஜ சபையிலே நாட்டியமாடிக் களைத்து வீடு திரும்பியவள். அதைக் கண்டவுடனே லக்ஷ்மியின் தாயுள்ளம் கரைந்தது; அன்பு மேலிட்டது. மகளைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கட்டித் தழுவிக்கொண்டாள்.

முதலில் தன் குமாரியின் களைப்பைப் போக்கி உற்சாகமூட்ட வேண்டியது அவசியமாக இருந்தது. அதனால் லக்ஷ்மி மிகவும் இனிமையான குரலில், "ரோஹிணி, ஏன் இன்றைக்கு இவ்வளவு நாழிகை? நீ மிகவும் களைத்துப் போய் விட்டாய் போலிருக்கிறது......வா. சீக்கிரமாகப் போய் உடையை மாற்றிக் கொஞ்சம் சிரம பரிகாரம் செய்து கொள்ளலாம்" என்று அன்புடன் கூறி அவளை வீட்டுக்குள்ளே அழைத்துச் சென்றாள்.

மற்றவர்களைப் போலத் தானும் அன்றைக்குக் கோயில் திருவிழாவுக்குப் போக முடியவில்லையே யென்ற வருத்தம் லக்ஷ்மியை உள்ளூற வாட்டிக் கொண்டுதான் இருந்தது. ஆயினும் அவள் அதை வெளிக்காட்டவே இல்லை.

அவள் மனத்திலே வருத்தத்தைக் காட்டிலும் ஆவலே மேலோங்கி நின்றது. வழக்கம்போல ரோஹிணி ஏன் அன்றைத் தினம் சீக்கிரம் வீடு திரும்பவில்லை? அவ்வளவு நேரம் காத்திருக்கும்படியாக அரண்மனையில் என்ன நடந்தது?—இந்த விஷயங்களை அறியவே அவள் துடித்தாள்.

அதனால் ரோஹிணி சாப்பிட்டுச் சிறிது களை ஆறியவுடன் மறுபடியும் அன்றைத் தினத்துச் சம்பவங்களைப் பற்றியே பேச ஆரம்பித்தாள் லக்ஷ்மி. மகளுக்கோ எந்த விஷயத்தைப்பற்றியும் பேசுவதில் ஆவல் இருப்பதாகவே காணவில்லை.

தவிர, ரோஹிணி வேறு விதமாக நினைத்துக்கொண்டாள். மும்முடி நாயக்கனைப்பற்றியே தன் தாய் தன்னிடம் பேசப் போகிறாள் என்றும் எண்ணினாள். அதனால் அவள் இந்தப் பேச்சுக்கே இடம் ஏற்படாதபடி முடித்துவிட விரும்பினாள்.

"ஏன், அம்மா, அதைப்பற்றியே திரும்பத் திரும்பப் பேசுகிறாய்? என் மனசு அந்த விஷயத்தையெல்லாம் இப்போது நாடவில்லை. ஆகவே அதைப்பற்றி மற்றொரு சமயம் பார்த்துக் கொள்ளலாம்" என்று ஒரேயடியாக, தீர்மானமாகக் கூறிவிட்டாள் ரோஹிணி.

தாய் இந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை. உண்மையில் அவள் அந்த விஷயத்தைப்பற்றி அப்போது பேச்சே எடுக்கவில்லை. இது அவள் மனத்தை மிகவும் புண்படுத்தியது. என்றாலும் தன் மகளுடைய மன உணர்ச்சிகளை ஒருவாறு அறிந்திருந்த லக்ஷ்மி அவளோடு மேலே பேச்சுக் கொடுக்கவில்லை.

காலம் செல்லச் செல்ல எல்லாம் சரியாகிவிடும் என்பதை எண்ணி மௌனமாக இருந்து விட்டாள்.

மும்முடி நாய்க்கன் கொஞ்ச காலமாக ரோஹிணியைத் தன் காதல் நிரம்பிய கண்களால் பார்த்துவந்தான். இதை லக்ஷ்மி நன்கு அறிவாள். என்றைக்காவது ஒருநாள் தன் மகளை அரசனுக்கு மணம் செய்து கொடுக்கும் பாக்கியம் தனக்குக் கிட்டவேண்டும் என்றுதான் லக்ஷ்மி தெய்வத்தைப் பிரார்த்தித்து வந்தாள்.

ஆயினும், அது நேரிடுவதற்கு முன்னதாகவே அவள் மற்றொன்றையும் விரும்பினாள். நாய்க்கன் தன் மகளிடம் கொண்ட காதல் என்றும் மங்காததாக நிற்குமா என்பதை நிச்சயம் செய்து கொள்ள எண்ணினாள்.

புஷ்பம் மலர்ந்து நறுமணம் வீசும் காலத்தில் அதனை எல்லோரும் விரும்பி மோந்து பார்த்து அனுபவிப்பர். ஆனால் அதனை ஒரு தரம் அடைந்துவிட்டாலோ அது வாடியவுடனே அதைக் கசக்கித் தூர எறிந்துவிடுவர். தாசிகளின் நிலையும் அதைப் போன்றதுதான். ஆடவர்கள் மனத்தில் உதித்த மோகம் தணிந்துவிட்டால் அப்பால் அவர்கள் தாசிகளைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டார்கள். அவ்விதமான அனுபவம் தன் மகளுக்கு ஏற்படாதபடி பாதுகாக்கவே லக்ஷ்மி சிரமப்பட்டாள்.

உள்ளத்து உணர்ச்சியும் ஆவலும் எவ்வளவு அதிகமாக இருந்தாலும் பெண்கள் ஆடவர்களுக்கு எளிதில் இணங்கிவிட மாட்டார்கள். அது சிருஷ்டியின் தத்துவம். அன்றி, பெண்கள் பிரயோகிக்கும் சாகஸ பாணங்களுள் அதுவும் ஒன்று. அதுமட்டுமன்று. ஒவ்வொருவனுக்கும் தன் இஷ்டம் பூர்த்தியாகும் நாள் தள்ளிப் போகப்போக அதை அடைய வேண்டும் என்ற ஆவலும் அதிகரிக்கும். இந்த இயற்கையின் உண்மையை அவர்கள் நன்ருக உணர்வார்கள்.

இந்தத் தத்துவத்தையே லக்ஷ்மி தன் மகள் ரோஹிணிக்கு உபதேசிக்க விரும்பினாள். ஆனால் ரோஹிணிதான் அந்த விஷயத்தைப் பற்றியே தனக்குப் பேச விருப்பமில்லை யென்பதைத் தெரிவித்து விட்டாளே!

## 3. கனவு

"லக்ஷ்மி!"

அந்தக் குரல் அவளது நிஷ்டையைக் கலைத்தது. அதனால் அவள் கொஞ்சம் படபடப்பை அடைந்தாள். அவள் எம்பெருமான் சந்நிதானத்திலே அமர்ந்து மனம் ஒன்றுபட்டுத் தியானத்தில் ஆழ்ந்திருந்தாள். அவ்விதம் அவள் தன்னை மறந்து நாராயணனுடைய அநந்த கல்யாண குண விசேஷங்களை எண்ணி எண்ணி

மனங் கரைந்து நிற்கும் காலங்களில் அதுகாறும் அவளை யாரும் அணுகியதில்லை. தன் நிஷ்டையை யாரும் கலைக்கக்கூடாதென்று அவள் கண்டிப்பாகத் திட்டம் செய்திருந்தாள். அதனையும் மீறி யார் தன்னைத் தொந்தரவு செய்யக்கூடும் என்பதை எண்ணியே சிறிது கோபம் கொண்டாள்.

லக்ஷ்மி ஒரு தாசிதான். எனினும் அவள் தினந்தோறும் காலையில் ஸ்நானம் செய்துவிட்டு, தன் சக்திக்கேற்பப் பூஜையை முடித்துச் சிறிது நேரம் தியானத்தில் ஈடுபடுவது வழக்கம். அந்தக் காலத்திலே அவள் உலகத்தையே மறந்து எம்பெருமான் லீலா விநோதங்களை எண்ணி உள்ளம் உருகி நிற்பாள்.

அன்றைத் தினமும் அவள் பூஜையை முடித்துத் தியானத்தில் அமர்ந்திருந்தாள். தன் பெயரைச் சொல்லி யாரோ அழைப்பதைக் கேட்டதும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். பன்னிரண்டு திருமண் காப்புகளுடன் திவ்ய சேவை சாதித்து நின்றார் பட்டர் ஸ்வாமிகள். அவரது தேஜோ மயமான திருவுருவத்தைக் கண்டு உள்ளம் பூரித்தாள் லக்ஷ்மி. உடனே பரபரப்புடன் எழுந்திருந்து அவரைப் பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்தாள்.

" தீர்க்க ஸுமங்கலீ பவ ! "

அவள்தான் நித்திய ஸுமங்கலியாயிற்றே! எனினும் சம்பிரதாயத்தை ஒட்டியே பட்டர் அவளை ஆசீர்வாதம் செய்தார் போலும்.

லக்ஷ்மி ஆசாரியருக்கு ஆசனம் அளித்து உபசரிப்பதற்காகக் கிளம்பினாள். ஆனால் பட்டர் அதற்கு இடம் கொடுக்கவில்லை.

"நான் இங்கே அதிக நேரம் தாமதிப்பதற்கு இல்லை; உடனே போகவேண்டும்......ஒரு முக்கியமான செய்தியைத் தெரிவித்துப் போகவே வந்தேன்."

கணீர் என்றிருந்த அவரது குரலில் லக்ஷ்மி தனியான வசீகரத்தைக் கண்டாள்.

" அடியாள் பாக்கியம்."

இதைக் கூறிவிட்டு அவள் தலைகுனிந்து கைகூப்பி நின்றாள்.

"நான் கேட்பதை நீ கட்டாயம் நிறைவேற்றி வைப்பாயா?"

பராசர பட்டர் இவ்விதம் கேட்கும்போது அவர் குரலில் ஓர் அதிகாரத் தொனி ஒலித்தது; ஏதோ யாசகம் கேட்பதுபோலவே இல்லை. அந்த அதிகாரத் தொனியைக் கேட்டு லக்ஷ்மி பணிந்துவிட்டாள்.

"நிச்சயமாக."

அவளும் அதே திடசித்தத்துடன் தன் பதிலைத் தெரிவித்தாள்.

பட்டர் சிறிது நேரம் பேசாமல் மௌனமாக நின்றார். அது ஒரு கணமேயாயினும், அவர்களுக்கு ஒரு யுகம்போலவேபட்டது.

"நான் இப்போது பராசர சைலத்தில் தங்கியிருக்கிறேன். அங்கே நரஸிம்ஹ ஸ்வாமிக்கு ஓர் ஆலயம் எழுப்பவேண்டும். அதனைச் செய்துமுடிப்பாயா?"

இதை அவர் ஆவேசங்கொண்டவர்போலவே கூறினர். அவர் வார்த்தையின் விறுவிறுப்பை லக்ஷ்மியினல் தாங்கமுடியவில்லை.

"எம்பெருமான் சாட்சியாகச் சொல்லுகிறேன். அந்தக் கோயிலைக் கட்டிக் கும்பாபிஷேகம் செய்யாமல் இனி..."

இதை அவள் கூறி முடிக்கவில்லை. அதற்குள் பட்டரைக் காணவில்லை. எங்கேயோ போய்விட்டார்.

"எங்கே போயிருக்கக் கூடும்?...வேகமாகச் சென்ருல் அவர் வாசற்படியை அடைவதற்குள் பிடித்துவிடலாம்" என்ற எண்ணத்துடன் அவரைத் தேடக் கிளம்பினுள் லக்ஷ்மி.

அவ்வளவு தான்; திடுக்கிட்டுக் கண்விழித்துக் கொண்டாள் லக்ஷ்மி. அவள் தன் வீட்டு மேல்மாடத்தில் மஞ்சத்தின்மீது படுத்திருந்தாள். விடியற்காலம், அருணேதயமாகும் சமயம். காலை இளங்காற்று 'ஜில்' லென்று பக்கத்துத் தோட்டத்துப் புஷ்பங்களின் நறுமணத்தை அள்ளிக் கொணர்ந்து வீசியது.

குளிர்ந்த காற்று முகத்தில் ஓங்கி அடித்தவுடன் அவள் உணர்வு கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிந்தது. எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்தாள். அவள் உடலில் ஏற்பட்ட படபடப்பு அப்போதும் தணியவில்லை.

'பட்டர் எவ்விதம் அங்கே வந்திருக்கமுடியும்? அவர் பரமபதத்தை அடைந்து வருஷக் கணக்காகக் காலம் ஓடிவிட்டதே... ஆனல்...'

லக்ஷ்மிக்குமேலே யோசனை ஓடவில்லை. நிச்சயமாக அவரது ஆன்மாவே தன்னைத் தேடி வந்ததாக அவள் எண்ணினுள். அதுகாறும் அவள் கனவுதான் கண்டுகொண்டிருந்தாள். ஆயினும் உலகத்திலே எத்தனையோ பேர்கள் இருக்க, பட்டர் அவர்களை விட்டுத் தன்னைத் தனியாகத் தேர்ந்தெடுத்துத் தனக்கு மட்டும் அந்தச் சேவை சாதிப்பானேன் என்றே ஆலோசித்தாள்.

பராசர பட்டர் ஜீவந்தராக இருந்தபோது ஆந்திர தேசத்திலே பெரும் புகழும் பெற்றுத் தலைசிறந்த வைஷ்ணவப் பெரியாராக விளங்கினர். வயசும் அதிகம் இல்லை. அவ்வளவு இளம் வயசிலேயே அவர் எம்பெருமான் அருளால் தெய்வ சாந்நித்தியம் பெற்றுவிட்டார்; மகா தேஜஸ்வியாகக் காட்சியளித்தார். எப்படிப்பட்டவரும் அவரைப் பார்த்த மாத்திரத்திலேயே நிச்சயமாக அவரிடம் பக்தி பூண்டு நமஸ்கரிப்பார். அதனல் அந் நாட்டு மக்களில் பலர் அவரை அடிபணிந்து தம் ஆசாரியராகக் கொண்டு பின்பற்றினர்.

அந்நாட்டை ஆண்டுவந்த மும்முடி நாய்க்கனும் பட்டருடைய சிஷ்யகோடிகளுள் ஒருவனுனன். அவன் வகித்துவந்த பதவியின்

விசேஷத்தாலே பக்தகோடிகளின் தலைவனாகவும் ஆனான். நாட்டின் அரசனே பட்டரின் தாஸனாக மாறியபொழுது மற்றவர்களைப் பற்றிக் கேட்பானேன்? பிரமுகர்களில் பலரும் அவ்விதமே பராசரரைத் தங்கள் ஆசாரியராக அடைந்தார்கள்.

தாசி லக்ஷ்மியும் அந்தச் சிஷ்யகோடிகளுள் ஒருத்திதான். அரண்மனையின் சம்பந்தம் கொண்டிருந்த அவள் அப்படியானது மிகவும் பொருத்தமானதே. அவளது பெருமையையும் அது ஓர் அளவு அதிகப்படுத்தியது.

அவள் தாசிதான். நியதிப்படி அவள் எம்பெருமான் சேவைக்கே உடல் பொருள் ஆவி யெல்லாவற்றையும் அர்ப்பணம் செய்தவள். அத்தகைய உன்னத நோக்கத்துடனேதான் ஆதியில் அந்தப் பதவி சிருஷ்டிக்கப்பட்டது. நடுவில் அது கொஞ்சம் வழுவிவிட்டது. எனினும், லக்ஷ்மி அந்தப் பதவியின் உண்மை லக்ஷ்யத்தை என்றைக்கும் மறந்ததில்லை.

தவிர, ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு கட்டுப்பாடு உண்டு. அந்த வரம்புக்கு உட்பட்டு மனத்தூய்மையுடன் நடந்தால் எந்தத் தொழிலானால்தான் என்ன? தொழிலுக்குத் தொழில் வேறுபாடு கிடையாதே, லக்ஷ்மியும் அப்படிப்பட்டவளே. ஒரு நாளும் அவள் தன் தொழில்முறையில் எல்லையைக் கடந்ததில்லை. அவளுக்கு அத்தகைய எண்ணமே உதித்ததும் இல்லை. அப்படியானால் அவள் பக்தையாக மாறித் தெய்வத்தின் திருவருளை அடைவதில் தடை ஏது?

பட்டர் மகா தேஜஸ்வி. அவருடைய தோற்றத்தைக் கண்டு லக்ஷ்மியே சிற்சில சமயங்களில் மனோ விகாரம் அடைந்திருக்கிறாள். ஆனால் அதற்கு இடங்கொடுக்காமல் அடக்கியே வந்தபடியால்தான் அவள் தன்னைச் சமாளித்துக் கொள்ள முடிந்தது.

பட்டரோ ஒரு பாரமார்த்திகர். ஆணென்றும் பெண்ணென்றும், குழந்தையென்றும் கிழவரென்றும், எவ்விதமான பேதமும் காணாதவர். இந்திரியங்களை முற்றும் வென்றவர். அதனால் அவர், அழகியாயிருந்தாலும் சரி குரூபியாயிருந்தாலும்சரி, அவர்களைக் கண்ணெடுத்தும் பாராமல் எல்லோரையும் சமமாக நடத்திவந்தார்.

படுக்கையில் எழுந்து உட்கார்ந்தவுடன் லக்ஷ்மி சிறிதுநேரம் திகைத்துக் கல்லாய்ச் சமைந்திருந்தாள். பொழுது புலரப் புலர அவள் உள்ளத்திலும் வெளிச்சம் தோன்றியது. மேலே செய்ய வேண்டியது என்ன வென்பதைப் பற்றித் திடமான ஒரு முடிவுக்கு வந்தாள். தான் கண்ட கனவை நனவாகவே கருதி, சொப்பனத்தில் கூறி முடிக்காத வாக்குறுதியை நினைவோடு விழித்திருக்கையில் பூர்த்தி செய்தாள் லக்ஷ்மி.

ஆம். அந்தக் கோயிலைக் கட்டிக் கும்பாபிஷேகம் செய்வதையே தான் நிறைவேற்றி வைக்கவேண்டிய முதல் காரியமாகத் தீர்மானித்தாள் அவள்.

## 4. மணத் தூது

அன்றைத் தினம் வெள்ளிக்கிழமை: லக்ஷ்மி வழக்கம்போல் தன் பூஜையை முடித்துவிட்டு எழுந்தாள். அப்போது அவளைத் தேடிக்கொண்டு அரண்மனைப் புரோகிதரும் உள்ளே நுழைந்தார்.

வெள்ளிக்கிழமை, எம்பெருமான் ஆராதனையை முடித்து எழுந்தவுடனே அரண்மனையிலிருந்து சுபச் செய்தி கிட்டுவதை, அவள் ஒரு நல்ல சகுனமாகவே கொண்டாள்.

மும்முடி நாய்க்கன் தனக்குப் பெண்கேட்டே அனுப்பியிருந்தான், லக்ஷ்மியிடம் அரண்மனைப் புரோகிதரை. இந்த விஷயத்தில் அவன் மனசு நீண்டநாளாக ஊசலாடியது. ரோஹிணியிடம் அவன் கொண்ட காதல் அவன் உள்ளத்தைப் பெரிதும் அலைத்து வாட்டி வந்தது. ஆயினும் குடிமக்கள் அதனை எவ்விதம் கொள்வார்களோ என்றே அவன் ஏங்கினன்.

அவனுடைய தேவியாவதற்கு ரோஹிணி எல்லாவிதங்களிலும் பொருத்தம் வாய்ந்தவள். யாவரையும் வசீகரிக்கும் ரூபலாவண்யம், பூரணமான கலைப்பயிற்சி, குழந்தையுள்ளம், தங்கமான குணம் எல்லாம் ஒருங்கே அவளிடம் அமைந்திருந்தன. ஆனல்,—

ஆம், அதுதான் பெரிய தடையாக விளங்கியது. அவள் பிறந்த குலமன்றோ அரசன் விருப்பம் நிறைவேறுவதற்குக் குறுக்கே வழி மறைத்து நின்றது? அவள் உயர்குலத்தில், ராஜகுடும்பத்தில் பிறக்கவில்லை என்பது மட்டுமல்ல; அவள் ஒரு தாசியின் மகள்!

தாசிகளுக்கு உயர்ந்த மதிப்பும் செல்வாக்கும் இருக்கத்தான் இருந்தன: நாட்டின் பிரமுகர்கள் பலரும் அவர்களுடைய கடைக்கண் பார்வைக்குக் காத்துநின்றனர் என்பது உண்மையே. சில விஷயங்களில் குல மகளிரைக் காட்டிலும் அதிகமான உரிமைகளைத் தாசிகள் பெற்றிருந்தனர் என்ருலும், அவர்களைக் காதற் கிழத்திகளாக அடைவார்களே யன்றித் தேவியர்களாக மணந்து கொள்வதற்குப் பெரும்பாலோர் முன்வரமாட்டார்களே! அவ்விதம் இருக்க, அரசன் ஒரு தாசியை மணந்துகொண்டால்...

மும்முடியோ எப்படியாவது அவளைத் தன் தேவியாக அடைந்துவிட வேண்டும் என்று துடிதுடித்தான். அவ்விதமே தீர்மானித்து அதன் பிறகே அவன் ராஜபுரோகிதரை லக்ஷ்மியின் வீட்டுக்கு அனுப்பினன்.

இது நிறைவேறுவதில் லக்ஷ்மிக்கும் பரம திருப்தி என்பது வெளிப்படை. இந்தச் சம்பந்தம் கடைசிவரை இறுகிய பிணைப்புக் கொண்டதாக இருக்கவேண்டும் என்பது ஒன்றையே அவள் விரும்பினள். நன்ருகக் கலவையிட்ட சுண்ணச் சாந்து கொண்டு எழுப்பிய செங்கல் கட்டிடமாக அது திகழவேண்டும் என்றே ஆசைப்பட்டாள். அரசன் அவ்விதமான பக்குவ நிலையை அடைந்துவிட்டான் என்பதை உணர்ந்தவுடனேயே லக்ஷ்மியும் சம்மதித்துவிட்டாள்.

அப்பால் நடக்கவேண்டியது வேறு என்ன? சம்பிரதாய மான சடங்குகளே பாக்கி. அதற்காகத்தான் அரண்மனைப் புரோகிதர் வந்து சேர்ந்தார்.

ஆனால், விடியற்காலம் எழுந்தது முதல் அவளுடைய உள்ளம் கலங்கிய நிலையில் இருந்தது. பட்டரைக் கனவில் கண்ட போது ஏற்பட்ட படபடப்பு அப்போதும் அடங்கவில்லை. ஆராதனையையும் அவள் ஏதோ யந்திரம் போலச் செய்தாளே யன்றி, வழக்கம் போல அதிலே மனம் ஒன்றுபட்டுத் தன்னை மறந்திருக்கவில்லை. பட்டர் விரும்பிய மகத்தான திருப்பணிக்கு அவர் மற்றவர்களை விட்டு, எதற்கும் பற்றாத சிறியாளாகிய தன்னைத் தேடிவந்து தெரிவித்ததன் ரகசியம் என்ன?—இதுவே அவளை உறுத்தி வந்தது.

ஊர்ப்புறத்தே உள்ள மலையின் உச்சியில் பட்டர் ஞாபகார்த்தமாக ஒரு கோயிலைக் கட்டவேண்டும். அதில் பராசர நரஸிம்ஹம் என்ற மூர்த்தியை ஸ்தாபிக்க வேண்டும்.—இதுவே பட்டர் வேண்டுகோள். இதை அவள் அப்போதுதான் முதல் முதலாகக் கேட்டாள் என்பது இல்லை. இந்தப் பேச்சு நீண்டகாலமாகவே இருந்து வந்தது. அதை அவளும் அறிவாள். ஆனால் அது எப்படி முதலில் எழுந்தது என்பதே சட்டென்று அவளுக்கு ஞாபகம் வரவில்லை. அவள் சாதாரணமாகத் தினசரி வேலைகளைக் கவனித்து வந்தாலும் உள்ளூற அந்த ஆராய்ச்சி அவளை அறியாமலே நடைபெற்று வந்தது. அரண்மனைப் புரோகிதருடன் பேசிக்கொண்டிருக்கும்போதுதான் பழைய ஞாபகங்கள் பீறிட்டு வந்தன.

"லக்ஷ்மி, உனக்கு மகத்தான யோகம் கிட்டியிருக்கிறது. அரசர் மும்முடி நாய்க்கர் உன் குமாரி ரோஹிணியைத் தம் தேவியாக்கிக் கொள்ளத் திருவுள்ளம் கொண்டிருக்கிறார். இது மிகவும் பொருத்தமானதென்று எல்லோரும் ஒரு முகமாக அங்கீகரித்துள்ளார்கள். இதை நீயே அறிவாய். ஆகவே நான் அதை அதிகமாக எடுத்துக் கூறவேண்டியதில்லை. பராசர பட்டரும் ஜீவந்தராக இருந்த காலத்தில் இவ்விதம் நிகழ வேண்டும் என்னும் தம் விருப்பத்தையும் ஒரு சமயம் தெரிவித்திருக்கிறார். இந்த விஷயமும் உனக்குத் தெரியும்."

அதற்குமேல் புரோகிதர் என்ன என்ன சொன்னார் என்பதை லக்ஷ்மி காதில் வாங்கிக்கொள்ளவில்லை. பராசர பட்டர், ராஜ குடும்பம், தன் மகள் ஆகிய மூவரையும் தொடர்பு படுத்திப் புரோகிதர் கூறியவுடனேதான் அந்தப் பழைய சம்பவம் அவள் நினைவுக்கு வந்தது.

பட்டர் யோக புருஷர்; திரிகால ஞானி; பின்னால் நேரப் போவதை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் சக்தி வாய்ந்தவர். தம் பூதவுடலை நீத்துப் புகழுடம்பை எய்தவேண்டிய காலத்தை அவர் முன்னரே அறிந்திருந்தார். மறுபடியும் தமக்குப் பூலோகத்தில் பிறப்பு இல்லை யென்னும் நம்பிக்கை அவருக்குத் திடமாக இருந்தது. அதனால் அவர், தாசியின் கனவில் தோன்றிக் கேட்டுக் கொண்டதையே, உயிருடன் இருந்த காலத்தில் மும்முடி நாய்க்க

னிடம் நேரில் கேட்டிருந்தார். மன்னனும் அவ்விதமே செய்து விடுவதாக வாக்களித்திருந்தான். அவனுடைய ஸ்திதிக்கு அது ஒன்றும் பிரமாதமானதன்று. அதைப்போன்ற கோயில்கள் பல வற்றை நிர்மாணிக்கக் கூடிய வல்லமை அவனுக்கு இருந்தது.

ஆனால் அவன் அதை மறந்து விட்டான். தன் கவனம் முழு வதையும் அரசியல் விஷயங்களிலே செலுத்தியதாலோ, பெரிய மனிதர்களுக்கும் பணக்காரர்களுக்கும் இயற்கைக் குணமாகக் கருதப்படும் மறதியாலோ,—எந்தக் காரணமாக இருந்தால் என்ன —கட்டிடம் ஆரம்பிக்கப் படவில்லை.

லக்ஷ்மி அதை அறிந்துதான் இருந்தாள். பிறகு நாளடைவில் அதை மறந்துவிட்டாள். இப்போது திடீரென்று நினைவுக்கு வந்த வுடன் அது அவளுடைய சிந்தனையைக் கிளரி ஆசாபாசங்கள் பல வற்றைக் கிளப்பிவிட்டன. அவள் தன்னையும பட்டரையும் ஒப்பிட்டுப்பார்த்தாள்.

பட்டர் உலகத்திலே எந்த விதமான பற்றும் இல்லாமல் தாமரை இலையில் தங்கிய தண்ணீரைப் போன்ற வாழ்க்கையை நடத்தி வந்தார். அவர் ஆசை முழுதும் ஒன்றுதான்: பாமர மக்கள் உள்பட எல்லோரும் பரமாத்ம ஸ்வரூபத்தையும் அதன் உண்மையையும் அறிந்து உய்யவேண்டும். அந்த அரிய நோக்கம் ஈடேறும் மார்க்கமாகவே அவர் கோயிலை எழுப்ப வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். அரசன் அதற்குச் செவி சாய்த்து அந்த வேண்டுகோளை நிறைவேற்றி வைப்பதாக உறுதி கூறியவுடனே அவருக்குப் பரம திருப்தி ஏற்பட்டது. உள்ளம் மலர்ந்து, கவலையற்றவராக எம்பெருமானைத் தியானித் துக் கொண்டே, திருநாடு அலங்கரிக்கப் புறப்பட்டார்.

பட்டர் தம் சிஷ்யனை நாயக்கனிடத்தில் மிக்க மதிப்பு வைத் திருந்தார். சிற்றரசனும் தன் ஆசாரியரிடத்தில் பக்தியோடு நடந்து வந்தான். அப்படியிருக்க அவருடைய கோரிக்கையை— அது மட்டுமன்று, தான் கொடுத்த வாக்குறுதியை — அவன் நிறைவேற்றவில்லை.

இதை எண்ணியபோதுதான் லக்ஷ்மியின் உடலில் ஒரு நடுக்கம் எடுத்தது; உள்ளத்திலே பயமும் தோன்றியது. ஆரம்பத்தில் அவளுக்கு இருந்த சந்தேகத்தின் ரேகை இப்போது பூரணமாக வெளிப்பட்டு அவளை அலைத்தது.

தன் ஆசாரியரையே உல்லங்கனம் செய்யத் துணிந்து விட்டான் அரசன். அதுவும் அவருடைய அந்திய காலத்தில் தான் அளித்த வாக்குறுதியை அவன் மறந்து விட்டான். மனிதர் களுடைய கடைசி வேண்டுகோளை நிறைவேற்ற எவரும் தயங்க மாட்டார்கள். அதை ஓர் ஆணையாகவே எல்லோரும் சொல்வார் கள். அவ்வித மிருக்க அதையே உதாசீனம் செய்த அரசன் தன்னையும் பின்னால் ஒரு காலத்தில் உதறித் தள்ளுவதற்குப் பின் வாங்கமாட்டான் என்றே அவள் நினைக்கும்படியாயிற்று. ரோஹி ணியின் மீது அவன் கொண்டிருந்த மயக்கம் நீங்கி அத்தகைய

நிலைமை ஏற்பட்டுவிட்டால் அப்போது அதை எதிர்த்து நின்று தன் உரிமையை நிலை நிறுத்துவதற்கான சக்தி அவளுக்கு ஏது?

இது அவளுக்கு ஒரு புதிய சங்கடத்தை உண்டாக்கிவிட்டது. அவள் அதுகாறும் முடிந்த காரியம் என்று நினைத்திருந்தது இப்போது ஆட்டம் கண்டு விட்டது. இந்த விஷயத்தில் அவசரப் பட்டு ஒன்றும் செய்துவிடக் கூடாது என்றே திரும்பவும் எண்ணினாள்.

ஆனால் இவ்வளவுக்கும் மேலாக அவள் முக்கியமான ஒரு விஷயத்தை மறந்து விட்டாள். அது மும்முடி நாய்க்கனை மணந்து அவன் தேவியாக வாழப்போகும் அவள் குமாரி ரோஹிணியின் மனப்பான்மை. ரோஹிணி தான் சிற்றரசனை மணந்துகொள்வதற்குச் சம்மதித்ததாக என்றைக்கும் வெளிப்படையாகத் தெரிவித்ததில்லை. அந்தப் பருவத்தினர் தங்கள் ஆசாபாசங்களைப் பகிரங்கமாக எடுத்துக் கூற மாட்டார்கள் என்பது உண்மைதான். எனினும் ரோஹிணியோ இந்த விஷயமான பேச்சு வார்த்தைகள் நடக்கும் போதெல்லாம் தன் முகத்தைச் சுளித்து தனது சம்மதமின்மையைக் குறிப்பாக வெளியிட்டு வந்திருக்கிறாள்.

இயற்கையாகவே கனியாத பழத்தைச் செய்கை முறையால் பழுக்க வைத்தால் அது முழு ருசியும் பெற்றிராது. இதை லக்ஷ்மியும் அறிவாள். ஆயினும் தன் விருப்பம் நிறைவேற வேண்டும் என்னும் ஒரே நோக்கத்தால் அவள் அதை அலக்ஷ்யம் செய்திருந்தாள்.

## 5. அரசனது காதல்

BESANT NAGAR

அன்றைத்தினம் ரோஹிணிக்கு மனம் மிகவும் கலங்கியிருந்தது. அதன் காரணத்தை அறிய அவள் முற்படவில்லை. முயன்றிருந்தாலும் அது எளிதில் அவளுக்கு விளங்கியிராது. அவளையும் அறியாமல் உள்ளூறக் குமுறி நின்ற ஓர் உணர்ச்சியின் சிறிய ரேகையை அவள் எவ்விதம் தெரிந்து கொள்ள முடியும்?

அவள் இம் மனக் கலக்கத்தைப் பொருட்படுத்தவில்லை; தன் காரியங்களை வழக்கம்போலவே செய்து வந்தாள். மாலையிலே அரண்மனையில் அவளது நாட்டியக் கச்சேரி நடப்பதற்கு ஏற்பாடு ஆகியிருந்தது. அதனால் அவள் முறைப்படி தன்னைச் சிங்காரித்துக் கொண்டு நடனத்துக்குத் தயாராகப் புறப்பட்டாள்.

முன்பெல்லாம் அவள் அரண்மனையில் நாட்டியம் ஆடப் போவதாக இருந்தால் மிக்க குதூகலத்துடன் விளங்குவாள். அந்த மகிழ்ச்சியை அவள் அன்றைக்கு அடையவில்லை. எவ்விதமான குறைபாடும் இல்லாமல் வினிகை ஒழுங்காக நடைபெறவேண்டுமே என்னும் ஏக்கம் ஒன்றுதான் அவளைப் பிடித்துக்கொண்டிருந்தது.

அவளுக்குத் தன் வீட்டை விட்டுக் கிளம்பவே மனம் இல்லை. "அம்மா, போய் விட்டு வரட்டுமா?" என்று திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டே புறப்பட்டாள் ரோஹிணி. கால்கள் முன்னே இழுக்க, உள்ளம் பின்னே இழுக்கத் தயங்கித் தயங்கி அடியெடுத்து வைத்தாள்.

எதிர் பாராத சம்பவம் ஏதோ ஒன்று அன்றைத் தினம் நடக்கப்போகிறது என்பது மட்டில் எப்படியோ அவளுக்குத் தோன்றியது. யாரோ அவள் காதருகில் வந்து ரகசியமாகச் சொல்வது போலவே இருந்தது. ஆயினும் அவள் ராஜ சபைக்குப் போகாமல் நின்றுவிட முடியாதே!

அன்று நவராத்திரி ஆரம்ப தினம். கலைமகள் திருநாளான அந்த உற்சவத்தை ராஜகரத்தில் மிக்க விமரிசையாகக் கொண்டாடுவது வழக்கம். கலை வளர்ச்சியிலே பெரிதும் நாட்டம் கொண்ட மும்முடி நாய்க்கன் அதை வருஷந்தோறும் சிறப்பாக நடத்தி வந்தான். சென்ற வருஷம் அந்தத் திருவிழா அரசவை நாட்டிய மகளாகிய ரோஹிணியின் நடனத்துடனேதான் ஆரம்பமாயிற்று. இந்த வருஷமும் அதே போன்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ரோஹிணி அதற்காகத்தான் அரண்மனைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். அரசன் விரும்பியபடியே காரியங்கள் நடந்திருந்தால் அன்றைத்தினம் நிலைமை வேறுவிதமாக மாறியிருந்திருக்கும். ரோஹிணி நடிகையாக நவராத்திரி ஆரம்பத்தில் ராஜ சபையில் நாட்டியம் ஆடவேண்டி இருந்திருக்காது. அதற்குப் பதிலாக அவள் ராஜமகிஷியாக மும்முடி நாய்க்கன் பக்கத்திலே அவனுடன் ராஜசபையில் அமர்ந்திருப்பாள்.

சிறிது காலமாக அவள் அரண்மனைப் பக்கமே எட்டிப் பார்க்கவில்லை. மும்முடி நாய்க்கன், தன்னை மணந்து கொள்ள வேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவித்துப் புரோகிதரை அனுப்பியதற்குப் பிறகு, ரோஹிணி முதல் முதலாக இப்போதுதான் அரண்மனைக்குப் போகிறாள். அதற்குப் பிறகு இன்றைத்தினம் வரையில் அவள் ராஜ சபைக்குப் போகவே இல்லை. அது மட்டுந்தானா? அவள் அரசனைப் பார்க்கவும் இல்லை. அரசனும் அவளுக்குச் செய்தி ஒன்றும் அனுப்பவும் இல்லை.

'இன்றைக்கு அரசர் நம்மை எப்படி வரவேற்பாரோ?' என்ற எண்ணமே அவள் மனத்தை அலைத்தது. அரசனை நேரில் பார்க்க அவளுக்கு நாணமாகவும் இருந்தது; கொஞ்சம் நடுக்கமும் ஏற்பட்டது.

ஆனால் ராஜ சபையில் நுழைந்தவுடன் அவள்பால் இருந்த அச்சம் முழுதும் மறைந்து விட்டது. சகாக்களான மற்றக் கலைஞர்களுடன் கூடி அளவளாவுவதில் அவள் தன் மனக் கவலையைக் கொஞ்சம் மறந்திருந்தாள். பரிவாரங்கள் புடை சூழ, மும்முடி நாய்க்கன் ஆஸ்தான மண்டபத்திலே நுழைந்த போது ரோஹிணிக்குத் தன்னையும் மீறி மெய்சிலிர்த்தது. அரசனே

அவளைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தான். நடந்து வருகையில் அவள் இருக்கும் இடத்தைச் சமீபித்தபோது அவன் கால்கள் கொஞ்சம் தயங்கின. ஆயினும் அவன் தங்க முடியாதே. கண் களிலும் கடைவாயிலும் மெல்லிய சிரிப்புத் தவழ அவளைப்பார்த்து ஒரு தடவை சிரக்கம்பம் செய்து விட்டுப்போனான். அது அவ ளுக்கு ஒரு படபடப்பைக் கொடுத்தது; என்றாலும் அது வெகு சீக்கிரத்தில் நின்றுவிட்டது. உள்ளத்திலே லேசான மகிழ்ச்சி ஏற்பட்டது.

அப்பால் அவ்விடம் நடந்த வைபவத்தில் ஈடுபட்ட ரோஹிணி தன்னையே மறந்திருந்தாள். அனாயாசமாக அபிநயம் பிடித்து அவள் எல்லோர் மனத்தையும் களிக்கச் செய்தாள். அரச னும் வழக்கம் போல அவள் ஆட்டத்திலே லயித்திருந்தான். அது மட்டுமன்று. அன்றைத்தினம் அவளுடைய ஆட்டத்திலே என் றும் காணாத ஒரு சோபையைப் புதிதாக அவன் உணர்ந்தான்.

சபை கலைந்தவுடன் மற்றவர்களுக்கு முன்னதாகவே அவள் வீடு திரும்பத் தன்னைச் சித்தப்படுத்திக் கொண்டாள். 'இது வரை யாதொரு விகற்பமும் இல்லாமல் காரியங்கள் நடந்தேறி விட்டன. இப்படி இருக்கும்போதே வீடு திரும்பவேண்டும்' என்ற பரபரப்பு அவளுக்கு ஏற்பட்டது. உடனே அந்த இடத்தை விட்டுக் கிளம்பாவிட்டால், ஒருகால் மன்னனைப் பார்த்துப் பேச வேண்டி நேரிடுமோவென்று பயப்பட்டாள் போலும்!

அவள் வீட்டிலும் நவராத்திரி கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்று வந்தன. அவள் சீக்கிரம் வீடு திரும்ப எண்ணி யது அதற்காகவும் இருக்கலாம்.

ஆனால், "ரோஹிணி!" என்று அரசன் அவளைக் கூப்பிட்டு விட்டானே. அதைக் கேட்டவுடனே அவள் அப்படியே ஸ்தம் பித்துப் போனாள். காலோடு தலை ஒரு தடவை அவளுக்கு வியர்த் தது. அவள் பயப்பட்டபடியே நேர்ந்து விட்டதே. எதைத் தவிர்க்கவேண்டும் என்று முயன்றாளோ அதை அவளால் தவிர்க்க முடியவில்லை. அவள் கலவரம் அடைந்தாலும் முதலில் நினைத்த படி பயங்கொள்ளவில்லை. அந்தக் குரலில் அன்பின் கனிவான ஒரு குழைவைக் கண்டாள். அரசன் எப்போதும் போலவே தன் மீது அளவில்லாத பரிவு கொண்டுதான் இருக்கிறான் என்பதை அவள் எளிதில் உணர்ந்து கொண்டாள்.

அதுவே அவளுக்கு ஒரு வகையில் சிறிது ஆறுதல் அளித்தது. அரசன் தன்னிடம் ஆதரவு காட்டியதற்குப் பதிலாகக் கோபம் கொண்டிருந்தால் அப்போது நிலைமை முற்றும் வேறுபட்டிருக் கும். அப்படியின்றி, அவன் பழையபடியே அவள்மீது ஆசை வைத்திருப்பது அத்தகைய கஷ்டங்களுக்கு இடமில்லாமல் செய்து விட்டது. அரசன் தன்னைக் கூப்பிடும்போது அவள் எப்படி அவனைப் பார்க்காமல் வீடு திரும்ப முடியும்? அதனால் அவள் மெதுவாக நடந்து அவனை அணுகினாள்.

"ரோஹிணி!"

தன்னை நெருங்கிய ரோஹிணியை மும்முடி இவ்விதம் மறு படியும் அன்பு ததும்பக் கூப்பிட்டான்.

அவள் கண்களை உயர்த்தி மன்னனை ஒருதரம் தன் பரந்த விழிகளால் நோக்கினள். அது ஒரு கணநேரமே யாயினும் அதற்குள் அவன் மனநிலையை எடைபோட்டு அறிந்து விட்டாள் போலும்! உடனே அவள், தலையைக் குனிந்து கொண்டு அவன் எதிரே வாய் பேசாமல் நின்றாள். 'அடியாள் இதோ தங்கள் ஆணைக்குக் காத்திருக்கிறேன்' என்று கூறுவது போலவே இருந் தது அவள் நின்ற கோலம்.

ஆனல், அரசனது தோற்றமோ அவளை நிலைகுலையச் செய்தது; அவன் கண்களில் அலாதியான ஒரு ஜொலிப்பைக் கண்டாள். காதல் நோக்கின் ஒளியே அது. காதல் நிரம்பிய கண்களால் தன் உள்ளத்தை மகிழ்விக்கும் உருவத்தைப் பருகி இமைகொட்டாமல் நோக்கும் ஒருவனைத் தவிர மற்றையோர் கண்களில் அந்த ஜொலிப்பைக் காணமுடியாது. அதை ரோஹிணியும் உணர்ந்தாள்.

"இதோ, இப்படிப் பக்கத்தில் உட்கார். உன்னிடம் ஒரு செய்தி சொல்ல வேண்டும் என்று நான் நீண்ட காலமாகவே காத்திருக்கிறேன்" என்றான் அரசன், ஓர் ஆசனத்தைச் சுட்டிக் காட்டி. ஆனல் அவள் இருந்த இடம் விட்டு நகரவில்லை.

"ஏன் நிற்கிறாய்? இப்படி உட்கார்ந்து கொள்ளேன்?" என்று மீண்டும் வற்புறுத்திக் கூறினன் அரசன்.

"அடியாள் எவ்வளவுதான் தங்கள் அன்புக்கும் ஆதரவுக் கும் பாத்திரமாக இருந்தாலும் ஒரு வேலைக்காரியே. தங்கள் ஏவலுக்குரிய சேவகி!"

இதை அவள் மெதுவாக மிகுந்த தயக்கத்துடனே தெரி வித்தாள், குறிப்பாக மன்னன் முகத்தைக் கூர்ந்து கவனித்த படியே.

அவள் கூறிய காரணம் உண்மையன்று. அவள் ராஜ்ய நர்த்தகி யாக இருக்கலாம்; அதனல் அவள் அரசனிடம் ஊழியம் பார்க்கும் சேவகியாக இருக்கலாம். ஆனலும் அரசர்களுடன் சரி சமமாக உட்கார்ந்து வேடிக்கையாகப் பேசிப் பொழுது போக்கும் உரிமை பெற்றவளே அவள். அன்றி, ராஜகரத்தில் தாராளமாகப் பழகி அங்குள்ளவர்களோடு சல்லாபமும் செய்யலாம். ஏன், ராஜகரத் தைச் சேர்ந்தவர்களிடம்,—ஆடவர், பெண்டிர் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லோரிடமும்—வெற்றிலை பாக்கு வாங்கிப் போட்டுக் கொள்ளவோ, சுண்ணமிட்டுத் தாம்பூலத்தை அவர்களுக்கு அளிக் கவோ தாசிகளுக்கு உரிமையுண்டு. தாசிகளிடம் தாங்கள் இவ் விதம் நெருங்கிப் பழகுவதைப் பெருமையாகவே கொள்வர் பலர். அப்படியிருக்க ரோஹிணி அரசன் முன்னிலையில் தான் உட்காரும் தகுதி அற்றவள் என்று கூறிக்கொண்டது வெறும் உபசாரமே. அவள் அரசன் பக்கத்தில் தாராளமாக உட்காருவது

மட்டுமன்று; அரசன் எழுந்து நின்றிருக்கும் போதும் அவள் இருந்த இடத்தை விட்டு எழுந்திராமல் உட்கார்ந்தே இருக்கலாம். இதை அரசன் மட்டுமேயன்றி ரோஹிணியும் நன்கு அறிவாள். ஆனால் அந்த விஷயங்களையெல்லாம் யோசிப்பதற்கு மும்முடி நாய்க்கனுக்கு அவகாசமோ அமைதியோ இல்லை. ரோஹிணி கூறியதை அவன் வேதவாக்காகவே கொண்டான் போலும்.

ரோஹிணி இப்படித் தன்னையே வார்த்தையால் மடக்கிவிடுவாள் என்பதை அவன் எதிர்பார்க்கவில்லை. அவன் விருப்பத்துக்கு மாறாக அதுகாறும் யாரும் நடந்ததில்லை. அதனால் அது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அன்றி, அவள் பணிவையும் அவன் ஒருவிதத்தில் மெச்சிக்கொண்டான்.

எனினும் அவள் கூறிய விடை மன்னனுக்குப் பெரிதும் வருத்தத்தைக்கொடுத்தது. எல்லா விஷயங்களையும் அறிந்திருந்தும் அவள் இன்னமும் தன்னை ஒரு வேலைக்காரியாகவே மதித்து வந்ததை அவன் விரும்பவில்லை. அது அவன் மனத்தைப் புண்படுத்தியது.

"ரோஹிணி! இன்னும் எத்தனை நாட்களுக்குத் தான் நீ என்னை இப்படிப் பரிசோதிக்கப் போகிறாய்?"

அரசன் தழுதழுத்த குரலில் அவளைப் பார்த்து இவ்விதம் கேட்டவுடனே ரோஹிணிக்கும் கண்களில் நீர் துளித்தது. என்ன பதில் சொல்வது என்பதை அறியாமல் அவள் ஒரு கணநேரம் திகைத்து நின்றாள். ஆனால் உணர்ச்சிக்கு இடம் கொடுக்கும் சமயமா அது? சட்டென்று சமாளித்துக் கொண்டாள்.

"அரசே, தாங்கள் அவ்விதம் சொல்லலாகாது. அடியாள் ஒன்றுக்கும் பற்றாதவள். தாங்கள் என்னிடம் கொண்டுள்ள அபிமானத்துக்கு நான் என்றென்றும் தங்களுக்குக் கடமைப்பட்டுள்ளேன். எனினும் தங்கள் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கும் யோக்கியதையும் உரிமையும் எனக்கு இல்லையே!"

அவள் இதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொண்டாள். அவள் எதையோ கூறி விட்டு அந்தச் சமயம் தப்பிக் கொண்டு போனால் போதும் என்ற மன நிலையில் இருந்தாள். அவளுக்கு அங்கே தாமதிப்பது, ஏதோ முள் மீது நிற்பது போலவே தோற்றியது.

அரசனோ அவள் சொன்ன சாக்குப் போக்குகளை ஏற்றுக்கொள்வதாக இல்லை. எப்படியாவது அவளைத் தன் வேண்டுகோளுக்கு இணங்க வைத்துவிடவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் இருந்தான். ரோஹிணியும் லேசாக அந்தக் குறிப்பைக் கண்டுவிட்டாள். "மஹாராஜா அவர்கள் மன்னிக்க வேண்டும். அடியாளுக்கு உத்தரவு அளிக்கவேண்டும்" என்று மறுபடியும் பணிவாக வேண்டிக்கொண்டாள்.

மும்முடி நாய்க்கன் அதற்கும் பதிலளிக்கவில்லை. 'உம்' என்று ஆழ்ந்த பெருமூச்சு ஒன்றுதான் விட்டான். அவன் உள்ளத்திலே ஏதோ ஒன்று அடங்கிக் குமுறி வெளிவர முடியாமல் தவித்தது

என்பதை அந்தப் பெருமூச்சு எடுத்துக்காட்டியது. ரோஹிணியிடம் கொண்டிருந்த காதலால் அவன் உள்ளம் வெடித்துவிடும் நிலையிலே இருந்துவந்தது.

"ரோஹிணி, உன் மனசு எத்தனை நாட்களுக்குத்தான் இவ்விதம் இரும்பாகவும் கல்லாகவும் இருக்கப்போகிறது? எக்காலத்திலும் இப்படியே இருக்கமுடியாது; இருக்கப்போவதும் இல்லை. என்றைக்காவது ஒருநாள் உன் மனசு என் நிலையைக் கண்டு கரையத்தான் போகிறது. அதுவரையில் நான் உனக்காகக் காத்திருக்கிறேன்."

வெறியுடன் படபடப்பாக வெளிவந்த இவ் வார்த்தைகளைக் கேட்டு ரோஹிணி சிறிது மயங்கினாள். அந்தச் சமயத்திலே அவனுக்குச் சமாதானம் கூறுவது வீண். அது அவன் காதிலே ஏறாது. இதை அவள் அறிவாள். ஆயினும் என்ன செய்வது? மேலே செய்யும் வகை அறியவில்லை ரோஹிணி.

ஒரு கணநேரம் அவ்விடம் அமைதி நிலவியது. இருவரும் பேசாமல் மௌனமாகத் தலைகுனிந்துகொண்டு இருந்தார்கள்: ஒருவரையொருவர் கடைக்கண்ணால் பார்த்தனர். ஒன்றுமே பேசாமல் எவ்வளவு நாழிகை அப்படியே நிற்கமுடியும்? 'ஏதாவது சொல்லிவிட்டு அவரிடம் விடைபெற்றுக்கொண்டு செல்ல வேண்டுமே?' அவளுக்கு விளையாட்டாக ஓர் எண்ணமும் உதித்தது. இளமைப் பருவத்துக்கு இயற்கையாகவே உள்ள குறும்பின் விளைவு அது.

"அரசே, பராசர பட்டரின் ஆணைப்படி அடியேன் தாய் நரஸிம்ஹ ஸ்வாமிக்கு ஓர் ஆலயம் எழுப்ப முயற்சி செய்துகொண்டிருக்கிறாள். எங்கள் எண்ணமும் முயற்சியும் அந்தத் தெய்வ காரியத்திலே ஈடுபட்டிருக்கின்றன. அந்த விஷயம் ஏதோ ஒரு விதமாய்ப் பூர்த்தியானவுடன் அடியாள் தங்கள் ஆணையைச் சிரமேல் வகிக்கச் சித்தமாய் இருக்கிறேன்."

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே அரசன் முகத்தில் பிரதிபலிக்கும் பாவங்களைக் காணவே அவள் இச்சைகொண்டாள். 'தாங்கள் முன்பு பட்டருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்பது தங்களுக்கு ஞாபகம் இருக்கட்டும்' என்று அவனுக்கு அச்சுறுத்தவே எண்ணினாள்போலும்! ஆனால், உள்ளம் குழம்பிக் கிடந்த அரசன் அந்த வார்த்தைகளின் பொருளைச் சரியாகக் கிரஹித்துக்கொள்ளவில்லை. காலங்கடத்துவதற்காகக் கூறும் ஏதோ ஒரு நொண்டிச் சமாதானம் எனவே அதைக் கொண்டான். அதனால் அதைக் கேட்டபோது அவன் முகத்தில் எவ்விதமான மாறுபாடும் உண்டாகவில்லை.

"உம், சரி, எவ்வளவு காலம் வேண்டுமானாலும் பொறுத்திருக்கிறேன்" என்று மெலிந்த குரலில் உணர்ச்சியிழந்து பதில் சொன்னான் அரசன். அதற்குமேல் அவன் என்ன கூறமுடியும்? அவ்விதமின்றி அவன் ஏதாவது அதிகப்படியாகச் சொல்லி விட்டால் அது அவனது கௌரவத்துக்கே இழுக்காகுமன்றோ?

இது ரோஹிணிக்குச் சிறிது ஏமாற்றத்தையே அளித்தது. எனினும் அவளுக்கு அவ்விடத்தை விட்டு நழுவுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அதையே அவள் விரும்பினுள்.

ரோஹிணி வீட்டிற்குத் திரும்பிய பிறகும் நீண்ட நேரம் மும்முடி நாய்க்கன் பித்துப் பிடித்தவன்போல் கல்லாய்ச் சமைந்திருந்தான். அவனுக்கு ஒன்றுமே ஓடவில்லை.

## 6. துறவு

"அம்மா, அரண்மனைச் சேவகத்தை விட்டுவிடலாம் என்று நினைக்கிறேன்."

ரோஹிணி இவ்விதம் கூறியதைக் கேட்டவுடனே லக்ஷ்மி திடுக்கிட்டாள். தான் கேட்பதையே நம்பவில்லை. அதனுல் அவள், "என்ன?" என்று தன் மகளையே திரும்பக் கேட்டாள்.

"ஆம், அம்மா. என்னதான் பெருமை வாய்ந்ததாக இருந்தாலும் ராஜாங்க உத்தியோகத்திலே பலவித நிர்ப்பந்தங்கள் இருக்கின்றனவே!"

இதைச் சொல்லிவிட்டு ரோஹிணி ஆழ்ந்த பெருமூச்சு விட்டாள். அப்பால் எதைப்பற்றியோ யோசிப்பதுபோலச் சிறிதுநேரம் மௌனமாக இருந்தாள். லக்ஷ்மியோ தனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியினின்றும் நீங்கித் தெளிவு அடையவில்லை. ஆகவே அவளும் பதில் பேசாமல் தன் மகளையே கண்கொட்டாது பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

"அந்த ஊழியத்தை விட்டுவிட்டால், நாம் நாள் முழுதும் திருப்பணி வேலையையே கவனித்து வரலாமன்ருே?" சற்றே பொறுத்து ரோஹிணி இதைத் தனக்குத் தானே கூறிக் கொள்வதுபோல மொழிந்தாள்.

அவள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டால், பிறகு மற்றவர்கள் அவளை அசைக்கவும் முடியாது. அவள் வயசு அதிகம் ஆகாத இளம்பெண்தான். இருந்தாலும் செல்வமாக வளர்க்கப்பட்டவள்; பிடிவாதம் மிகவும் கொண்டவள். ஒருதரம் தீர்மானித்துவிட்டால், அப்பால் அதை எளிதில் மாற்றமாட்டாள்.

லக்ஷ்மிக்குத் தன் மகளுடைய குணதிசயம் நன்ருகத் தெரியும். ரோஹிணி ஏதாவதொன்றை ஒருவிதமாக முடிவுகட்டிவிட்டால், அதைச் சீக்கிரமாக மாற்றமுடியாதென்றே அவளும் ஒதுங்கிவிடுவது வழக்கம். காலக்கிரமத்தில் இந்த வேகம் குறைந்து தன் இஷ்டப்படி இழுத்து வளைக்கக்கூடியதாக மாறிவிடும் என்றே லக்ஷ்மி பொறுத்திருப்பது வழக்கம்.

ஆனல் ரோஹிணி இப்போது நினைத்தபடி நிறைவேற்ற அனுமதித்துவிட்டால், பிறகு ஏற்படும் சிக்கல்களை அவள்

எண்ணினுள். ஆகவே அதை நிறைவேற்றவொட்டாதபடி தடுத்து விட முற்பட்டாள்.

ரோஹிணியோ இந்த விஷயத்தைத் திடீரென்று முடிவுசெய்து விடவில்லை. சென்ற இரண்டு மூன்று மாதங்களாகவே அவள் இரவு பகல் இதைப்பற்றி நினைத்து நினைத்து மனம் புழுங்கினுள். உத்தியோகத்தை உதறித் தள்ளிவிடுவதே மேல் என்னும் ஒன்றைத் தவிர வேறு எந்த யோசனையும் அவளுக்கு ஏற்படவில்லை.

அன்ருெரு நாள், நவராத்திரி ஆரம்ப விழாவன்று, ராஜ சபையிலிருந்து வீடு திரும்பிய ரோஹிணியின் மனம் மிகவும் குழம்பியிருந்தது. அரண்மனைச் சம்பவங்கள் அவள் மனத்தை அலைத்தன. அரசன் மீது அவளுக்கு ஒருபுறம் இரக்கமும் மறுபுறம் கோபமும் உண்டாயின. பட்டருக்கு அவன் கொடுத்திருந்த வாக்குறுதியை, அவன் கடமையை, தான் குறிப்பாக உணர்த்தியும் அவன் அதைக் காதில் வாங்கிக்கொள்ளாததைக் கண்டு அவள் ஆத்திரம் அடைந்தாள். அதுமுதல்தான் அவளுக்கு இந்த எண்ணம் உண்டாயிற்று.

ரோஹிணி தன் தாயிடம் எந்த விஷயத்தையும் ஒளித்து வைக்கும் வழக்கமில்லை. ராஜ சபையில் நடந்த விஷயங்கள் எல்லாவற்றையும் தன் தாய்க்குச் சொன்னுள். அதைக் கேட்ட லக்ஷ்மிக்கும் தன் மகளைப்போலவே அரசனிடம் சிறிது இரக்கம் ஏற்பட்டாலும் அவன்மீது வருத்தமே தலைதூக்கி நின்றது. தன் கடமையை உணராத அவன் பிழைக்கு அவர்கள் கோபங் கொண்டனர்.

இதைக் கேட்ட லக்ஷ்மிக்கு மற்ருென்றும் வெளியாயிற்று. கோயில் நிர்மாண விஷயத்தில் அவள் என்ன என்னவோ நினைத்திருந்தாள். அவைகள் யாவும் மனக்கோட்டைகளே என்பது இப்போது அவளுக்கு விளங்கிவிட்டது.

இந்தத் தெய்வ காரியத்தில் மும்முடி நாய்க்கன் பக்கபலமாக இருப்பான் என்று அவள் பூரணமாக நம்பியிருந்தாள். கிரமமாக அவனே செய்திருக்கவேண்டிய காரியம் அது. ஏதோ தெய்வ சங்கற்பத்தால் அந்தப் பணியை அவனுக்குப் பதிலாக அவள் மேற்கொண்டாள். அதை அவன் எண்ணிப்பார்த்து, நன்றியுடன் தனக்கு உதவி செய்வானென்று அவள் நினைத்தாள். அவள் அவ்விதம் எண்ணியது வீண் பிரமையே என்பது இப்பொழுது தெளிவாக ஏற்பட்டுவிட்டது. இருள் நீங்கி அவள் அகக் கண் திறந்தது.

நள்ளிரவாகியும் தாயும் மகளும் தூங்கவில்லை. அவர்களுக்குத் தூக்கம் பிடித்தால்தானே? ரோஹிணி செய்துள்ள தீர்மானத்தை மாற்றிவிடக்கூடியதாக ஏதாவது முடியுமாவென்று யோசித்தார்கள். முடிவு ஒன்றும் கிட்டவில்லை. தாங்களே மேற்கொண்ட காரியம் எவ்விதம் நிறைவேறப்போகிறது என்ற ஏக்கம் அவர்களுக்கு ஏற்பட்டது.

BESANT NAGAR, MADRAS-90

ஒருகால் அர[illegible]பிருந்தால், ரோஹிணி அவனை மணந்துகொண்டிருந்தால், அவன் தங்களுக்குச் சிறிதும் சிரமம் வைக்காமல் அந்தக் கோயில் நிர்மாண வேலை முழுவதையும் தானே நிர்வகித்து முடித்துவைக்க முன்வந்திருப் பானே என்ற எண்ணமும் ஒவ்வொரு சமயத்தில் அவர்களிடம் பிறந்தது.

‘இனி அரசன் உதவியை எதிர்பார்ப்பதில் பிரயோசனம் இல்லை’ என்று அவர்கள் நிச்சயம் செய்துகொண்டார்கள். ஏதாவது அவன் செய்வதாக இருந்தால், அது ரோஹிணியின்மேல் அவன் கொண்டுள்ள மையலுக்காகவே,—தன் காதலியின் உள் ளத்தைக் குளிரச் செய்வதற்காகவே—இருத்தல் வேண்டும்.

ஆம், ஏதோ ஓர் அற்ப உதவிக்காக ஆசைப்பட்டு, பின்னால் வாழ்நாள் முழுவதையும் கெடுத்துக்கொண்டுவிடுவதா? அதைச் செய்ய ரோஹிணி,—ஏன் லக்ஷ்மியுங்கூடத்தான்—கொஞ்சமும் சம்மதிக்கவில்லை.

ஆயினும் கோயில் நிர்மாணம் சம்பந்தப்பட்டமட்டில் முன் வைத்த காலைப் பின்வைக்க அவர்கள் இஷ்டப்படவில்லை. கோயி லைக் கட்டி முடித்துவிடுவதாக லக்ஷ்மி பட்டருக்கு வாக்குக் கொடுத்துவிட்டாள். அது வெறும் கனவிலே நடந்ததாகவே இருந்தாலும் அதனின்றும் கொஞ்சங்கூடப் பிறழ அவளுக்கு இஷ்டமில்லை. தவிர, லக்ஷ்மி இந்த முயற்சியை மேற்கொண்டு இருக்கும் செய்தி ரகசியமாக நிற்கவில்லை; நிற்கவும் முடியாது. ஊர் எங்கும் பரவிவிட்டது.

அந்தக் காலத்திலும் இத்தகைய பெரிய கட்டிடங்கள் நிர் மாணம் செய்வதற்கு அதிகாரிகளின் உத்தரவு தேவையாய் இருந்தது. முக்கியமாகக் கோயில்களை எழுப்புவதற்கு அந்த உத்தரவு அவசியம். கோயில்களை ஆகம-விதிப்படியே நிர்மாணிக்க வேண்டும். இல்லாவிட்டால் அவை நன்மை பயப்பதை விட்டுக் கெடுதியையே விளைவிக்கும். அத்தகைய தீமை அந்தக் கோயில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நாட்டையே பாதிக்கும். மக்கள் இவ் விதம் தீவிரமாக நம்பிவந்த காலம் அது. அதனால் அதிகாரி கள் கோயில் எழுப்புவதை ஜாக்கிரதையாகக் கண்காணித்து வந்தனர்.

கோயில் நிர்மாணம் செய்யப் புகுவோர், தாங்கள் வகுத்துக் கொண்ட திட்டப்படி அதைச் செய்து முடிக்கும் இடம், பொருள், ஏவல் முதலியன வாய்க்கப்பெற்றவர்களா யிருத்தல் வேண்டும். சந்தேகமில்லாமல் அதிகாரிகள் முதலில் இதை நிச்சயம் செய்துகொண்ட பிறகே அத்தகைய திருப்பணிகளை அனுமதிப்பர். எடுத்த காரியம் பூர்த்தியாகாமல் நடுவே அரைகுறையாக நின்று விட்டால், அதனால் நாட்டுக்கே பெருத்த அவமானமும் கெடுதியும் அன்றோ நேரிடும்? தவிர, கட்டிட வேலை நடக்கும்போது, தேர்ச்சி யும் திறமையும் வாய்க்கப்பெறாத தொழிலாளிகளை நியமித்துவிட்

டால் பொருட்சேதத்தோடு ஒருவேளை உயிர்ச் சேதமும் நேரிடக் கூடும் அல்லவா?

லக்ஷ்மி, கோயில் நிர்மாணத்துக்கு அனுமதி கோரியபோது அதிகாரிகள் அதைப்பற்றிப் பிரமாதமாகப் பொருட்படுத்தவில்லை. அரசன் ரோஹிணியிடம் வைத்திருந்த அன்பை அவர்கள் எல்லோரும் அறிவர். ஆனல் அவன் கோயில் நிர்மாணம் செய்யும் விஷயத்தில் எவ்வளவு தூரம் அவன் உதவி புரிவான் என்பதை அவர்கள் அறியார்கள். ஒருகால் ரோஹிணிக்காக அரசனே முன்னின்று அந்தக் காரியத்தை முடித்துவைப்பானே என்றும் எண்ணியிருக்கலாம். அதனல் அவர்கள் எல்லோரும் அதற்கு ஆதரவளித்தனர்.

மும்முடி நாய்க்கனுக்கோ ரோஹிணியின் மனநிலை பூரணமாகத் தெரியாது. அவள் முன்போல் சகஜமாக அரண்மனைக்கு வந்து போகவில்லை என்பதை மட்டில் அவன் அறிவான். 'நாம அவளிடம் கொண்டுள்ள காதலை அறிந்து ரோஹிணி வெட்கத்தால் கூச்சம் கொண்டிருக்கிருள். முதற் படபடப்பிலே அவள் லஜ்ஜை கொண்டு நம் கண் எதிரில். படாமலிருக்கவே அவ்விதம் இருக்கிருள். போகப்போக மனம் மாறி முன்போல ராஜ சபைக்கு நாட்டியம் ஆட வருவாள்' என்றே அவன் எண்ணினன் போலும்

இவ்விதம் இருக்கையில் அவள் கோயில் நிர்மாணத்துக்கு அனுமதியளிக்கவேண்டுமென்று கோரிய வரத்தை அரசன் எப்படி மறுக்க முடியும்? ஒருகால் அவள் மனத்தைப் புண்படுத்த வேண்டாம் என்ற எண்ணத்துடனேயே உத்தரவு கொடுத்திருக்கலாம். அல்லது குற்றமுள்ள நெஞ்சமே அவனை உறுத்தியிருக்குமா? இப்போதோ, ரோஹிணியின் கூற்றுப்படி, அரசனுடைய உதவி கொஞ்சமும் கிட்டாது என்பது நிச்சயமாயிற்று. அப்படியானல்?

அரசன் உதவியில்லாமல் அவ்வளவு பெரிய காரியம் எப்படிப் பூர்த்திபெறும்? அதை நிறுத்திவிடவும் முடியாதே! எவ்விதமாயினும் கோயில் நிர்மாண விஷயமாக அவள் செய்யும் ஒவ்வோர் ஏற்பாடும் ஊர் முழுதும் பரவிவிடும். அதனல் அவள் ஏதாவது சிறிது தயங்கினலும் அது ஏச்சுக்கு வேறு இடமாகும். அதனலே தான் லக்ஷ்மி நிலைகொள்ளாமல் தத்தளித்தாள்.

"கோயில் நிர்மாண வேலையை மேற்கொண்டால் அப்பால் நமக்கு உலகத்திலே வேறு எந்த விஷயத்தைப்பற்றியும் கவலை இருக்கக்கூடாது. அப்படி ஏகாக்கிர சித்தத்துடன் நடந்தால் தான் காரியம் சித்திபெறும். இல்லாவிட்டால் பல பல விஷயங்களிலும் பற்றுக்கொண்ட மனம் சிதறுண்டு தெய்வ காரியத்தைக் கவனிக்கமுடியாமல் போய்விடும்."

ரோஹிணி இப்படிக் கூறியபோது லக்ஷ்மியால் அதை மறுக்க முடியவில்லை. தன் மகள் கூறுவது உண்மைதான் என்பதை அவள் அறிந்து கொண்டாள். ஆனல் கடைப்பிடிக்க முடியுமா?

லக்ஷ்மியோ சற்றே வயசானவள். இவ்விதம் பிற விஷயங்கள் எல்லாவற்றையும் மறந்து வாழ்க்கை நடத்துவது அவளுக்குச் சுலப

மாக இருக்கலாம். ரோஹிணிக்கு அவ்விதம் காலம் தள்ள முடியாதே. அன்றி, தான் வகித்துவரும் ராஜ நர்த்தகி என்னும் பதவியைத் துறப்பதற்கு அரசன் சம்மதிப்பானு? ஒருகால் அவன் ஏதாவது விபரீதமாக அவர்கள்மீது மனஸ்தாபம் கொண்டு விட்டால், அப்பால் நிலைமை முற்றும் சீர்கேடடைந்துவிடுமே! வேண்டுமென்றே லக்ஷ்மியும் ரோஹிணியும் தன்னை அவமதிப்பதற்காக, தன்னை மணந்துகொள்ள இஷ்டமில்லாததாலேதான், இவ்விதம் நடந்துகொண்டார்களென்று எண்ணிவிட்டால் என்ன செய்வது? ஆனுல் ரோஹிணி அதைப்பற்றி மிகவும் அலக்ஷ்யமாக இருந்தாள். "கவலைப்பட்டுப் பயன் என்ன?" என்றே தன் அபிப்பிராயத்தை வெளியிட்டாள்.

லக்ஷ்மியைவிட அவள் குமாரி ரோஹிணியே இந்த விஷயத்தில் துடிதுடிப்பாக இருந்தாள். லக்ஷ்மி உலகானுபவம் மிக்கவள்; வயசானவள். ரோஹிணியோ சிறு பெண். பருவத்தின் மிடுக்கும் சேர்ந்துகொண்டது. அதனுல் அவள் எதைப் பற்றியும் பயப்படுவதற்குச் சித்தமாக இல்லை.

'நாம் எடுத்த காரியம் முடியவேண்டும். அதுவரையில் அதைத் தவிர, வேறு எதைப்பற்றியும் சிந்திப்பதில்லை' என்ற முடிவுக்கு அவர்கள் வந்தார்கள். அதற்காக ரோஹிணி தான் ராஜ சபையில் வகித்துவந்த பதவியையும் உதறித் தள்ளி விட்டாள்.

## 7. ஏமாற்றம்

"ஏதற்காக ஆண்டவன் இந்தப் பெண் ஜன்மத்தை எனக்கு அளித்தான்!" என்று மிகவும் நொந்துகொண்டாள் ரோஹிணி.

அவள் சிறு பெண்தான். ஆயினும் ஒன்றும் அறியாதவள் அல்ல. தன்னைச்சுற்றிலும் நடந்து வருவனவற்றை அவள் தன் கூரிய நோக்கால் கவனித்துக்கொண்டுதான் வந்தாள்.

கோயில் நிர்மாணவேலை ஒருநாள், இரண்டு நாளில் ஆகும் காரியமன்று. ஏதோ ஆயிரம் இரண்டாயிரம் செலவழித்தால் முடிந்துவிடுவதும் அன்று. லக்ஷக்கணக்காகச் செலவுசெய்து நீண்டகாலம் கட்டி முடிக்கப்பெற வேண்டிய கட்டிடம் அன்றோ? 'வீட்டைக் கட்டிப் பார்; கல்யாணத்தைச் செய்து பார்' என்று சொல்லுவார்கள். இந்தக் காரியங்களில் உள்ள கஷ்டம் முதலில் தெளிவுபடாது. போகப் போகத்தான் தெரியும். சாதாரண வீட்டுக்கே இப்படிச் சொன்னுல் பெரிய கோயில் நிர்மாண விஷயத்தைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

லக்ஷ்மி கோயிலுக்கு விஸ்தாரமாகவே திட்டம் போட்டிருந்தாள். அவள் முதலிலேயே எல்லாவற்றையும் தீர யோசித்து, தன்

அந்தஸ்துக்கு ஏற்ப அது அமையவேண்டும் என்று முடிவு செய்திருந்தாள்.

அவள் தன் பெருமையைமட்டும் உத்தேசித்து அந்தத் திருப்பணியை மேற்கொள்ளவில்லை. அது முடிவு பெற்றவுடன் நாட்டுக்கே சிறப்பைக் கொடுக்கும் என்று எண்ணினுள்; அந்தத் திருப்பணியில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவருக்கும் புண்ணியத்தை அளிக்கும் என்றும் நம்பியிருந்தாள். அதனுல் நாட்டுமக்கள் நிச்சயமாக அந்தக் கைங்கரியத்திற்கு ஏற்றபடி உதவிசெய்து தேவ காரியத்தை முடித்து வைப்பர் என்றே அவள் எதிர்பார்த்தாள். ஆனுல் அந்த எண்ணம் பகற்கனவாகவே முடிந்தது.

லக்ஷ்மி தன் உத்தேசத்தைக் கூறி விஞ்ஞாபனத்தை வெளியிட்டபோது நாட்டின் பிரமுகர்கள் பலரும் முன்வந்து அவளுக்கு உதவிசெய்து ஊக்கப்படுத்தினர். அது உண்மைதான். ஆயினும் இவ்வளவு பெரிய காரியத்துக்கு அது எந்த மூலைக்குப் போதும்?

பணத்தின் தேவையைப் பற்றிக் கேட்கவேண்டுமா? அது நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. திருப்பணி வேலை இடையூறு இல்லாமல் நடக்க வேண்டுமானுல் பணம் முட்டுப்பாடின்றிக் கிடைத்துவரவேண்டும். வெளியார் வாக்களித்திருந்த தொகையில் பெரும்பகுதி வசூலாகிச் செலவழிந்து போயிற்று. எஞ்சியிருந்த சொல்ப பாகத்தைப் பெறுவது அவ்வளவு சுலபமானதாக இல்லை.

லக்ஷ்மி கோயில் நிர்மாணத்தை ஆரம்பித்த காலத்தில் அதன் சிரமம் முழுவதையும் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை. அவள் நல்ல செல்வமும் செல்வாக்கும் பெற்று, சுகமாக வாழ்ந்துவந்தாள். அவளுடைய கடைக்கண் பார்வைக்காகக் கோறுகொண்டாவின் பிரமுகர்களும் பணக்காரர்களும் தாசர்களாகக் காத்துக் கிடந்தனர்.

திருப்பணிவேலை ஆரம்பமான புதிதில் அவளுக்குப் பணம் உதவி செய்வதாக வாக்களித்தவர்களில் பலர் தர்மசிந்தனையுடன் அவ்விதம் சொல்லவில்லை. தங்கள் அந்தரங்கமான இச்சையைப் பூர்த்தி செய்துகொள்ளலாம் என்ற உத்தேசத்துடனேதான் அதற்கு இசைந்து முன் வந்தார்கள். தாசியான லக்ஷ்மி அதற்குத் தடை ஏதும் சொல்லமாட்டாள் என்றே எண்ணினுர்கள் போலும்!

லக்ஷ்மிக்கு அப்படி ஒன்றும் வயசு ஆகிவிடவில்லை. அவளுக்குப் பருவம்வந்த பெண் ரோஹிணி இருந்தது உண்மைதான். எனினும் லக்ஷ்மியின் தேகம் கொஞ்சமும் கட்டுத் தளராமல் கண்டோர் மயங்கும்படி எழில்கொண்டே விளங்கியது.

ரோஹிணியோ பூரணப்பொலிவுடன் ஜொலித்துக்கொண்டிருந்தாள். அரசன் மும்முடி நாய்க்கன் அவளைத் தன் தேவியாக விரும்பினு ஞயினும் அவள் அதை நிராகரித்துவிட்டாள் என்ற விஷயம் ஊரிலே அரைகுறையாகப் பரவிவந்தது. இது பெரிய இடங்களில் சிலருக்குச் சந்தேகத்தை விளைவித்தது. தவிர, அரசன்

திருப்பணி வேலையிலே போதிய ஊக்கம் காண்பிக்காமலும் பண உதவி செய்யாமலும் இருந்துவந்தான். லக்ஷ்மியும் ரோஹிணியும் வேறு பண உதவிக்காக அங்கங்கே அலைந்து கொண்டிருந்தார்கள். இவற்றால் அவர்களுடைய சந்தேகம் ஒருவிதத்தில் ஊர்ஜிதம் ஆயிற்று.

'அப்படியானால் அரசனுக்குக் கிட்டாத போகம் நமக்குக் கிடைக்கலாகாதா!' என்றே நகரத்துப் பிரமுகர்களில் ஒன்றிரண்டு பேர் ஏங்கி வாடி நின்றனர். அது கைகூடுவதற்கான முயற்சிகளைச் செய்யவும் முற்பட்டனர்.

இதை அறிந்துதான் ரோஹிணி தன்னை—இல்லை, தன்னைப் படைத்த தெய்வத்தை—நொந்து கொண்டாள். லக்ஷ்மியும் அவமானம் பொறுக்க முடியாமல் பெரிதும் மனம் வருந்தினாள். ஆயினும் என்ன பயன்? அவள் பிறந்த குலம் அன்றோ பிறரை அவ்விதம் நினைக்கத் தூண்டியது?

அப்போதுதான் அவர்கள் கொண்ட வைராக்கியம்—தேவ காரியம், திருப்பணிவேலை முற்றுப்பெறும் வரையில் உலக போகத்தை அனுபவிப்பதில்லை என்று அவர்கள் கொண்ட சங்கல்பம்—வெளிப்பட்டது.

என்றைக்கு லக்ஷ்மி அந்தச் சுபகாரியத்தைத் துவக்கினாளோ, அன்றைத் தினத்திலிருந்தே அவள் உலகத்தைத் துறந்த சந்நியாசினிபோல வாழ ஆரம்பித்துவிட்டாள். ரோஹிணியும் அப்படியே.

அதுகாறும் அவர்கள் பெற்றுவந்த ஜீவனம் அவர்கள் உடம்புக்கு நல்ல ஊட்டத்தை அளித்திருந்தது. சீக்கிரமாக வாட்டம் கொடுக்கவில்லை. அதன் வலிமையால் அவர்களது சௌந்தர்யம் கொஞ்சமும் சோர்வடையவில்லை. எனினும், லக்ஷ்மியும் ரோஹிணியும் தங்கள் மேனியை அழகு படுத்திக் கொள்வதில் கொஞ்சமும் சிரத்தை கொள்ளவில்லை. பொன்மலர் கண்ணுக்கு அழகாக இருந்தாலும் வாசனை கொண்டதல்ல. அதே போலத்தான் அவர்களும் தங்கள் வசீகரத்தை இழந்தனர்.

இதனால், ஆரம்பத்தில் அவர்களுக்குத் தங்கள் உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் சமர்ப்பணம் செய்து உதவுவதாக வாக்களித்தவர்கள் பெரும்பாலோர் மெல்ல நழுவ ஆரம்பித்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. பணம் கொடுப்பதாகக் கூறியவர்களும் மெதுவாகப் பின்வாங்கினார்கள். ஏதோ ஒரு சாக்கைக் கூறிக் காலம் கடத்தினர். 'பின்பு வா என்பது இல்லை என்பதற்கு அடையாளம்' என்னும் உண்மையை லக்ஷ்மி நீண்ட காலத்துக்குப் பிறகே அறிந்துகொண்டாள்.

பெருந் தொகை வாக்களித்திருந்த ஒருவரிடம் பணம் வாங்குவதற்காக லக்ஷ்மி ஒரு நாள் அவர் வீட்டுக்குப் போயிருந்தாள். அந்தக் கனவானும் ஊரை வளைத்துப் பேசி ஏதேதோ சொன்னார்; கடைசியில் ஒருவிதமாகத் தட்டிக் கழித்துவிட்டார்.

அந்தத் தொகையையே நம்பியிருந்த அவள் வேறு ஏற்பாடு செய்யாதிருந்தபடியால் நிராதரவாகப் போய்விடும் நிலைக்கு வந்து விட்டாள். அதனால் அவள் அவரிடம், "அத்தொகையைத் தரும மாகக் கொடுக்காவிட்டாலும், கொஞ்ச காலத்துக்குக் கடனாக வாவது கொடுத்து உதவவேண்டும்'' என்று மன்றாடினாள். ஆனால் அந்த மனுஷ்யரோ அசைந்துகொடுக்கவில்லை.

"தங்களுக்குக் கொடுப்பதற்கு என்ன தடை? பணத்தைப் பற்றி கவலைப்படவே இல்லை. என்னுடைய கைங்கரியமாகவே நான் நினைத்துக் கொடுக்கத் தயாராக இருக்கையில் தாங்கள் அந்தத் தொகையைக் கடனாகத்தானே கேட்கிறீர்கள்?...ஆனால் குழந்தைக்குக் கல்யாணம் செய்ய வேண்டியிருக்கிறது. திடீரென நேற்று ஒரு வரன் நிச்சயமாகிவிட்டது. இன்னம் ஒரு மாச காலத் திற்குள் நடத்தி வைத்துவிடவேண்டும். முகூர்த்தம் வைத்தாற் போலத்தான். ஏகப்பட்ட செலவு. நானே கையில் உள்ளது போதா மல் திணறுகிறேன். யாரிடம் கடன் வாங்கலாம் என்று யோசிக் கிறேன்!......ஆகவே தாங்கள் இப்போது மன்னிக்கவேண்டும்."

அதை அவர் சொல்லும்போது மரியாதையிலோ விநயத்திலோ குறையவில்லை. ஆனால் காசைக் கொடுக்கத்தான் மனம் இல்லை.

இதேபோல ஒவ்வொருவரும் ஏதேதோ சாக்குப் போக்கு கூறினால் அவள் மேலே என்ன செய்ய முடியும்?

திருப்பணி வேலை ஆரம்பமான போது அவள் நினைத்த காரியம் எதுவும் சுலபமாக நடந்தேறிவந்த காலம் அது. அதனால் தன் கோரிக்கை எளிதில் நிறைவேறிவிடும் என்றே எண்ணியிருந்தாள். எந்தவிதமான கஷ்டமும் இல்லாமல் சீக்கிரமாகவே ஆலயத் திருப் பணியை முடித்துவிடலாம் என்ற நம்பிக்கை அவளுக்குப் பூரண மாக இருந்தது. ஆள் படையும், பணமும் இருந்தால் உலகத்தில் எந்தக் காரியந்தான் நடவாது?

இப்போதோ அந்த நம்பிக்கையும் சிதறுண்டது. தர்ம கைங் கரியத்துக்காகத் தொகுத்த நிதி முழுதும் செலவழிந்துவிட்டது. மேற்கொண்டு உதவியோ கிடைக்கவில்லை. இனி—?

பிறர் உதவியை எதிர்பார்த்தே பெரிய தர்ம காரியத்தை மேற்கொள்ள முடியுமா? அதனால் அவர்கள் தங்கள் சொத்து முழுவதையும் கோயில் திருப்பணிக்கே செலவு செய்து விடுவது என்று தீர்மானித்து விட்டார்கள். அதைச் செய்வதினின்றும் அவர்களை யாரும் தடுக்க முடியாதே!

## 8. தெருக் கூத்து

கூம்பல் அதிகமாகக் கூடிவிட்டது. எங்கே பார்த்தாலும் ஒரே ஜனத்திரள். அதைத் தாண்டிப் போய் வருவதே கஷ்டமாகி விட்டது..

மாலைவேளை: சூரியாஸ்தமனத்துக்கு நான்கு நாழிகைப் பொழுதே இருந்தது. அந்தச் சமயத்தில் அங்கே ஜனக்கூட்டம் சேர்ந்தது கிராமவாசிகளுக்குச் சிரமமாகப் போயிற்று.

கிராமத்தின் மத்தியிலே நான்கு தெருக்கள் கூடும் அந்தச் சந்தியில், அதுவும் சாயங்கால வேளையிலே, இப்படிக் கூட்டம் கூடிவிட்டால், மற்றவர்கள் என்ன செய்யமுடியும்? போவோர், வருவோர் அதைத் தாண்டிச் செல்வது லேசானதன்றே! தவிர, ஏன் இவ்விதம் கூடியிருக்கிறார்கள் என்பதை அறிய ஒவ்வொருவரும் ஆவல் கொள்ளுவது இயற்கைதானே? அந்த ஆசையினாலே அவ்விடத்தைத் தாண்டிப்போக வேண்டியவர்கள்—ஏன், கூட்டம் சேர்ந்திருப்பதை அறிந்தவர்கள் எல்லோருமே—சிறிது நின்று எட்டிப் பார்த்தார்கள்.

ஒரு தரம் எட்டிப் பார்த்ததே போதும்; அவர்கள் அங்கேயே வேரூன்றி விட்டார்கள். வீட்டுக்கு வேண்டிய தண்ணீர் கொணர்வதற்கு இடுப்பில் குடத்தை எடுத்துக்கொண்டு கிளம்பிய இளம் பெண்களும், சிறுமிகளும் அந்த வேடிக்கையைப் பார்த்து அப்படியே நின்றுவிட்டார்கள். அம்மட்டிலோ? மாலைப் பொழுதில் வெளியே போய் வரப் புறப்பட்ட கிழவர்களும் அங்கேயே தங்கி விட்டார்கள். வாய்க்கால் வயல்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு அஸ்தமன சமயத்தில் சந்தியாவந்தனத்தை முடித்துக்கொண்டு கோயிலுக்குள் நுழைந்து ஆண்டவனைத் தரிசனம் செய்துவிட்டு வரலாம் என்றே அவர்கள் வீட்டை விட்டு வெளியே போந்தார்கள். ஆனால் அந்த எண்ணத்தை மறக்கச்செய்தது அவர்கள் அங்கே கண்ட காட்சி. அவர்கள் அந்த நடனத்திலே லயித்து விட்டார்கள்.

கூட்டத்தின் மத்தியிலிருந்து எழுந்த நாதம் கேட்பவர் உள்ளத்தை வசிகரிக்கும் சக்தி வாய்ந்ததாக இருந்தது. மத்தளத்தின் ஓசை, தாளத்தின் ஒலி, கால் சதங்கையின் சப்தம், இவ்வளவையும் தாண்டிக் கணீர் என்று கேட்ட பாட்டு.

கர்ணாமிர்தமான கானத்தில் ஈடுபட்டு நின்ற அந்தக் கூட்டத்துள் எட்டிப் பார்த்தபோது, அங்கே எழில் வாய்ந்த பெண் ஒருத்தி நாட்டிய மாடிக் கொண்டிருந்ததைக் கண்டார்கள். அவள் அழகை ஒருதரம் பார்த்தவர்கள் அவ்விடத்தை விட்டு மறுபடியும் நகர மாட்டார்களே! பாட்டைக் கேட்டு அனுபவிப்பது முதலிலா, அல்லது அவள் அழகைப் பருகி ஆனந்தம் கொள்வது முதலிலா என்பதை அறியாமலே அங்கே கூடியிருந்தவர்கள் திகைத்தார்கள். திறந்த வாயையும் கண்ணையும் மூடாதபடி அவர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் தங்கள் உள்ளத்தைப் பறிகொடுத்து

விட்டனர். எந்தக் காரியத்தைச் செய்ய எண்ணி வீட்டை விட்டுக் கிளம்பினர்களோ அதை மறந்து அந்த இடத்திலேயே லயித்துப் போயினர்.

நடனம் ஆடிய பெண்ணுக்குப் பதினேழு அல்லது பதினெட்டு வயசிருக்கலாம். உடல் பருவத்துக்கேற்ற வளர்ச்சியைப்பெற்று வயசுக்குண்டான முறுக்குடன் விளங்கியது.

அவள் ஆட்டத்துக்குப் பின்பாட்டையும் மற்ருெரு ஸ்திரீயே பாடிவந்தாள். அவள் இளம் பெண் அல்ல; வாழ்க்கையின் மத்திய பாகத்தைத் தாண்டிவிட்டவள். தலை மயிர் முன்வகிட்டின் பக்கத்தில் அங்கங்கே நரை கண்டுவிட்டது. ஒரு காலத்தில் துவண்டு ஒடிந்து விழும் கொடிபோல விளங்கிய அவள் உடல் சதை வைத்துப் பருமனுக மாறிவிட்டது. என்ருலும் அவள் ஒரு காலத்தில் பெற்றிருந்த அபாரமான அழகின் அடையாளம் அப்போதும் காணப்பட்டது.

ரோஹிணியும் அவள் தாய் லக்ஷ்மியுமே அவர்கள். அவ்விருவர் தேகத்தில் ஓர் ஆபரணமும் இல்லை. உடுத்திருந்த சேலையும் கிழிசல்.

கிராமத்து மக்கள் அந்தக் காட்சியைக் கண்டு திகைத்தனர். அது அவர்களுக்கு அதிசயமாகவே இருந்தது. அத்தகைய அழகும் திறமையும் பெற்றிருந்த அவர்களுக்குக் கௌரவமான பிழைப்பு ஏன் கிடைக்கவில்லை? ஏழைகளாகப் பட்டப்பகலில் தெருக்கூத்து ஆடுவானேன்? அந்தக் கூத்தினுல் கிடைக்கும் வரும்படியைக் கொண்டுதான் அவர்கள் வயிறு வளர்க்க வேண்டுமா?—இந்த விஷயங்களே கிராமத்து ஜனங்களுக்கு விளங்கவில்லை. ஆனுல் அவர்கள் அந்த விஷயங்களைத் தொடர்ந்து யோசிக்கவில்லை; அதற்கு அவகாசம் எது? அவர்கள் மனம் தங்கள் கண்ணுக்கு எதிரே நடந்துவந்த நாட்டியத்தில் லயித்துவிட்டதே!

ஒரு முகூர்த்த காலமே அந்த வினிகை நடந்தது. சூரியாஸ்தமனத்துக்கு இரண்டு நாழிகைப் பொழுது இருக்கும்போதே அவர்கள் ஆட்டத்தை நிறுத்திவிட்டார்கள். அந்தச் சிறு நேரத்துக்குள்ளாகவே அவர்கள் களைத்துப்போனுர்கள். இது அவர்கள் அன்றைத்தினம் ஆடிய முதல் ஆட்டம் அன்று. அதற்கு முன்னதாகவே அவர்கள் இரண்டு தடவை ஆடிவிட்டார்கள். இது மூன்ரும் ஆட்டம்.

அந்த மூன்று ஆட்டங்களும் ஒரே இடத்தில் நடக்கவில்லை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிராமத்தில் நடந்தது. அவர்கள் ஊருக்கு ஊர் போய் நடனம் ஆடி வந்தார்கள்.

அந்தப் பெண் ஆடிவந்த அரங்கத்தின் மத்தியிலே,—தெருப் புழுதியிலே ஜனங்கள் சூழ்ந்து நிற்கும்போது அவள் ஆடுவதற்காக விட்ட வட்டந்தான் அந்த அரங்கம்—ஒரு பித்தளைத்தட்டுக் கிடந்தது. அது நன்ருகத் தேய்த்துப் பளபளவென்று பிரகாசத்துடனே விளங்கியது. ஆட்டம் பார்க்க வந்தவர்கள் தங்கள்

சக்திக்கு ஏற்ப, மனத்தில் தோன்றிய தாராளப்பான்மைக்கும் இரக்கத்துக்கும் ஏற்ப ஒன்றிரண்டு காசுகளை அந்தத் தட்டில் வீசி எறிந்தனர்.

ஆட்டம் முடிந்தவுடன் வேலைக்காரன் முன்வந்து தட்டிலிருந்த காசைப் பொறுக்கி எடுத்து எண்ணி அவர்களிடம் கொண்டுபோய்க் கொடுத்தான். ஒன்றும் அதிகமாகச் சேர்ந்து விடவில்லை. மொத்தம் பத்துப் பொன்னே சேர்ந்திருந்தது. அது மிகவும் குறைவுதான். ஐம்பது பொன்னுக்குக் குறையாமல் அந்தக் கிராமத்தில் சேரும் என்று அவர்கள் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனல் இதனல் அவர்கள் ஏமாந்து போய்விடவில்லை.

இது அவர்களுக்குப் பழக்கமான அனுபவந்தான். அன்றைத் தினத்தைப் போலப் பல நாட்களில் அவர்கள் பட்ட சிரமம் தக்க பலனை அளிக்காமல் போயிருக்கிறது. அதற்காக அவர்கள் யாரை நொந்துகொள்வது? 'எம்பெருமான் கிருபை இவ்வளவுதான் போலும்!' என்ற ஒருவிதமான சமாதானத்துடனே அவர்கள் செல்வர்.

அன்றைக்கு ரோஹிணி அதற்கப்பால் வேறு ஊருக்குப் போகவில்லை. அவ்விதம் போகவும் முடியாது; பொழுது சாய்ந்து விட்டது. உடனே கோறுகொண்டாவுக்குத் திரும்பியாக வேண்டும். அவர்கள் வரவை எதிர்நோக்கி அங்கே பலர் காத்திருப்பர்.

ரோஹிணியும் லக்ஷ்மியும் ஏழைகளாகவே வாழ்ந்து வந்தார்கள். ஆயினும் அவர்கள் எத்தனை குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டியிருந்தது! அவர்கள் சம்பாதித்து வருவதைச் சாதக பக்ஷிகளைப்போலப் பார்த்துப் பார்த்துப் பல ஜீவன்கள் காத்திருந்தன. அந்த ஜீவன்களுக்கு லக்ஷ்மியோ ரோஹிணியோ தர்மம் வழங்கவில்லை; அவர்களை உடல் வருந்த வேலை செய்யச் சொல்லியே கூலிகொடுத்துவந்தார்கள். அந்த ஜீவன்கள் எல்லோரும் லக்ஷ்மி எழுப்பிவந்த கோயில் நிர்மாணத்தில் ஈடுபட்ட தொழிலாளிகள். நாடு இருந்த நிலையில் அவள் வேலை வாங்கியாவது வயிற்றுக்கு உணவு அளிக்கிருளே என்று அந்த உழைப்பாளிகள் மனமார அவளை வாழ்த்தினர்கள்.

கொஞ்ச காலமாகவே நாட்டில் வறுமைப் பேய் தாண்டவம் ஆடிக்கொண்டிருந்தது. ஜனங்களுக்கு உண்ணுவதற்கு உணவே இல்லை. வானம் கண் திறக்காதபடியால் குடிப்பதற்குத் தண்ணீரும் அரிதாகிவிட்டது. அதனேடு போரும் கொள்ளையும் களவும் வேறு புகுந்தன.

கொஞ்ச காலத்துக்கு முன்தான் பக்கத்து நாட்டு அரசன் கோறுகொண்டாவைக் கைப்பற்றும் நோக்கத்தோடு படையெடுத்து வந்திருந்தான். கறுத்த மீசை; சிவந்த கண்கள்; மின்னல் வெட்டுப்போலப் பிரகாசிக்கும் கத்தி; இவற்றுடன் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்களாகக் குதிரைமீது ஏறி நாட்டுள் புகுந்த எதிரிகளின் பயங்கரத்தோற்றம் குடிகளின் உள்ளத்தை விட்டு இன்னும் அகலவில்லை.

அவர்கள் ஆடிய சூறைகள், நடத்திய கொள்ளைகள் முதலியவற்றினின்றும் நாடு நிமிரவில்லை.

பாலும் பழமும் அமிதமாக உண்டு சுக போகத்தில் மூழ்கிய லக்ஷ்மிக்கு நீர்ச் சோற்றுக்கே திண்டாடும் ஏழை மக்களின் கஷ்டம் எப்படித் தெரியும்? அது அவளுக்குத் தெரியாததும் அன்று. எனினும், ஜனங்கள் படும் கஷ்டங்கள் முழுமையும் அவள் அறியாள். தனக்குக் கிடைக்கும் சௌகரியங்களைக் காட்டிலும் ஏதோ கொஞ்சம் குறைவாக அவர்கள் பெற்றிருந்தனர் என்ற அளவிலேதான் அவள் தெரிந்துகொண்டிருந்தாள். குடிமக்கள் உண்ணச் சோற்றுக்கும் உடுக்கத் துணிக்கும் தவித்து வந்தார்கள் என்ற நிலையை அவள் உணரவில்லை.

ஒவ்வொருவரும் எப்படியாவது வயிற்றுக்குக் கிடைத்தால் போதும் என்ற ஒரே நோக்கத்தைக் கொண்டு வாழ்ந்து வந்தனர். பலர் சோறு தேடி எங்கெங்கேயோ ஓடிப் போய் விட்டனர்.

லக்ஷ்மி கோயில் நிர்மாணத்தை ஆரம்பித்தபோது, தொழிலாளிகளை எங்கிருந்து தேடிப்பிடித்துக் கொணர்ந்து சேர்ப்பது என்ற கவலை அவளுக்கு உண்டாயிற்று. திறமை வாய்ந்தவர்கள் வயிற்றுப் பிழைப்பிற்காகத் தேசம் விட்டு வெளியிடங்களுக்குப் போயிருந்தனர். எனினும் அந்தக் கவலை சிறிது சிறிதாக மறைந்தது. கோறுகொண்டாவில் ஆலய நிர்மாணம் துவக்கிய செய்தியைக் கேட்டதும் அவர்கள் ஒவ்வொருவராக ஊர் திரும்பினர்.

வெளியூரில் எவ்வளவு சௌகரியங்கள் கிடைத்தாலும் அது உள்ளூர் வாழ்க்கையாகாதே! உள்ளூரில் கூலி ஒன்றுக்குப் பாதியாகக் கிடைத்தாலும், அதைக் கொண்டாவது பட்டினி கிடக்காமல் தங்கள் பசிப்பிணியை அகற்றிக்கொண்டு நிலபுலன்களைச் சீர் செய்து ஏதோ பயிரிட்டுப் பார்க்கலாம். அந்த வருஷத்துக்கு உபயோகப்படா விட்டாலும் அடுத்த வருஷத்துக்காவது அவர்கள் முன் கூட்டியே ஏதாவது ஏற்பாடு செய்யலாம் அல்லவா?

கோயில் குன்றின்மீது எழுப்பப்பட்டு வந்தது. வேலைசெய்யும் கூலி யாட்களேயன்றி, தண்ணீர் முதலிய எல்லாப் பண்டங்களுமே கீழிருந்து மேலே வரவேண்டும். அதற்கும் கணக்கற்ற ஆட்கள் தேவை. இவ்விதம் சிற்பிகள், ஸ்தபதிகள், கூலியாட்கள் ஆக மிகுதியான கூட்டம் கூடிவிட்டது. அவர்கள், கூலியைக் கூட வேண்டவில்லை. அன்றுடம் வயிற்றுக்குச் சோறு போட்டால் போதும் என்றே வேண்டினர். அதை எவ்விதம் செய்து முடிப்பது என்ற ஏக்கந்தான் லக்ஷ்மியைப் பிடித்துக் கொண்டது.

லக்ஷ்மி தன் சொத்துமுழுவதையுமே திருப்பணிக்கு அர்ப்பணம் பண்ணிவிட்டாள். அப்படியும் பணம் போதவில்லை. மேலே வழி?

ஒன்று, அவர்கள் கடன்வாங்கவேண்டும்; அல்லது, பிச்சை எடுக்கவேண்டும். கடன் வாங்க அவர்கள் ஒருப்படவில்லை. அதில் பல கஷ்டங்கள் உண்டு: வாங்கிய கடனை எவ்விதம் திருப்பி அடைப்பது? முன்னர், இதே கைங்கர்யத்துக்காக அவள் அடைந்த

அவமானத்தையும் மறக்கவில்லை. அதனால் கடன் வாங்குவதைக் காட்டிலும் பிச்சை யெடுப்பதே மேல் என்று எண்ணினாள்.

எண்ணுவது எளிது; அதைச் செயலில் காட்டுவதுதான் கஷ்டம். ஆயினும் அவர்கள் அதற்குச் சற்றும் பின்வாங்கவில்லை. தங்கள் கௌரவத்தைப் பெரிதாகக் கருதாமல் பொதுமக்களிடம் பிச்சை வாங்கத் துணிந்தனர். சாதாரணப் பிச்சை அல்ல. ஜனங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும் என்று அளிக்கும் பிச்சையும் அல்ல. அவர்கள் கண்டு களிக்கும் கேளிக்கைகளுக்கு ஊதியமாக அவர்களே தங்கள் சக்திக்கு ஏற்ப மனமுவந்து அளிக்கும் பிச்சை.

ஆம். அவர்கள் தங்கள் நிலையையும் அந்தஸ்தையும் அறவே துறந்து தெருக்கூத்து ஆடப்புறப்பட்டனர். அது பிச்சைக் கூத்துத்தானே?

## 9. விலை கூறல்

லக்ஷ்மிக்கு ஏக்கம் பிடித்து விட்டது. தன்னுடைய ஸ்திதிக்கு எட்டாத ஒரு காரியத்தை மேற்கொண்டதற்காக அவள் உள்ளூறப் பயந்துவிட்டாள். எப்போது இந்தக் காரியம் பூர்த்தியாகி மீளப் போகிறோம் என்பதையே கவலையுடன் அவள் எதிர்நோக்கி நின்றாள்.

ஒருவார காலமாக விடாமழை பிடித்துக் கொண்டு விட்டது. வானமே ஓட்டையாகப் போய்விட்டதோ என்று பலரும் சந்தேகப் படும்படியாக அடைமழை பிடித்துக்கொண்டது. இடைவெளியே இல்லாமல் அது அந்தர்தாரையாகக் கொட்டிக்கொண்டிருந்தது. அப்படி இருக்கும்போது கோயில் திருப்பணி எப்படி நடைபெறும்?

திருப்பணி வேலை நின்றுவிட்டதே என்று அவள் கவலைப்படவில்லை. ஒரு வார காலம் அது தடைப்பட்டதால் பிரமாதமான தாமதமோ சேதமோ ஒன்றும் ஏற்பட்டுவிடாது. ஆனால் அவள் ஏக்கம் முழுதும் திருப்பணிக்காக அங்கே கூடியிருந்த ஆயிரக்கணக்கான ஏழை மக்களைப் பற்றியதே.

அந்த ஏழைகள் தங்களுக்குக் கிடைக்கும் கூலியைமட்டும் கருதி வேலை செய்யவில்லை. தங்கள் வயிற்றுக்குச் சோறு கிடைப்பதையே அவர்கள் பெரும்பாக்கியமாக எண்ணிவந்தார்கள்.

நாடு பஞ்சத்தில் அடிபட்டுக் கிடந்த நிலையில் எவ்வளவு பொருள்களைப் பெற்றிருந்தும் சாப்பாட்டுக்கு ஏங்கும் ஸ்திதியிலேதான் மக்கள் உழன்று வந்தனர். லக்ஷ்மி அதை உணர்ந்து அவர்கள் பசியைப் போக்கும் நோக்கத்துடனே எல்லாக் காரியங்களையும் கவனித்து வந்தாள்.

உலகத்திலே மனிதர்களாகப் பிறந்தவர்களுக்குத் திருப்தி என்பது எளிதில் உண்டாகாது. எவ்வளவு பணம் இருந்தாலும்

இன்னம் சேர்க்கவேண்டும் என்றே அவர்கள் ஆசைப் படுவார்கள். அவ்வாறேதான் மற்ற விஷயங்களிலும். ஆனால் அந்த விதிக்கு விலக்குச் சாப்பாடு ஒன்றுதான். ஒவ்வொருவரும் வயிறு கொண்ட அளவே சாப்பிட முடியும். அதற்குமேல் அவர்களால் முடியாது. தங்கள் வயிறு நிறைந்தவுடன் ஒவ்வொருவரும் பூரணமான திருப்தியை அடைவர். அது சாப்பாட்டிலேதான் கூடும்.

லக்ஷ்மிக்கு அந்த உண்மை தெரியும். அதனாலேயே போலும், அவள் எது நின்றாலும் திருப்பணியில் ஈடுபட்டவர்களுக்கு நடந்து வந்த அன்னதானம் மட்டும் சிறிதும் தடை இல்லாமல் நடந்தேறிவர வேண்டும் என்று அரும்பாடுபட்டு வந்தாள்.

அந்தக் கைங்கர்யத்துக்கும் இப்போது இழுக்கு வந்து விட்டது. இதுவே அவள் மனத்தை அலைத்தது. ஆயிரக்கணக்கான தொழிலாளிகளுக்கு எப்படிச் சோறுபோடுவது என்று கலங்கினாள். தொழிலாளிகளே யன்றி அவர்களுடைய பெண்டாட்டி பிள்ளைகளும் சாப்பாடு இல்லாமல் வாடி வதங்க நேரிடுமோ என்பதை நினைத்துப் பார்க்கவும் அவளால் கூடவில்லை.

ஒரு வாரமாக லக்ஷ்மியோ ரோஹிணியோ பிச்சைக்காக வெளிக்கிளம்பவே இல்லை. அந்த மழையில் எந்த ஊருக்குப் போகமுடியும்? நாற்சந்தியில் கூத்தாட முடியுமா? தாங்கள் மழையில் நனைய நேரும் என்று அவர்கள் யோசிக்கவில்லை. மழையைப் பொருட்படுத்தாமல் அவர்கள் ஊர் ஊராகப் போய் ஆடினாலும் அதைப் பார்ப்பதற்கு ஊதலிலும் சாரலிலும் யார் வீட்டை விட்டு வெளியே வருவார்கள்? கூட்டத்திற்குத் தக்கபடிதானே அவர்களுக்குப் பணம் வசூல் ஆகும்?

லக்ஷ்மியும் ரோஹிணியும் தங்கள் மானத்தையும் துறந்தே தெருக் கூத்து ஆடப் புறப்பட்டனர். ஆரம்பத்தில் அது அவர்களுக்குக் கஷ்டமாக இருந்தது. அன்றன்று சேரும் தொகை மிகவும் குறைவாகவே இருந்தது. அவர்களுடைய தேவைக்குப் பற்றாததாகவே போயிற்று.

அவ்விருவரும் வகித்துவந்த உன்னத நிலையையும் அவர்கள் செய்து வந்த மகத்தான தியாகத்தையும் பாமர மக்கள் முதலில் நன்றாக உணர்ந்துகொள்ளவில்லை. அதனால் அவர்கள் அசிரத்தையாகவே இருந்தனர். பல சமயங்களில் அவர்களை ஏளனம் செய்து அவமதிக்கவும் தலைப்பட்டனர்.

உலகமே போற்றும் உயரிய திருப்பணியை அந்தப் பெண்கள் இருவரும் நடத்திவரும் செய்தி எத்தனை நாட்களுக்குத்தான் ரகசியமாக இருக்கும்? உண்மையை அறிந்தவுடன் மக்கள் தங்கள் மடமைக்கு வருந்தி அவர்களைக் கௌரவிக்க முன் வந்தனர்.

நாளடைவில் அவர்கள் வருகை நாடெங்கும் பரவியது. அவர்கள் ஓர் ஊருக்கு வந்து நடனத்துக்கு மேளம் கட்டினால் எங்கிருந்தோ ஏராளமான கூட்டம் வந்து கூடிவிடும். அந்தத் திருப்

பணிவேலை ஏற்படாமல் இருந்திருக்குமானால், லக்ஷ்மி ரோஹிணி ஆகிய இரு பேரழகிகளின் முகாலோபனமும் அவர்களுடைய சிறந்த நடனக் காட்சியும் ஏழைகளான சாதாரண மக்களுக்கு எப்படிக் கிடைக்கும்? இதை உணர்ந்த மக்கள் அந்தக் கைங்கர்யத்திற்குத் தாராளமாகத் தங்களால் இயன்ற அளவு பொருள் உதவி செய்தனர். பணமும் நன்றாக வசூலாகியது.

அந்தப் பணத்தைக் கொண்டுதான் லக்ஷ்மி உணவுப் பொருள்களை வாங்கி ஏழைத் தொழிலாளிகளுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் வழங்கிவந்தாள். இப்போதோ ஒரு வாரமாக அவளுக்கு எவ்விதமான வருமானமும் இல்லை. ஆகவே அவள் எப்படி வாங்கி வருவாள்?

இந்த வாரத்தைத் தாண்டுவதே கஷ்டமாகப் போய்விட்டது. சேமித்து வைத்திருந்த பண்டங்கள் எல்லாம் செலவாகி விட்டன. புதிதாகவே வாங்கி வரவேண்டும். ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேண்டியவற்றை அவள் பக்கத்து ஊர்களுக்கும் சந்தைக்கும் போய்த்தான் வாங்கி வரவேண்டும். கையில் காசு கொடுக்காமல் அவள் எப்படி வாங்கி வர முடியும்?

எந்த விதமாகவாகிலும் அன்றைத்தினம் சாயந்தரத்துக்குள் லக்ஷ்மி உணவுப் பொருள் வாங்கி வந்தாகவேண்டும். இல்லாவிட்டால், மறுநாள் பொழுதுவிடிந்தால் அவர்கள் அத்தனைபேரும் பட்டினி கிடக்க வேண்டியவர்களே. அவள் பணத்துக்கு எங்கே போவாள்? தன் சொத்து முழுவதையும் இழந்த அவளுக்குப் பிறர் எதை நம்பிக் கடன் கொடுப்பார்கள்?

அவள் பணத்தை என்னவோ தர்ம கைங்கர்யத்துக்குத்தான் செலவழித்து வந்தாள். அது உண்மைதான். அவளுடைய நேர்மையையும் யாவரும் அறிவர். எனினும் அவளுக்கு யாதோர் ஈடும் பெறுமல் பெருந்தொகையைக் கடனாகக் கொடுக்க ஒருவரும் முன் வரமாட்டார்களே. அப்படி அவள் கேட்கவும் இப்போது துணிவுகொள்ளவில்லை. முன்னர் அவள் பட்ட அவதிகளே போதுமே.

இப்போதோ வேறு வழியில்லாமல், கடன் வாங்கித்தான் ஆகவேண்டும் என்ற நிலைமைக்கு அவள் வந்துவிட்டாள். லக்ஷ்மிக்கும் ரோஹிணிக்கும் சொந்தம் என்று சொல்லக்கூடியவை அவர்களுடைய உடலும், அதுகாறும் அவர்கள் பெற்றிருந்த கலைத் தேர்ச்சியுமே.

கலையை அடகுவைக்க முடியாது. அதை யாரும் தைரியமாக முன்வந்து அடைமானம் பெறமாட்டார்கள். அப்படியானால் லக்ஷ்மி தன் உடலையும் தன் மகள் ரோஹிணியின் உடலையும் அடைமானம் வைக்க வேண்டியதுதானா?

ஆம்: லக்ஷ்மி தன்னையும், தன் மகளையும் அடிமைகளாக விற்றுவிடவே தீர்மானித்தாள். ஆனால் அவர்கள் தங்களைச் சாதாரண அடிமைகளைப்போல விலை கூறி விற்றால், அப்பால்

அவர்களுக்கெனத் தனியாகச் சுதந்தரம் ஏதும் இராதே. தங்களை விலைக்கு வாங்குகிறவர்களுக்குச் சொந்தமானவர்களாகி அவர்கள் ஏவும் வேலையை அன்றோ செய்யவேண்டி வரும்?

லக்ஷ்மி தங்களை அவ்விதம் விற்ருல் தாங்கள் எடுத்த காரியம் எப்படி முற்றுப்பெறும் என்றே எங்கினள். திருப் பணி வேலை முடியுமட்டில் அதற்காகத் தங்களுக்குச் சுதந்தரம் அளிக்கக் கூடிய சில நிபந்தனைகளுடனே தங்களை அடிமைகளாக விற்றுக்கொண்டால் என்ன என்றே யோசித்தாள்.

ஆமாம். கோயில் திருப்பணி வேலை முடியும் வரையில் லக்ஷ்மி யும் ரோஹிணியும் அந்தக் காரியம் முற்றுப் பெறுவதற்கான வழிக ளைத் தேடி அவற்றையே கவனித்து வருவார்கள். அதுவரையில் அவர்கள் தங்களை அடிமை கொண்டவர்களுக்குப் பெயரளவில் அடைமானம். அதனல் பிறர் யாரும் அவ்விரு பெண்மணிகளையும் அணுக முடியாது. அவ்வாறே கோயில் பூர்த்தியாகிக் கும்பா பிஷேகம் ஆகும் வரையில் லக்ஷ்மியோ ரோஹிணியோ திருப்பணி யைத் தவிர வேறு எதையும் செய்யக்கூடாது. அது முடிந்த பிறகு அடிமைகளாக வாங்கியவர்களது கடனைத் தீர்க்க உழைத்து வருவர்.

இவைகளே ரோஹிணியும் லக்ஷ்மியும் விதித்துக்கொண்ட நிபந்தனைகள்.

ஆனல், நாடு இருந்த நிலையில் அவர்களைப்போலவே தங்களை அடிமைகளாக விற்றுவிட வேறு பலரும் தயாராக இருந்த னர். அது மட்டுமன்று. அவர்களைப் போல நிபந்தனைகளையும் விலக்கு விதிகளையும் பேசாமல், சர்வ சுதந்தரத்துடன் புத்திர பௌத்திர பாரம்பரியமாகவே தங்களை அடிமைகளாக விற்று விட அவர்கள் முன் வந்தனர். பசிப்பிணி ஒன்று நீங்கினல் போதும் என்ற கவலையே அவர்களுக்கு.

இவ்விதமானல் அடிமைகளை விலைக்கு வாங்குவோர் யாரை விரும்புவர்? அனுபோக பாத்தியத்தை கொண்ட அடிமைகளை விலைக்கு வாங்குவதை விட்டு வெறும் அடைமானமாகப் பணம் கொடுக்க முன்வருவரோ? இவ்வளவு பெரிய காரியத்துக்கு வேண்டிய தொகை கொடுத்து அடைமானம் பெறக்கூடியவர் கிடைப்பதும் கஷ்டமாயிற்றே!

லக்ஷ்மியிடமோ ரோஹிணியிடமோ மையல்கொண்டு யாரா வது அவர்களை அடகுபெற எண்ணினும் அவர்கள் விருப்பம் நிறைவேற வழியில்லாமையைக் கண்டு அவர்கள் மயங்கினர்கள். கோயில் கட்டிடம் எப்போது பூர்த்தியாகுமோ? சீக்கிரம் முடியா மல் நீண்டகாலம் இழுத்துச் சென்ருல் அதற்குள் அவர்கள் அழகு குன்றி உடல் தளர்ந்து வண்ணம் இழந்துவிட்டால்?

தவிர, ரோஹிணியிடம் மும்முடி நாய்க்கன் முன் ஒரு சமயம் கொண்டிருந்த காதலை யாவரும் அறிவர். அரசன் இப்போதும் அப்படியே அவளைக் காதலித்து வருகிருன் என்பது தெரியவில்லை.

ஒருகால் அவன் முன்போலவே அவளை விரும்பியிருந்தால், தாங்கள் பணம் கொடுத்து அடைமானம் பெற்றாலும், அது ஒரு பிரயோஜனத்தையும் கொடுக்காமல் வீண்பிரயாசையாகப் போய் விடுமோ?

இவ்விதம் யோசித்து அவர்களை அடைமானம் பெற்று உதவி யளிக்கக் கூடிய ஒன்றிரண்டு பேர்களும் பின்வாங்கினார்கள்.

## 10. அடிமைப் படுதல்

செய்தி அரசன் காதிலும் விழுந்தது. நாட்டில் நடக்கும் முக்கிய மான விஷயங்களை அறிந்துவந்து அவனுக்குத் தெரிவிப்பதற் காக ஒற்றர்கள் பலர் இருக்கிறார்களே; அவ்விதமிருக்க அது எப்படி ரகசியமாக நின்றுவிடும்?

லக்ஷ்மி, தன்னையும் தன் மகள் ரோஹிணியையும் அடிமை களாக விற்றுக்கொள்ள விலை கூறுகிறாள் என்பதைக் கேட்ட போது அவன் முதலில் நம்பவே இல்லை. "என்ன? அவர் களுடைய நிலை என்ன? செல்வாக்கு என்ன? அவர்கள் எல்லாவற்றையும் இழந்து இவ்விதம் மிகவும் கீழ்ப்பட்ட ஸ்திதிக்கு வந்து விட்டார்களா?" என்றே மயங்கினான். ஆனால் அவர்கள் நிலைமை கவலைக் கிடமாகவே இருந்த தென்ற உண்மையை அறிந்த வுடன் அவன் மிகவும் வருத்தப்பட்டான். அவன் மனம் பெரிதும் சஞ்சலமடைந்தது.

அவர்கள் படும் துன்பங்களுக்குத் தானே ஒரு விதத்தில் பொறுப்பாளி என்பதை அவன் அறிந்துதான் இருந்தான். எனினும் தன்னால் ஒன்றும் செய்யக்கூடாமல் இருந்ததாலே அவன் இவ் வளவு காலம் சும்மா இருந்துவந்தான். இனியும் அப்படியே இருந்தால் அது பேராபத்தாக முடியும் என்பதை நன்றாக உணர்ந்துகொண்டான்.

'ஆரம்பத்தில் நாம் கொஞ்சம் அசிரத்தையாக இருந்துவிட் டோம். அதுதான் நிலைமையை இவ்வளவு தூரம் முற்றவிட்டது' என்று மனம் புழுங்கினான் மும்முடி நாயக்கன்.

அப்படியில்லாமல் அவன் முதலிலிருந்தே திருப்பணி வேலையில் சிரத்தை எடுத்துக்கொண்டிருந்தால், அவர்களுடைய கஷ்டம் எவ் வளவோ குறைந்திருக்கும். உண்மையில் அவனே மேற்கொண் டிருக்க வேண்டிய காரியம் அது. தன் ஆசாரியருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக மட்டுமல்ல; நாட்டிலே தாண்டவமாடும் பஞ்சப் பேயை ஒழித்து மக்களின் பசிப்பிணியை நீக்குவதற்காகவாவது அவன் நிவாரண வேலையாக அந்தத் திருப் பணியை மேற்கொண்டிருக்க வேண்டுமன்றோ?

'குடிமக்களைக் காப்பாற்றும் பொறுப்பு அரசனைச் சார்ந்தது. நாம் அதைச் செய்ய முன் வராமையாலேயே, லக்ஷ்மி இவ்வளவு

பெரிய காரியத்தைத் தனியாக நின்று நிர்வகித்து அதனால் ஏற்படும் அல்லல்கள் பலவற்றையும் தாங்கி வருகிறாள். இந்தப் பொறுப்பைக் கிரமமாக நாமே ஏற்றுக்கொண்டிருக்க வேண்டுமன்றோ ?' என்று மனம் குமுறினான் மன்னன்.

இந்தத் தரும காரியத்துக்கு உதவ வேண்டாம் என்று ஒரு நாளும் அவன் இருந்ததில்லை. ஆனால் லக்ஷ்மியோ ரோஹிணியோ வந்து அவனை அணுகித் தங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று அதுகாறும் ஒரு தடவைகூட வேண்டிக்கொள்ளவில்லையே! அவர்களாக வந்து கேட்காதபோது தானே வலுவில் போய் அவர்கள் காரியத்திலே தலையிட விரும்பவில்லை அரசன்.

மும்முடி நாய்க்கன் அப்படிச் செய்வது அவன் வகித்துவரும் பதவிக்கு ஏற்றதன்று; அதன் கௌரவத்தைக் குறைப்பதாக ஆகிவிடும் என்றே நினைத்தான் போலும். அன்றியும், அவ்விரு பெண்மணிகளும் மன்னன் ஒழுக்கத்தைப்பற்றி ஐயுறவும் கூடும்.

'அரசனுக்கு ரோஹிணியை மணஞ்செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு நாம் இணங்கவில்லை. அதனால் எப்படியாவது நம்மை அதற்கு இசைய வைப்பதற்காகவே அரசன் இப்படி முன்வந்து நமக்கு உதவி செய்கிறான். காலத்தில் செய்த அவன் நன்றியை நாம் மறக்க முடியாதே. ஆகவே அவனுக்கு நாம் ஒரு விதத்தில் கட்டுப்பட்டு அவன் கோரிக்கையைப் பூர்த்தி செய்விக்கக் கடமைப் பட்டவர்களாகிவிடுவோம்.'

ரோஹிணியோ, லக்ஷ்மியோ மற்றொரு நாள் இவ்விதம் நினைக்கக்கூடாது என்பதே அவனுடைய விருப்பம். அவ்விதமின்றி அவன் முன் வந்திருந்தால் அவர்கள் அவ்விதமே நினைத்திருப்பார்கள் அன்றோ ?

காலச் சக்கரம் துரிதமாகச் சுழல்வது. இந்தச் சுழலில் அகப்பட்ட யாருக்கும் அதனின்றும் விடுப்பட்டுச் சிறிது ஒதுங்கி நின்று விஷயங்களை ஆர அமர யோசித்துத் தீர்மானிக்கப் போதிய அவகாசம் கிடையாது. அந்த வேகத்தில் போய்க்கொண்டிருக்கும் போதே முடிவுகட்ட வேண்டும்.

லக்ஷ்மியோ அன்றைத் தினத்துக்குள் யாருக்காவது அடிமைப் பட்டுப் பணம் வாங்கி மேற்காரியத்தைக் கவனிக்கவேண்டும். பொறுத்துப் பார்க்க நேரம் இல்லை. அரசனுக்கும் வேறு மார்க்கமில்லை. அவன் ஏதாவது உதவி செய்வதாக இருந்தால் கொஞ்சமும் தாமதமின்றி உடனே செய்து முடிக்கவேண்டும்.

அரசனுக்கு வேறொரு பயமும் உண்டாயிற்று. அவர்கள் ஆத்திரத்தால் அவசரப்பட்டுத் தங்களை அவ்விதம் அடிமைகளாக விற்றுவிட்டால், ரோஹிணியின் கதி என்னவாகும்? அன்றி, அவர்களுக்கு உதவுவதாக மும்முடி நாய்க்கன் இப்போது முன் வந்தால், அவர்கள் அவன் உதவியை ஏற்றுக் கொள்வார்களா? ஏற்றுக்கொள்ளாமல் அவர்கள் நிராகரித்துவிட்டால், அது மன்னனுக்குப் பெருத்த அவமானமாக வன்றோ போய்விடும் ?

'நம் கீழ் வாழும் குடிமக்களன்றோ அவர்கள்? அதனால் நாம் அளிக்கும் உதவியை அவர்கள் மறுத்து விடுவார்களா?' என்று ஒவ்வொரு சமயம் அவன் எண்ணியதுண்டு. ஆயினும் முன்னர் ரோஹிணியைத் தனக்கு மணம் முடிக்காமல்,—ஏன், அந்தச் சம்பந்தத்துக்கே ஒப்புக்கொள்ளாமல்—காலங் கடத்தியதையும், அப்பால் அவர்கள் ராஜாங்க சேவகத்தை உதறித் தள்ளியதையும் அவன் என்னவென்று கூறுவது!

ஒருகால் வேறு யாராவது அவர்களை அடைமானம் பெற்று விட்டால்?

அப்படியானால் அதன் முடிவு எவ்விதமாக மாறும் என்பதை எண்ணிப் பார்க்கவும் மும்முடி நாய்க்கன் பயந்தான்; அதை நினைக்கும்போதே அவன் நடுங்கினான்.

'இதற்குக் கொஞ்சமும் இடம் கொடுக்கக் கூடாது. எப்படியாவது அவள் வேண்டும் பணத்தை நாமே கொடுத்து, லக்ஷ்மி தன்னையும் தன் மகளையும் பிறருக்கு அடிமைப் படுத்துவதனின்றும் தடுத்துவிடவேண்டும்' என்று முடிவு செய்தான் அவன். அது ஈடேறுவதற்காகத் தன் கௌரவத்துக்குக் கொஞ்சம் இழுக்கு வந்தாலும் அதைச் சகித்துக் கொள்ளச் சித்தமாக இருந்தான்.

அவன் செய்யத் தவறிய அந்தத் திருப்பணிக்கு இது ஒரு சிறிய பிராயச்சித்தமாகவாவது ஆகாதா?

ஆனால் ரோஹிணியோ அரசனிடம் உதவி பெறுவதை மட்டும் விரும்பவேயில்லை. அவளுக்குக் கொஞ்சங்கூட இஷ்டமில்லாததால் அவள் முதலில் அந்தப் பேச்சை எடுக்கவே சம்மதிக்கவில்லை. அவள் மும்முடி நாய்க்கனை அவ்வளவு தூரம் வெறுத்து வந்தாள். அவனுடைய அசிரத்தையாலும் அலக்ஷ்யத்தாலும், வாலிபத்தின் முறுக்குத் தளராத ரோஹிணியின் உள்ளத்திலே கசப்பு உண்டாகிவிட்டது. மன்னனிடம் உதவி பெறுவதை அவள் மிக்க இழிவாகவே கருதினாள். அதைவிட உயிரையே இழக்க நேரிட்டாலும் அவள் அதற்குத் தயாராக இருந்தாள்.

லக்ஷ்மியோ உலகம் அறிந்தவள். தங்கள் கௌரவத்தைக் காப்பதற்காக ஆயிரக்கணக்கான மக்களைப் பலியிட அவள் சித்தமாக இல்லை. இதுகாறும் அரசன் இந்த விஷயத்தைக் காதில் போட்டுக் கொள்ளாமல் இருந்தானாயினும் இப்பொழுதாவது அவன் தங்களுக்கு, தக்க சமயத்தில் உதவ முன் வந்தானே யென்று அவள் கொஞ்சம் திருப்தி கொண்டாள். அன்றி, அரசனுக்கல்லாமல் வேறு யாருக்காவது இப்போது தங்கள் சுதந்தரத்தை விற்று விட்டால், அப்பால் இதேபோல மறுபடியும் ஒருசமயம் பணமுடை ஏற்பட்டால் என்ன செய்யமுடியும் என்பதையும் அவள் எண்ணிப் பார்த்தாள். தங்களை அடைமானம் பெற்றவனே அந்தச் சமயத்தில் தங்களுக்காக இன்னம் அதிகமாகப் பணம் கொடுக்கக்கூடிய சக்தி உடையவனாகவும் இருக்கவேண்டும் அன்றோ? அவ்வித சக்தி உடையவன் அரசன் மும்முடி நாய்க்கனைத் தவிர வேறு யார்

கிடைப்பர்? அதை லக்ஷ்மியும் ரோஹிணியும் நன்ருக அறிவார்கள்: ஆகவே அரசன் வேண்டுகோளுக்கு இணங்கி அவன் உதவியை ஏற்றுக் கொள்ளாமல் வேறு என்ன செய்ய முடியும்?

## 11. திருப்பணி தரிசனம்

மும்முடி நாய்க்கன் தன் கண்களையே நம்பவில்லை. கட்டிட வேலை அவ்வளவு அழகாக நடந்து வந்தது. தான் அதுகாறும் அந்தத் திருப்பணியை வந்து பார்த்துப் போகவில்லையே என்று அவன் உள்ளுக்குள்ளே வருத்தப்பட்டுக் கொண்டான்.

கோயில் நிர்மாணம் ஆகி வருவதை அவன் அறிவான். ஆனல் அதுகாறும் அவன் நெருங்கி வந்து அதைப் பார்த்ததில்லை. அவன் முதலில் அந்தத் திருப்பணியிலே அதிகமாகச் சிரத்தை கொள்ள வில்லை என்பது உண்மைதான். எனினும் அப்பால் லக்ஷ்மிக்குப் பணம் கொடுத்து உதவ முன்வந்த பிறகும் அவன் திருப்பணி வேலையை வந்து பார்த்துப் போகத் தயங்கினன். அவன் அவ்விதம் ஒதுங்கி நின்ற காரணமும் வெளிப்படையானதே.

அதுகாறும் நெருங்கிச் சிரத்தை கொள்ளாத அவன் இப்போது அது விஷயமாகத் தன் கவனத்தைச் செலுத்தினல் எங்கே லக்ஷ்மியும் ரோஹிணியும் வேறு விதமாக ஏதாவது நினைத்துக்கொண்டு விடுவார்களோ என்றே பயந்தான். 'எதற் காக அவர்களை அடைமானமாகப் பெற்ருேம்?' என்று அவன் தன்னைத் தானே நொந்துகொண்டான்.

அதுதான் அவனுக்குப் பெருந் தடையாக நின்றது. அவன் பணம் கொடுத்து அவர்களை அடைமானமாக வாங்கியிராமல் இருந்தால் இப்போது அவன் திருப்பணி வேலையைச் சிரத்தை யுடன் கவனித்து முடித்து வைப்பதில் எந்தவிதமான பேச்சுக்கும் இடம் இருக்காது. ஆனல் இப்பொழுதோ நிலைமை வேறு. அவன் மீது தோஷம் கற்பித்துக் குறைகூறப் பலரும் முன் வரக்கூடும்.

'அரசன் லக்ஷ்மியையும் ரோஹிணியையும் அடிமைகளாக வாங்கிவிட்டான். அவன் ரோஹிணிமீது காதல்கொண்டு அவளை மணம் புரியவேண்டும் என்று எவ்வளவோ பாடுபட்டான். ஆனல் அந்தப் பெண்ணும் அவள் தாயும் அதற்கு இணங்கவில்லை. இப் போதோ அவன் அவர்களை அடிமைகளாக விலைக்கு வாங்கியாகி விட்டது. இனி அவன் ரோஹிணியை யுணந்துகொள்வதை யாரும் தடுக்க முடியாதே! திருப்பணி வேலையைச் சீக்கிரம் முடித்து விட்டு அவளை அடையவே அவன் இப்போது கோயில் நிர்மாணத் தைக் கண்காணித்து வருகிருன்'—இவ்விதம் ஊரார் தன்னைப் பழிக்க ஆரம்பித்துவிட்டால் அவன் என்ன பதில் சொல்லமுடியும்? அவ்விதமான பழிப்பு தன்மீது ஏற்படாதவாறு அவனுல் தடுக்கவும் முடியாது. தெய்வமும் அவனை அசந்தர்ப்பமான அந்த நிலையில் வைத்துவிட்டது.

ஊரார் தன்மீது ஏதாவது குறை கூறுவார்களோ என்பதைப் பற்றிக்கூட மும்முடி நாய்க்கன் அதிகமாகக் கவலைப்படவில்லை. லக்ஷ்மியும் ரோஹிணியும் என்ன நினைத்துக் கொள்வார்களோ என்றே அவன் மனம் கலங்கினன்.

'அரசன் தங்களை விலைக்கு வாங்கியதாலேயே திருப்பணி வேலையில் அக்கறை கொண்டு அதைக் கவனித்து வருகிருன்' என்று அவர்கள் நினைத்துவிட்டால் என்ன செய்வது என்றே அவன் பயந்தான். அவர்களும் அவ்விதம் நினைப்பதற்கு அனுகூல மாகவே சந்தர்ப்பங்கள் சேர்ந்திருந்தன.

இத்தகைய காரணங்களாலேதான் அரசன் கோயில் பக்கம் எட்டிப் பார்க்கவில்லை. அன்றைத் தினம் அவன் அகஸ்மாத்தாக அந்தப் பக்கம் சென்ருன். அவன் வருவதை அறிந்தவுடனே திருப் பணியைக் கண்காணித்து வந்த தலைமைச் சிற்பி அரசனை எதிர் கொண்டு சென்ருன். 'மஹாராஜா அவர்கள் ஒரு தரம் வந்து திருப்பணி வேலையைப் பார்த்தருள வேண்டும்' என்று வேண்டிக் கொண்டான்.

அரசனுக்கு என்னவோ தானகவே எப்படியாவது அதை ஒரு தடவை போய்ப் பார்த்துவர வேண்டும் என்று உள்ளூற எண்ணம். ஆனல் அதை நிறைவேற்ற வழியறியாமல் திகைத்து வந்தான். தலைமைச் சிற்பியே தன்னை வந்து அழைக்கும்போது அவன் போய் வருவதற்கு என்ன தடை?

லக்ஷ்மியின் புகழ் நாடெங்கும் பரவியிருந்தது. அந்தக் கோயில் நிர்மாணத்தை ஓர் அதிசயமாக ஊரார் பேசி வந்தனர். அதைத் தரிசித்துப் புண்ணியம் பெறுவதற்காக மக்கள் வெகு தூரத்திலிருந்தும் கோறுகொண்டாவுக்கு வந்து போய்க்கொண் டிருந்தனர். அவ்விதம் வெளியூர்களிலிருந்து பலர் வந்துபோயும், சமீபத்திலே வசித்துவந்த அரசன் மட்டும் அந்தப் பக்கமே எட்டிப் பார்க்காமல் இருந்தது தலைமைச் சிற்பிக்கு வியப்பாகத்தான் தோன்றியது. அதனல் அவனே மன்னனை ஒரு தடவை நேரில் கண்டு பேசி அவ்விடம் அழைத்துவர வேண்டும் என்று எண்ணி இருந்தான். நாட்டின் அரசனே ஒருதரம் வந்து திருப்பணியைப் பார்வையிட்டுப் போவது சிற்பிக்கு மிக்க கௌரவம் அன்ருே? ஆனல் அதற்குச் சந்தர்ப்பம் கிட்டவில்லை. தவிர, திருப்பணி வேலையை நடத்திவரும் அந்தப் பெண்மணிகள் என்ன சொல்வார் களோ என்றும் அவன் பயந்தான்.

இப்போது மும்முடி நாய்க்கனே அந்தப் பக்கம் வந்தவுடன் நீண்ட காலமாக இருந்த தன்னுடைய அபிலாஷையைப் பூர்த்தி செய்ய முற்பட்டான் சிற்பி. அரசனும் சிற்பியின் கோரிக்கையைத் தட்டமாட்டாமல் குன்றின்மீது ஏறிச் சென்று திருப்பணியைப் பார்வையிட்டு வந்தான்.

கட்டிட வேலை துரிதமாகவே நடந்துவந்தது. தொழிலாளி கள் தாங்கள் செய்து முடிக்க வேண்டிய காரியத்தின்மீதே கண் ணும் கருத்துமாகச் சித்தத்தைப் பிற விஷயங்களில் அலையவொட்

டாமல் நிலை நிறுத்தி வேலைசெய்து வந்தார்கள். சிற்பிகளும் ஸ்தபதியும் உளிகொண்டு கருங்கல்லைச் செதுக்கி வர்ண விசித்திரமான பதுமைகளை நிர்மாணித்து வந்தார்கள்.

அரசன் அந்தக் காட்சியிலே தன்னை மறந்து அங்கேயே நின்றுவிட்டான். அதைப்போலவே அவன் வந்திருப்பதையும் மற்றவர்கள் கொஞ்சமும் கவனிக்கவில்லை. அவர் அவர் தங்கள் தங்கள் வேலையிலே ஆழ்ந்து மெய்ம்மறந்து அதைச் செய்து வந்தனர். தலைமைச் சிற்பியே அரசனைச் சுற்றி அழைத்துச் சென்று எல்லாவற்றையும் காட்டினான்.

மும்முடி நாயக்கன் எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்தாகி விட்டது. ஆனால் அவன் அவ்விடத்தில் வேறு யார் யாரைச் சந்திக்கலாமென்று எதிர் பார்த்தானோ அவர்களை அங்கே காண வில்லை. அவன் அந்த இடம் வந்தது முதல் அவன் கண்கள் எங்கெங்கும் சுற்றி அலைந்தன. ஆம், லக்ஷ்மியையும் ரோஹிணியையும் காண ஆவல்கொண்டு தேடின.

அவன் ஏமாற்றம் அடைந்தான். அவர்கள் அவ்விடம் இருந்தாலன்றோ அவர்களைப் பார்க்க முடியும்?

'ஏன் அவர்கள் அவ்விடம் இல்லை?' இந்தக் கேள்விக்கு அவன் எப்படிப் பதில் கூற முடியும்? அதை அவன் வாய்விட்டுக் கேட்பதற்கும் முதலில் சிறிது அஞ்சினான். எனினும் ஆசை வெட்கம் அறியுமா? கடைசியாகத் தன்னை ஒரு விதமாகச் சமாளித்துக்கொண்டு சிற்பியிடம் அதை வாய்விட்டுக் கேட்டே விட்டான்.

"பெரியம்மாவுக்கு உடல் நலம் சரியாக இல்லை. அதனால் குழந்தை அவர்களைப் பார்த்துச் சுச்ருஷை செய்துகொண்டு வீட்டில் இருக்கிறது."

இதை மிகுந்த தயக்கத்துடன் கூறினான் தலைமைச் சிற்பி. அந்த இரு பெண்மணிகளுக்கும் அரசனுக்கும் உள்ள பரிசயத்தைச் சிற்பி ஓர் அளவு அறிந்திருந்தான். அதனாலே மன்னனிடம் தான் எவ்வளவு தூரம் விஷயத்தைக் கூறலாம் என்பதை உணராதவனாக அவன் பதில் சொன்னான்.

ஆனால் அரசனோ அதைக் கேட்டதும் சிறிது மயங்கினான்.

"பாவம்!..................எத்தனை நாட்களாக?"

"அவர்கள் சென்ற ஒரு மாச காலமாகவே படுத்திருக்கிறார்கள். நடுவில் அவர்கள் உயிருக்கே ஆபத்து நேரிடுமோ என்ற கவலையும் இருந்தது. ஆண்டவன் அருளால் அவர்கள் அந்தக் கண்டத்திலிருந்து இப்போது தப்பிவிட்டார்கள்."

இதைக் கூறும்போது தலைமைச் சிற்பியின் குரலில் திருப்தியின் பெருமிதம் தொனித்தது. ஆனால் மும்முடி நாயக்கனோ திடுக்கிட்டுப் போனான்.

"என்ன?"

அரசனுக்கு மேலே எதைக் கேட்பது என்று விளங்கவில்லை ; திகைத்துவிட்டான். சிற்பியோ உலகானுபவம் மிகுந்த சாமர்த்தியசாலி. அரசன் எதைக் கேட்கவேண்டும் என்று எண்ணிக் கேட்கும் வகை யறியாமல் திகைத்து நின்றுன் என்பதை எளிதில் உணர்ந்துகொண்டான். அதனுல் அவனுகவே பதில் அளித்து விட்டான்.

" திருப்பணி வேலையையும் குழந்தைதான் மேற்பார்வையிட்டு வருகிறது." அதனேடு அவன் நின்றுவிடவில்லை. " ஆயினும் அவர்கள் இவ்விடம் வந்து போகாவிட்டாலும் திருப்பணி வேலை கொஞ்சங்கூடத் தவக்கம் இல்லாமல் கிரமமாக நடந்தேறிவிடும். நாங்கள் எல்லோரும் அதற்காகத் தானே இருக்கிறேம்?"

சிற்பி இவ்விதம் கூறியதைக் கேட்டபோது, மும்முடி நாய்க்கன் தன்னையும் அறியாமல் ஆழ்ந்த பெருமூச்சு விட்டான். அவன் இருதயத்தை அமுக்கி வந்த ஒரு பெரும் பாரம் நீங்கியது என்பதை அது வெளிப்படையாக எடுத்துக் காட்டியது.

ஆண்டவன் தன் அருளுக்குப் பாத்திரமானவர்களையே அதிகமாகச் சோதிப்பான். ஈசுவர சிருஷ்டியின் விநோதங்களில் இதுவும் ஒன்று. வாழ்க்கைத் துன்பங்களையும் கஷ்டங்களையும் அனுபவிப்பதாலேதான் மனசு பண்பட்டுப் பக்குவ நிலை அடைகிறது என்பதே அவன் அருள்நோக்குப் போலும்! ஆனுல் அந்த அக்கினிப் பரீக்ஷையில் தேறி மீளுவதுதான் சிரமமானது.

மனுஷ்ய தேகம் செங்கல் சுண்ணும்பால் ஆன கட்டிடம் அன்று ; ரத்தமும் மாமிசமும் சேர்ந்த பிண்டமே. அதனுல் அது தாங்கக்கூடிய கஷ்டங்களுக்கும் ஓர் அளவு உண்டு.

உயிர் இல்லாத இயந்திரங்கூடச் சிறிதும் ஓய்வில்லாமல் சதா வேலை செய்துகொண்டிருக்க முடியாது. என்னதான் எண்ணெய் போட்டு அதைப் பக்குவப்படுத்தினுலும் அது காலக்கிரமத்தில் தேய்ந்து ஓடு ஆகி வேலை செய்ய மறுத்துவிடுகிறது. அப்படியிருக்க, உயிர்ப் பிராணியான மனிதன் எம்மாத்திரம்? உணர்ச்சி வசப்பட்டு, தன் களைப்பை மறந்து, காரியம் முடியவேண்டுமே என்னும் வேகத்தால் சிறிதும் சோம்பாமல் வேலை செய்து வந்தாலும், அது நீண்ட காலம் நீடித்து நிற்காது.

லக்ஷ்மி ஒரு மாசமாகப் படுத்த படுக்கையாகக் கிடந்துவந்தாள். அதற்கு முன்னர் அவள் ஒரு நாளாவது தலைவலி யென்று படுத்தது இல்லை. அதனுல் அவள் தன் தேக அசௌக்கியத்தை முதலில் பொருட்படுத்தவில்லை. இரண்டொரு நாட்களில் தானுகவே குணமாகிவிடும் என்று எண்ணிச் சும்மாயிருந்து விட்டாள்.

மனிதப் பிறவியின் சக்தி அது. உடல் நிலையிலே ஏற்படும் சில்லறைக் கோளாறு அதுவாகவே மாறிச் சீர் பெற்றுவிடும். உடல் அமைப்பின் இயற்கை அது. சீதோஷ்ணத்தின் ஏற்றத் தாழ்வுகளைத் தானுகவே சமன் செய்துகொள்ளும் சக்தி வாய்ந்தது.

இவைகளெல்லாம் மனித உடலிலே வலிமை இருக்கும் வரையில்தான். வலிமை குறைந்து தளர்ச்சி மேலிட்டுப் போனால், அது காறும் உள்ளூற அடங்கிக் கிடந்த நோய் நொடிகள் எல்லாம் வெளிப்பட்டு ஆளைக் கீழே தள்ளிவிடும். லக்ஷ்மி அந்த ஸ்திதியிலேதான் கிடந்தாள்.

கோயில் நிர்மாணம் ஆரம்பித்தது முதல் லக்ஷ்மி அதற்காகப் பம்பரம்போலச் சுற்றி உழைத்து வந்தாள். நான்கு வருட காலத்துக்கு மேலாகக் கொஞ்சமும் சலியாமல் பாடுபட்டு வந்ததன் பலனாக அவள் தன் பழைய வலியை இழந்துவிட்டாள். அன்றி, அவளுக்கு வயசும் ஆகிவிட்டதே.

வியாதியஸ்தர்கள் குணமடைவதற்கு அவர்கள் மனக் கவலையை நீக்குவதே முதல் மருந்து. வேளைக்குத் தக்க ஆகாரம் கொடுத்துப் போஷித்து வருவதும், வியாதியின் குணத்துக்கு மாற்றான மருந்து கொடுப்பதும் இரண்டாம் பக்ஷமே. மனக்கவலை நீங்காவிட்டால் எவ்வளவுதான் ஜாக்கிரதையாக வைத்தியம் செய்துவந்தாலும் வியாதியஸ்தன் குணம் அடையமாட்டான்.

லக்ஷ்மியின் மனக்கவலை தேவகாரியம் எப்போது பூர்த்தியாகும் என்பதே.

ரோஹிணியோ சின்னஞ் சிறு பெண். உலகானுபவம் அதிகம் இல்லாதவள். லக்ஷ்மி நோய்வாய்ப்பட்டுப் படுத்ததிலிருந்து அவளுக்குச் சுச்ருஷை செய்வது முதல் கோயில் நிர்மாண வேலையைக் கவனிப்பது வரையில் எல்லாக் காரியங்களையும் ரோஹிணியே கவனிக்க வேண்டி ஏற்பட்டு விட்டது.

தனியாக அவளால் எல்லாவற்றையும் எப்படி நிர்வகிக்க முடியும்? ஏதோ இடையூறு நேரிடாமல் காரியங்கள் ஒருவிதமாக நடந்தேறி வந்தன. ஆனால் ரோஹிணிக்குத்தான் மன நிம்மதி இல்லை.

லக்ஷ்மி தன் மகளைப் பற்றியும் கவலை கொண்டாள். தன்னைப் போலவே ரோஹிணியும் எங்கே படுக்கையாக விழுந்து விடுவாளோ என்று ஏங்கினாள். அந்த நிலை ஏற்படாதவாறு அருள் புரிய வேண்டும் என்று அவள் சதா எம்பெருமானைப் பிரார்த்தித்து வந்தாள்.

"என் அம்மா, வீணாக உடம்பை அலட்டி மனத்தைப் புண் படுத்திக் கொள்கிறாய்? எம்பெருமான் நமக்கு ஒரு குறையும் வைக்கமாட்டான். அவன் திருவுள்ளச் சம்மதம் இல்லாமல் எந்தக் காரியமும் நடைபெறாது."

இவ்விதம் ரோஹிணி தன் தாய்க்கு அடிக்கடி சமாதானம் கூறுவாள். எனினும் அவளே சிற்சில சமயங்களில் தான் கூறுவதைப் பற்றிச் சந்தேகம் கொள்வாள்; காரியம் இனிதாக முடிவுற வேண்டுமே என்ற கவலையை அடைவாள். அப்போதெல்லாம் அவள்முழுமுடி நாய்க்கனை மனமாறக்கடிந்துகொள்வது இயற்கை.

தான் அப்போது அனுபவிக்கும் கஷ்டங்களுக்கெல்லாம் அவனே காரணபூதன் என்று அவள் தீவிரமாக நம்பி வந்தாள். அவன் வாக்குறுதியை நிறைவேற்றி யிருந்தானுகில் லக்ஷ்மியோ ரோஹிணியோ இவ்விதம் துன்பங்களை அனுபவிக்க வேண்டி நேரிட்டிராதன்றே?

## 12. அரசன் அனுதாபம்

"ரோஹிணி, உன் தாயாருக்கு உடம்பு எப்படி இருக்கிறது? ஒரு மாச காலமாகப் படுத்திருக்கிருர்களாமே? எனக்குத் தெரியவே தெரியாதே. ஏன் ஒரு வார்த்தை சொல்லியனுப்பக் கூடாது? அரண்மனை வைத்தியரை அனுப்பியிருப்பேனே."

இவ்விதம் ஒன்றன்பின் ஒன்ருக அடுக்கிக்கொண்டே போனன் மும்முடி நாய்க்கன். அந்த கேள்விகளுக்குச் சரியான பதில் ரோஹிணி சொல்வது சிரமந்தான். அரசனும் அந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை. தன் உணர்ச்சியை வெளிக்காட்டி அந்தச் சிறு பெண்ணுக்கு ஆறுதல் அளிக்கவே அவன் அவ்விதம் கூறினன்.

சிற்பியிடம் முழு விவரத்தையும் அறிந்த மன்னன் நேரே அரண்மனை திரும்பாமல் லக்ஷ்மியின் வீடு தேடி வந்தான். தான் அவ்விதம் செய்வது தன் கௌரவத்துக்கு இழுக்காகுமாவென்றும் அவன் யோசிக்கவில்லை.

அரசனைக் கண்ட ரோஹிணி திகைத்து நின்ருள். அவனை எவ்விதம் வரவேற்பது என்பதை அவள் அறியவில்லை. ஏன்? அவனை வரவேற்கவே அவள் மறந்துவிட்டாள்.

ஆனல் அரசன் அதை லக்ஷ்யம் செய்யவே இல்லை. அவளுடைய முகக் குறிப்பினின்றும் அவளது மனத்தே தோன்றிய உணர்ச்சிகளை அறிந்துகொண்டு விட்டான்.

'இத்தனை காலமாக இல்லாமல் இப்போது மட்டும் எதற்காக அரசர் நம் வீடு தேடி வரவேண்டும்?' என்றே அதிசயப்பட்டாள் ரோஹிணி. அவன் வரவை அவள் விரும்பவில்லை. நல்லெண்ணத்துடனே அவன் வந்திருக்கக் கூடும் என்று அவள் எண்ணினல் தானே! ஏதோ ஒரு சுயநலத்தை முன்னிட்டே அரசன் தங்கள் வீட்டுக்கு வந்திருக்கிருன் என்றே அவள் தீர்மானித்தாள்.

மும்முடி நாய்க்கனுக்கு லக்ஷ்மியிடமோ ரோஹிணியிடமோ பழைய அன்பும் பரிவும் இருந்திருக்குமானல் அவன் இத்தனைநாட்களாகச் சும்மா இருந்திருக்கமாட்டானே. முதலில் தான் அப்படியிருந்துவிட்டாலும், அவர்கள் படும் கஷ்டம் முழுவதையும் அறிந்து அதைப் பரிகரிப்பதாகக் கூறிப் பொருள் உதவிய பிறகாவது அவன் கொஞ்சம் சிரத்தை கொண்டிருக்க மாட்டானு?—

இவ்விதமே ஓடியது ரோஹிணியின் சிந்தனை. ஆயினும் அதற்காக அவள் அப்போது என்ன செய்ய முடியும்? தங்கள் வீடு தேடி வந்த அரசனைப் புறக்கணிக்க முடியுமா? 'இந்த ஏழையின் குடிசை தாங்கள் வருவதற்கு அருகதையற்றது. ஆகவே தாங்கள் இவ்விடம் வரவேண்டாம்' என்று அவள் கூறலாமா! அது அவர்கள் குலதர்மத்துக்கு விரோதமானது மட்டுமன்று; மனிதப் பிறவியே செய்யக் கூடாத காரியம். தங்கள் வீடு தேடி வந்தவன் சத்துருவாக இருந்தாலும் அவனை மலர்ந்த முகத்துடன் இன்சொல் கூறி வரவேற்க வேண்டியதுதான் முறை.

அரசன் கேட்பதற்கு ரோஹிணி ஒன்றும் பதில் கூருமலும் இருக்க முடியாதே! அதனால் அவள் யந்திரம்போல ஏதோ பதில் சொல்லிக்கொண்டே அரசனை மாளிகைக்குள் அழைத்துச் சென்ருள். மேல் மாடத்திலே லக்ஷ்மி படுத்திருந்த அறைக்குப் போனுர்கள் இருவரும்.

பழம் பொலிவு முழுதும் மாறி எலும்பும் தோலுமாகப் படுக்கையில் கிடந்த லக்ஷ்மியைக் கண்டவுடனே மும்முடி நாய்க்கன் கண்களிலும் நீர் சுரந்தது. அதுகாறும் அடங்கிக் கிடந்த உணர்ச்சிகளெல்லாம் வெளிப்பட்டன.

"லக்ஷ்மி, நீ என்னை மன்னிப்பாயா? நான் பெருத்த அபராதம் செய்துவிட்டேன். அதன் முழு அளவையும்நான் இப்போது தான் உணர்ந்தேன்."

இவ்வாறு அரசன் தன் அந்தக்கரண சுத்தியுடன்தான் சொன்ஞன். உலகத்திலே தன் பிழையை உணராத மனிதனே இல்லை. ஆனல் அதை அவன் எளிதில் ஒப்புக்கொள்ளமாட்டான். அவ்விதம் செய்வதனின்றும் அவனைத் தடுத்துக் குறுக்கே நிற்பது வறட்டுக் கெளரவம். அந்த அசட்டுக் கெளரவத்தை ஒருவன் எப்போது உதறித் தள்ளி உண்மையை உள்ளபடியே தெரிவிக்க முற்படுகிருனே அப்போதுதான் அவன் வாழ்க்கையின் பலனை அடைகிருன்; சிறப்பை எய்துகிருன்.

அரண்மனை வைத்தியர் பரஹிதாசாரியரின் பெயர் உலகப் பிரசித்தம். வைத்தியரை நீலகண்டனை சிவபெருமான் அவதாரம் என்றே ஜனங்கள் கூறுவது வழக்கம். பாம்பு கடித்த ஏழை ஒருவன் சாகுந் தறுவாயில் கிடந்தான். வைத்தியர் அவனைத் தற்செயலாகப் பார்த்துவிட்டார். உடனே கடிவாயில் தம் வாயை வைத்து விஷத்தை உறிஞ்சினர். தம் கடைவாயில் இருந்த புண்ணையும் அவர் பொருட்படுத்தவில்லை. வைத்தியம் பலித்தது. பிணியாளன் பிழைத்து எழுந்தான். அந்த விஷம் வைத்தியரையும் ஒன்றும் செய்யவில்லை. உலகத்து ஜீவராசிகளைக் காக்கவேண்டி ஆலகால விஷத்தை விழுங்கிய நீலகண்டனைப் போலத்தானே வைத்தியரும் பாம்பின் விஷத்தை உறிஞ்சினர். விஷம் இருவரையும் பாதிக்கவில்லை.

ஏற்கனவே அவரே லக்ஷ்மியின் நோய்க்கு வைத்தியம் செய்துவந்தார். அவர் பெயரே பரஹிதாசாரியார் ஆயிற்றே. பிறர்

நன்மையைத் தானே அவர் சதா கோரி வந்தார்? அப்படியிருக்க, நாட்டு மக்களுக்கு மகோந்நதமான உதவியைச் செய்து வந்த லக்ஷ்மியின் வியாதியைப் பற்றிக் கேட்டபோது அவர் சும்மா இருந்து விடுவாரா? அவர்தாமே ஓடோடியும் வந்து லக்ஷ்மிக்கு வைத்தியம் பார்த்தார். பிரதிப் பிரயோஜனத்தை எதிர்பார்த்தால் தானே சிபார்சையோ கௌரவத்தையோ கவனிக்க வேண்டும்?

பரஹிதாசாரியரே வந்து லக்ஷ்மியைக் கவனித்து வருகிறார் என்பதை அறிந்தபோது அரசனுக்கு மனத்தில் இருந்த பாரம் கொஞ்சம் குறைந்தது. கூடிய விரைவில் அவள் பிழைத்து எழுந்து விடுவாள் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது.

ஆயினும் அவள் முன்போலவே கோயில் நிர்மாண வேலையைக் கவனிக்கக் கிளம்புவதற்கு நீண்டகாலம் ஆகுமே! அதுவரையில் அவர்களுக்கு எத்தகைய மனக்கவலையும் உண்டாகாதவாறு ஏற்பாடுகள் செய்ய வேண்டியது அவசியமாயிற்றே! கொஞ்சமும் கால தாமதமின்றி அதைத் தானே செய்வதாகவும் அவன் நிச்சயித்தான். ஆனால் அதை அவன் முழுதும் மனம்விட்டு வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை. ரோஹிணி அதை எவ்விதம வரவேற்பாளோ என்றே மயங்கினான் போலும். எனினும் அவன் உள்ளத்தை முகக் குறிப்பு எடுத்துக் காட்டிவிட்டது.

அதைக் கண்ட லக்ஷ்மிக்கு மனக்கவலை நீங்கிவிட்டது. திருப்பணி வேலையை அரசனே முன்னின்று முடித்து வைப்பான் என்ற நிச்சயம் அவளுக்கு ஏற்பட்டது. அதனோடு தன் கோரிக்கையும் எப்படியாவது சமீபகாலத்தில் பூர்த்தியாகிவிடுமோ என்ற சிறு நம்பிக்கையும் உதயம் ஆயிற்று.

ஆனால் அதற்கு மாறாக ரோஹிணியின் உள்ளத்தே இருள் கவிந்து கொண்டது. அவள் கண்ணைப் புகைப் படலம் மறைத்தது. தங்களை விலக்குவாங்குவதற்குத் தான் கொடுத்த பணத்தைக் காப்பாற்றுவதற்காகவே அரசன் அவ்விடம் வந்திருக்கிறான் என்ற எண்ணம் அவள் மனத்தைவிட்டு அகலவில்லை.

## 13. ரோஹிணியின் உள்ளத்தெளிவு

"என்ன இருந்தாலும் அவர் பரம்பரைப் பெரிய மனிதர் அன்றோ? நாட்டின் அதிபதி. குடிமக்கள் யாவருக்கும் தந்தையாக விளங்கும் அவர் என்னை ஒருநாளும் கேவலமாக நடத்த மாட்டார். அன்றி, அவருக்கு என்மீது..."

இவ்விதம் நினைத்த ரோஹிணிக்கு மேலே எண்ணம் ஓடவில்லை. கன்னங்கள் சிவந்தன; கண்கள் மலர்ந்து வாய் புன் சிரிப்புக்கொண்டது. உள்ளத்திலே உவகைபோன்ற ஓர் உணர்ச்சி பொங்கி எழுந்தது. அவளை ஒரு விதமான வெட்கம் பிடித்துக் கொண்டது. தலை கவிழ்ந்து படுத்துக் கண்களை மூடினாள். உள்ளப் பூரிப்பால் புள

காங்கிதம் அடைந்த அவள் தன்னை மறந்து, உலகத்தையே மறந்து, மனத்தை வெட்ட வெளியில் சஞ்சரிக்க விட்டாள். அப்படியே அவள் தன்னையும் அறியாமல் சிறிதுநேரம் கண் அயர்ந்தாள்.

உணர்ச்சி வேகத்திலே சிக்குண்டு கிடந்த அவள் தன் உடம்பு முழுதும் கணுக் கணுவாகக் கண்டிருந்த வலியை அறியவில்லை. ஆனால் அந்த வேகம் தணிந்து அயர்ச்சி அவளை ஆட்கொண்டதும் பழையபடியே வலியும் தோன்றி அவளை வதைத்தது. திடுக்கிட்டுக் கண் விழித்துப் படுக்கையில் புரண்டாள். யாரோ சம்மட்டி கொண்டு அடிப்பது போன்ற தலைவலி. அதனோடு மண்டையிலே ஒரு கனம். அவளால் எழுந்து உட்காரவும் முடியவில்லை. கண்களைத் திறக்க முடியாமல் ஒரே எரிச்சல்! இது வரையில் தான் பட்ட கஷ்டங்களுக்கு ஒரு முடிவு ஏற்பட்டு, காரியம் கைகூடும் சமயத்தில் தனக்கு இப்படி உடம்புக்கு வந்து விட்டதே என்ற ஒரே ஏக்கம் அவளை வாட்டியது.

கோயில் திருப்பணி வேலை முடிந்து விட்டது. கும்பாபிஷேகத்துக்கும் நாள் குறித்தாகி விட்டது. அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் வேகமாக நடந்தேறி வந்தன. இடையிலே அதிகநாளும் இல்லை. அதற்குள்ளாகத் தனக்கு உடம்பு நன்றாகக் குணமாகி விடவேண்டுமே என்றுதான் ஏங்கினாள்.

அவள் படுக்கையை விட்டு எழுந்திருக்கக் கூடாது என்று வைத்தியர் கண்டிப்பாகத் திட்டம் செய்திருந்தார். அவளுக்கு எவ்விதமான கவலையும் தொந்தரவும் இல்லாமல் பூரண ஓய்வு ஒன்றுதான் தேவை. அவள் அவ்விதம் ஒரு வார காலத்தைக் கழித்து விட்டால், உடம்பு பழையபடி நல்ல நிலைக்கு வந்துவிடும் என்று அவர் கூறியிருந்தார்.

ஆனால் சும்மா இருக்கத்தான் அவளால் முடியவில்லை. அவள் நினைவு முழுதும் கோயில் நிர்மாணத்தைப் பற்றியதாகவே இருந்தது. அங்கே நடந்து வந்த காரியங்களைப் பற்றியே அவள் சதா சிந்தித்துவந்தாள். அவள் மனத்தை அவ்விடம் இழுத்தது திருப்பணி வேலையில் அவளுக்கு இருந்த சிரத்தை மட்டுந்தானா? அரசன் மும்முடி நாய்க்கனும் அன்றோ அவ்விடம் இருந்து வந்தான்.

மும்முடி நாய்க்கனும் அவசரமான அரசாங்க காரியங்களைக் கவனிப்பதுபோக மற்றப் பொழுதைத் திருப்பணியைக் கண்காணித்து நடத்திவைப்பதிலேயே செலவழித்து வந்தான். அன்றொரு நாள் அவன் லக்ஷ்மிக்கும் ரோஹிணிக்கும் அவர்கள் வீட்டுக்குச் சென்று தைரியம் கூறி ஆறுதல் அளித்து வந்தது முதல் அவனும் அந்தக் கைங்கரியத்திலே ஈடுபடத் தொடங்கினான்.

அப்போது ரோஹிணி அதை விரும்பவில்லையென்பது உண்மைதான். ஆனால் இன்றைக்கோ அவள் பிழைத்திருப்பது மும்முடி நாய்க்கன் உதவியாலேதான். கால் தவறி அவள் விமானத்தி

லிருந்து கீழே விழுந்த போது அவன் ஓடோடியும் வந்து தாங்கிப் பிடித்ததாலேதான் அவள் பாறையில் விழுந்து அடிபட்டு மண்டை சிதறி உயிர் துறக்காமல் தப்பினுள்.

அதை நினைத்துப் பார்க்கவும் அவளால் கூடவில்லை. உடல் நடுக்கம் கொண்டது. அவ்விதம் நேரும் என்பதை அவள் எதிர் பார்க்கவேயில்லை. ரோஹிணி வழக்கம் போலத்தான் கோயில் நிர்மாணம் நடக்கும் இடத்துக்குச் சென்றிருந்தாள். விமானத்தின் மீது சிற்பிகளும் சித்திரகாரர்களும் வேலை செய்து வந்தார்கள். கோபுரத்தைத் தாங்கும் பொம்மைகளை அமைத்து அவற்றிற்கு வர்ணம் தீட்டி வந்தனர். ஆகமப்படி, சம்பிரதாயமான உருவங்களை—நம் நாட்டுக் கலையின் மேன்மையை விளக்கிப் பலருக்கும் எடுத்துக் காட்டாக நிற்கக் கூடிய உருவங்களை—எல்லாம் அங்கே அமைத்து வந்தனர், சிற்பிகள். அவற்றுள் நடனப் பெண் உருவம் ஒன்றும் இருந்தது.

அதை மிக்க அழகாகத்தான் சமைத்திருந்தான் சிற்பி. எனினும், அதன் முக பாவத்திலே சில சிறு மாறுதல்களைச் செய்தால் அது இன்னும் கம்பீரமாகக் கண்டோரை மயக்கும்படி அமையும் என்பதை ரோஹிணி எளிதில் கண்டுகொண்டாள். நடனக் கலையின் நுட்பத்தையும் அதன் பாவங்களையும் நன்ருக அறிந்திருந்த அவளுக்குத் தெரியாமல் அதைப் பிறர் அறிய முடியுமோ? தான் பக்கத்தில் இருந்து தன் இஷ்டப்படி அந்த மாறுதலைச் செய்யும்படி தூண்டினுள் சிற்பியை. அவள் விரும்பிய படியே வர்ணமும் தீட்டியாகிவிட்டது.

சித்திரகாரன் தன் கைத்திறனையே எட்ட நின்று தலையை இப்படியும் அப்படியும் சாய்த்துச் சாய்த்துப் பலவகைக் கோணங்களிலிருந்தும் கண்டு ரஸிப்பது சகஜமானது. ரோஹிணியும் ஒரு சித்திரகாரிதானே? அந்த உருவத்தின் அப்போதைய உன்னத அழகுக்கு அவள் தானே காரணம்? எட்ட நின்று அதன் அழகை அள்ளிப் பருக எண்ணி அவள் கொஞ்சம் கொஞ்சமாகப் பின்னல் நகர்ந்தே சென்று கொண்டிருந்தாள். அவள் தன்னை மறந்து சித்திரத்தை ரஸிப்பதிலேயே லயித்து விட்டாள். அதனல் அவள் விமானத்தின் ஓட்டுக்கு வந்து விட்டதை உணரவில்லை. இன்னும் ஓர் அடி பின் வாங்கி இருந்தால் அவள் தலை குப்புறக் கீழே விழுந்திருப்பாள்.

அதைப் பார்த்துவிட்டார்கள் சிற்பிகள். அவர்கள் திகைத்துப் போனர்கள். ஆனல் அவளை எச்சரித்துத் தடுப்பது எப்படி? அவளைக் கூப்பிட்டுச் சொல்வதென்பது முடியாது. அவ்விதம் செய்வதே அவளுக்கு ஆட்டத்தைக் கொடுத்து விடும். அவள் மறு அடி எடுத்து வைப்பதற்கு முன் யாராவது ஓடிப்போய் அவளைப் பிடித்து அபாயம் இல்லாமலிருக்கும் பக்கமாக இழுத்துக் காப்பதே முறையாகும். அவ்விதம் எச்சரிப்பதற்காகவே அவர்கள் முன் வந்தனர். ஆனல் அவர்களுடைய பரபரப்பைக் கண்ட ரோஹிணி திடுக்கிட்டு, சட்டென்று திரும்பித் தன் பின்புறம்

நோக்கினாள். மேலே என்ன நடந்தது என்பது அவளுக்குத் தெரியாது. அவள் தலை கிறு கிறுத்தது. எதைத் தவிர்க்க வேண்டிச் சிற்பிகள் ஓடி வந்தார்களோ அது நடந்து விட்டது. ரோஹிணி நிலை தடுமாறி மேல் தளத்திலிருந்து கீழே விழுந்து விட்டாள்.

நல்ல வேளையாக மும்முடி நாய்க்கன் கீழே பக்கத்தில் நின்று கொண்டிருந்தான். அவன் குறுக்கிட்டு அவளைக் கட்டிப்பிடிக்க முயன்றான். அது சாத்தியமாகுமா? முடியவில்லை. இருவரும் கட்டிப் புரண்டு கீழே விழுந்தனர். ரோஹிணி கீழே விழுந்த பாரத்தை அவன் தன்மீது தாங்கி அவளுக்கு அதிகக் காயம் ஏற்படாமல் செய்தான். ஆனால் அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி நீங்கவில்லை. அரசனுக்கும் சொற்பக் காயம் ஏற்பட்டது.

ரோஹிணி சாதாரணமாக இவ்விதம் நிலை தடுமாறுபவள் அல்ல. மேலிருந்து கீழே பள்ளத்தைப் பார்க்கும்போது தலை கிறுகிறுக்கும் வழக்கமும் அவளுக்கு இல்லை. ஆனால் அன்றைத் தினம் அது நடந்துவிட்டது. அவளுடைய உடல் நிலை தளர்ந்திருந்ததே அதற்குக் காரணம் போலும்.

லக்ஷ்மி படுத்த படுக்கையாகக் கிடக்க ஆரம்பித்தது முதல் ரோஹிணிக்குக் கொஞ்சமும் ஓய்வு கிடைக்கவில்லை. ஓழியாத வேலையால் அவளுடைய உடல் நிலையும் மனோதிடமும் குன்றிப் போயின. லக்ஷ்மிக்கு ஏற்பட்ட வியாதி நீங்கிக் குணம் ஏற்பட்டது. ஆயினும் அவள் முன்போல ஓடியாடி வேலை செய்ய முடியாத நிலைமையிலேதான் இருந்தாள். அவள் தன் உடம்பை அலட்டி வேலை செய்யக்கூடாது என்று அரசனும் கண்டிப்பாகத் திட்டம் செய்திருந்தான். அவள் இல்லாத குறையைத் தானே நேரில் நின்று அந்தக் காரியத்தை நிர்வகித்துப் போக்குவதாக உறுதி கூறியிருந்தான். ஆயினும் எவ்வளவு தான் மும்முடி நாய்க்கன் அடிக்கடி வந்து திருப்பணி வேலையைக் கவனித்துப் போனாலும், ரோஹிணியே நேரில் செய்து முடிக்க வேண்டிய காரியங்கள் எத்தனையோ இருந்தன?

இப்போது அவள் என்ன செய்ய முடியும்? வைத்தியர் கட்டளையை மீறிப் படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியாதே. அதைப் பிறர் அனுமதியார்கள். அதனால் அவள் தன் உடல் நலமாகிக் கும்பாபிஷேகத்துக்குப் போகும் நாளை எதிர்நோக்கி இன்பக்கனவுகள் கண்டு வருவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

## 14. யார் அடிமை?

"அடியாள் கேட்ட வரம் நிறைவேறிவிட்டது. திருப்பணி பூர்த்தியாகிவிட்டது. அதற்காகத் தாங்கள் அளித்த தவணையும் இன்றுடன் முடிவடைந்தது. இனி, அடியாள் தங்கள் அடிமை. அடியாளைப் பணித்துக்கொள்ள வேண்டும்."

இவ்விதம் அரசனைப் பார்த்து வேண்டிக்கொண்டாள் ரோஹிணி. பேச்சிலே சிறிது ஒடுக்கம் தோன்றினாலும் குரல் கணீர் என்று கம்பீரமாக ஒலித்தது. அது அவள் மனோதிடத்தை நன்றாக எடுத்துக் காட்டியது.

ஆனால் இதைக் கேட்டவுடனே மும்முடி நாய்க்கன் திடுக்கிட்டுத் திகைத்துவிட்டான். ரோஹிணியின் முகத்தை ஒரு தரம் ஏறிட்டுப் பார்த்து மறுபடியும் தலை குனிந்துகொண்டான். தலையை நிமிர்ந்து அவளைப் பார்க்க அவன் மனம் கூசியது; தைரியம் இல்லை. அவன் உள்ளத்தே பெரும்புயல் அடித்துக்கொண்டிருந்தது; அது கொஞ்சகாலமாகவே நடந்து வந்தது. தன் மனத்தை ஒரு விதமாகவும் கட்டுப்படுத்த முடியாமல் அவன் தவித்து நின்றான்.

அவன் ரோஹிணியிடம் கொண்டிருந்த மையல், ஆழ்ந்த காதல் அவனை வாட்டியது. காதலின் உண்மை ஸ்வரூபத்தை, தத்துவத்தை அறியாமல் அவன் அதுகாறும் மயங்கினான். இன்றுதான் அவன் உண்மையை உணர்ந்தான். கவி முற்றி யோகியாவதுபோலக் காதல் முற்றிப் பக்தியாக மாறுகிறது. இந்த உண்மையை அரசன் உணர்ந்தான். மும்முடி நாய்க்கன் ரோஹிணியிடம் கொண்டிருந்த காதல் இப்போது பக்தியாகப் பரிணமித்தது.

ரோஹிணியின் தோற்றமே அவனுக்கு அதை அறிவுறுத்தியது. அவளது உடல் முன்னிலும் மெலிவுற்று ஒடிந்து விழும் கொடி போலவே அவனுக்குத் தோற்றியது. சென்ற நாலைந்து வருஷகாலமாக அவள் பட்ட அவதிகளும் கஷ்டங்களும் அவள் உடலை வருத்தி அவற்றின் அடிச்சுவட்டை விட்டிருந்தன. ஆனால் அவள் உள்ளமோ குதூகலம் கொண்டு மிக்க களிப்புடன் கூத்தாடியதை முகப் பொலிவு எடுத்துக் காட்டியது. அவள் கண்களிலே அலாதியான ஓர் ஒளி வீசியது. அதைக் கண்டு அவன் பிரமித்தான். அந்த ஒளியே அவள் முகத்தை ஏறெடுத்துப் பார்க்க முடியாமல் அவன் கண்களைக் கூசச் செய்து உள்ளத்தை மயக்கியது.

சிறிது காலமாகவே, ரோஹிணியின் நடத்தையில் ஏற்பட்டிருந்த மாறுதலை மும்முடி நாய்க்கன் கவனித்து வந்தான். முன்னரெல்லாம் அவள் அரசனைத் தன் முழு மனத்துடன் வெறுத்து வந்தாள். அதன் உண்மை முழுதும் அரசனுக்குத் தெரியாது. எனினும் அதன் குறிப்பை அவன் அறிவான். தான் விரும்பிய அளவு அவள் தன் காதலைப் பிரதிபலித்துத் தன்னை நேசிக்கவில்லை என்ற அளவில் அவன் அறிந்திருந்தான். எனினும் காலம் செல்லச் செல்ல எல்லாம் சரியாகிவிடும் என்றே நினைத்து வாளாயிருந்தான் அவன். அதே போல ரோஹிணியின் மனம் மாறி, சென்ற இரண்டு மூன்றுமாசங்களாக அவள் தன்னை அன்பு நிறைந்த கண்களால் நோக்குவதைப் பார்த்து அவன் பல சமயங்களில் பூரிப்பு அடைந்திருக்கிறான்.

திருப்பணி வேலையிலே அரசன் தலையிடுவதை ரோஹிணி முதலில் விரும்பவில்லை; அதைச் சந்தேகப் பார்வை கொண்டே நோக்

கிறாள். அதைத் தடுக்க முடியாது போனவுடன் அவனை அவ்விதம் செய்யத் தூண்டியது எது என்பதை அறியவே ஆவல்கொண்டாள். அந்த வேலை சீக்கிரமே முடிந்து தான் ரோஹிணியை என்றைக்கு அடையலாம் என்ற வேட்கையாலா? அல்லது அவனது மனச்சாட்சியின் உறுத்தலால் அவன் முன்னர்ச் செய்யத் தவறிய கடமை இனிதே முடிவதற்காக உதவலாமே என்ற எண்ணத்தாலா? ஏன் இரண்டும் கலந்திருக்கலாகாது?

எவ்வாறுயினும் அவன் அடிக்கடி வந்து மேற்பார்வையிட்டுச் சென்றது அவளுக்கு ஒரு விதத்தில் ஆறுதலாகவே இருந்தது. அரசன், சேவகி என்ற வேற்றுமை இல்லாமல் ஒருவருடன் மற்றவர் நெருங்கிப் பழகும் நிலைமை ஏற்பட்டது. ஒருவர் உள்ளத்தை மற்றவர் அறிந்து கொள்ளும் சந்தர்ப்பமும் கிட்டியது. அரசனுடைய தூய மனத்தையும் பொங்கும் கருணையையும் உணர்ந்தாள் ரோஹிணி. அவை அவள் இருதயத்துக்கு ஒரு சாந்தியை அளித்தன. நிறை அமைதியுடன் விளங்கிய அவள் தன்னுடைய அந்த நிலைக்கு நாய்க்கனே காரணம் என்பதை உடனே அறிந்துகொள்ளவில்லை. எனினும், ஏதோ ஒரு வகையான பாசம் அவளை அரசன் பால் இழுத்துச் சென்றது.

அரசனே தனக்குக் கிட்டாத பாக்கியம் அந்த நர்த்தகிகளுக்கு வெகு எளிதில் கிடைத்ததைத் கண்டு மன மகிழ்ந்தான்; அவர்களிடம் மதிப்பும் கொண்டான். நாளடைவில் அந்த மதிப்பு பக்தியாகவே மாறியது. ஆம், எம்பெருமான் சேவையைக் காட்டிலும் அவன் அடியார்களுடைய சேவையையே பரந்தாமன் உவந்து ஏற்றுக் கொள்கிறான் என்ற எண்மை அவனுக்கு எளிதில் விளக்கியது.

இவ்விதம் தான் பக்திகொண்டு பூஜித்து வந்த ரோஹிணி இப்போது கும்பாபிஷேகம் முடிந்த தினத்தன்றைக்கே, தன் எதிரில் வந்து தன் அடிமைத் தனத்தை மேற்கொண்டதைக் காண மும்முடி நாய்க்கனது மனம் குமுறியது. 'என்ன? எம்பெருமான் திருவுள்ளத்துக்குப் பாத்திரமான இவர்களா அடிமை? ஒரு நாளும் இல்லை. நானே அடிமை!' இந்த எண்ணமே அவன் உள்ளத்தில் மேலிட்டு நின்றது.

மும்முடி நாய்க்கன் லக்ஷ்மியையும் ரோஹிணியையும் அடிமைகளாக விலைக்கு வாங்கியதே ஒரு விசித்திரம். அவ்விருவரையும் அடிமைகளாக வாங்கவேண்டும் என்று அவன் ஒரு காலத்திலும் நினைத்ததில்லை. அவர்கள் தங்களை வேறு இடத்தில் அடிமைகளாக விற்றுக்கொள்வதைத் தடுக்கவே அவன் விரும்பினான். அதற்காகவே அவர்களுக்குப் பணம் கொடுத்து உதவ முன்வந்தான்.

ஆனல் அவர்களோ பணத்தை அரசனிடமிருந்து எந்தவிதமான சீட்டும் இல்லாமல் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். தங்கள் நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஓர் அடிமைச் சீட்டு எழுதி வாங்கிக் கொண்ட பிறகே பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதைத் தீர்மானமாகக் கூறிவிட்டார்கள். அதனின்றும் அவர்களை

அரசனாலும் திருப்பமுடியவில்லை. அவர்களைத் திருப்தி செய்வதற்காகவே அவன் அந்த அடிமைச் சீட்டை எழுதி வாங்கிக் கொண்டான். அந்த ஓலையை அவன் அப்போதே கிழித்திருப்பான். ஆனால் பின்னால் கோயில் நிர்மாணம் முடிந்து அவர்கள் மறுபடியும் வந்து ஓலையைக் கேட்டால் என்ன செய்வது என்றே யோசித்தான்.

ஆனால் இப்போது?

ரோஹிணியைப் பார்த்தவுடனே மும்முடி நாய்க்கனுக்கு மெய் சிலிர்த்தது. அவளுடைய முகத்தைப் பார்க்க முடியாமல் அவன் கண்களை மூடிப் பகவானை நோக்கிக் கை கூப்பிச் சிறிது நேரம் அசைவற்று நின்றான். அவர்களுக்கு அருளிய வைராக்கியத்தைத் தனக்கும் அருளுமாறு எம்பெருமானை வேண்டினான்.

"ரோஹிணி, எம்பெருமான் கிருபையை இன்றே உணர்ந்தேன். எம்பெருமான் சேவைக்கெனவே அடிமைபூண்ட நீங்கள் வேறு மனிதனுக்கு அடிமைகள் ஆவதற்கு உரிமையற்றவர்கள். எனக்கு எழுதிக் கொடுத்த அடிமைச் சீட்டுக்குச் சேரவேண்டிய பொருள் முழுதும் செல்லாகிவிட்டது. சீட்டையும் இதோ கிழித்துவிட்டேன்" என்று கூறி அவன் அதைக் கொணர்ந்து இரண்டாகக் கிழித்து எறிந்துவிட்டான்.

அதனோடும் நிற்கவில்லை. "ரோஹிணி, மற்றொரு வேண்டுகோளும் உண்டு. கோயிலின் நிர்வாகத்துக்காக அடியேன் காணிக்கையாக இரண்டு கிராமங்களை பெற்றருளவேண்டும்" என்று வேண்டி நின்றான் மும்முடி நாய்க்கன். அவன் கண்கள் நீர் சொரிந்தன.

லக்ஷ்மி, ரோஹிணி இருவர் கண்களினின்றும் நீர் பெருக்கெடுத்தது. சபையிலே ஆழ்ந்த அமைதி நிலவியது.

---

# நன்றி

சுமார் அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த உண்மையான சரித்திர நிகழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டு பின்னியது இந்தக் கதை. இந் நிகழ்ச்சிக்கு ஆதாரமான சாஸனங்கள் உள்ளன. கதா பாத்திரர்கள் எல்லோரும் தென்னாட்டுச் சரித்திரத்திலே இடம் பெற்றவர்கள்.

இந்தக் கதை சென்ற வருஷம் அகில இந்திய ரேடியோவின் சென்னை நிலையத்திலிருந்து இரண்டு வாரங்களுக்கு ஒரு முறையாக ஏழு நாட்களில் தொடர் கதையாக ஒலிபரப்பப் பெற்றது. கூடவே 'கிராம ஊழியன்' பத்திரிகையிலும் வெளியிடப்பட்டு வந்தது.

இப்போது ஒன்றிரண்டு சிறு மாறுதல்களுடன் பதினான்கு அத்தியாயங்களாகப் பிரித்து வெளியிடப்படுகிறது.

— தி. நா. சுப்பிரமணியன்

# நாங்கள்

## ஜி. எம். ஸி. டிரக்குகள், ஹில்மன், ஹம்பர் கார்களுக்கு

டிஸ்டிரிபியூட்டர்கள்

|

எல்லாவிதமான கார்களுக்கும் டிரக்கு களுக்கும் வேண்டிய பாகங்களையும், சாமான்களையும் ஸ்டாக் செய்து

**கன்டிரோல் விலைக்கே விற்கிறோம்**

|

எல்லாவிதமான கார்களின் ரிப்பேர் களையும் ஏற்றுக்கொள்ளுகிறோம்

|

வேலை நிபுணர்களின் மேற்பார்வையில் நடக்கிறது

|

எப்பொழுதும் உங்களுக்கு உதவி செய்யத் தயாராய் இருக்கிறோம்

●

## ராணி (மதராஸ்) லிமிடெட்

மவுன்ட் ரோடு :: சென்னை

தந்தி : "ஆட்டோ வொர்க்ஸ்" போன் : "3595"

கிளை ஆபீஸ்கள் :—

பெங்களூர் சிடி — திருச்சூர்